# CONTOH KARANGAN KESUSASTERAAN TAMIL SPM (NOVEL)

# எஸ்.பி. எம். தமிழ் இலக்கியம்

# நாவல்

# மாதிரிக் கட்டுரைகள்





'அவனருளால்'
திருமதி புஷ்பவள்ளி சத்திவேல்
**SMK TOK PERDANA, PERAK**

# அன்புக் காணிக்கை...

## ஊனும் உயிரும் கொடுத்து
## அறிவும் பண்பும் ஊட்டிய
## என் பெற்றோருக்கு

**இலக்கிய நறுமணம் கமழச்
செய்து கொண்டிருக்கும் என் இனிய
மாணவச் செல்வங்களுக்கு இந்நூல்
சிறிதளவாவது துணைபுரியுமென
நம்புகிறேன்.**



**‘அவனருளால்’**

**தமிழாசிரியை
திருமதி புஷ்பவள்ளி சத்திவேல்**


*இலக்கியம் பயின்றால் இளகிடும் உள்ளம்*
*இளமையின் துடிப்பிலும் இதம்துட கொள்ளும்*
*கலக்கிடும் வன்முறைக் கலகங்கள் மாறிக்*
*காய்மனம் கனிவுறும் ! காயங்கள் ஆறும்!*

- **கவிஞர் செ.சீனி நைனா முகம்மது**

# உள்ளடக்கம்

| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| 1. | குழந்தைவேலின் பண்புநலன்கள் - மாதிரி 1 | 4 |
| 2. | குழந்தைவேலின் பண்புநலன்கள் - மாதிரி 2 | 6 |
| 3. | தானப்பனின் பண்புநலன்கள் - மாதிரி 1 | 8 |
| 4. | தானப்பனின் பண்புநலன்கள் - மாதிரி 2 | 10 |
| 5. | சுடர்விழியின் பண்புநலன்கள் | 12 |
| 6. | முருகய்யாவின் பண்புநலன்கள் | 14 |
| 7. | பூங்கொடியின் பண்புநலன்கள் | 16 |
| 8. | மீனாட்சி அம்மாளின் பண்புநலன்கள் | 18 |
| 9. | குழந்தைவேல் தந்தையின் பண்புநலன்கள் | 20 |
| 10. | சித்தியின் பண்புநலன்கள் | 22 |
| 11. | பூங்கொடி தந்தையின் பண்புநலன்கள் | 23 |
| 12. | கனகத்தின் பண்புநலன்கள் | 24 |
| 13. | குழந்தைவேலின் பாத்திரப்படைப்பு | 25 |
| 14. | தானப்பனின் பாத்திரப்படைப்பு | 27 |
| 15. | சுடர்விழியின் பாத்திரப்படைப்பு | 29 |
| 16. | முருகய்யாவின் பாத்திரப்படைப்பு | 31 |
| 17. | பூங்கொடியின் பாத்திரப்படைப்பு | 33 |
| 18. | மீனாட்சி அம்மாளின் பாத்திரப்படைப்பு | 35 |
| 19. | குழந்தைவேல் - தானப்பன் ஒப்பீடு | 37 |
| 20. | வாடா மலர் நாவலின் துணைகருப்பொருள் | 39 |
| 21. | வாடா மலர் நாவலின் படிப்பினைகள்/ வாழ்வியல் கூறுகள் | 41 |
| 22. | வாடா மலர் - மொழிநடை | 43 |
| 23. | வாடா மலர் - உத்திமுறை | 44 |
| 24. | வாடா மலர் - கதைப்பின்னல் | 45 |
| 25. | வாடா மலர் - இடப் பின்னணி | 47 |
| 26. | வாடா மலர் - சமுதாயப் பின்னணி | 48 |
| 27. | வாடா மலர் - உனக்குள் ஏற்பட்ட தாக்கம் | 49 |
| 28. | வாடா மலர் - நீ பெற்ற படிப்பினை | 50 |
| 29. | தானப்பன் - உனக்குள் ஏற்பட்ட தாக்கம் | 51 |
| 30. | குழந்தைவேல் - நீ பெற்ற படிப்பினை | 52 |
| 31. | குழந்தைவேல் இன்றைய இளைஞர்களுக்கு வழிகாட்டி | 53 |
| 32. | சித்தியின் கொடுமைகள் | 55 |
| 33. | குழந்தைவேல் தானப்பன் மீது கொண்டிருந்த நட்பின் ஆழம் | 56 |
| 34. | வாடாமலர் - பெண் கதைப்பாத்திரங்கள் | 57 |

## 1. குழந்தைவேலின் பண்புநலன்களை விளக்கி எழுதுக. (20 புள்ளி) - மாதிரி 1




இலக்கிய உலகில் மின்னும் விண்மீனாகத் திகழ்பவர் டாக்டர் மு.வரதராசனார் ஆவார். அவரது கைவண்ணத்தில் உருவானதே வாடா மாலர் நாவலாகும். நல்வாழ்விற்கு அன்பே ஆதாரம் என்ற கருப்பொருளை கொண்டு இந்நாவல் படைக்கப்பட்டுள்ளது. இச்சிறந்த நாவலில் முதன்மை கதைப்பாத்திரமான குழந்தைவேல் நற்பண்புகளின் உறைவிடமாகத் திகழ்கிறான்.

அவ்வகையில் குழந்தைவேல், **உதவும் மனப்பான்மை** கொண்டவனாகத் திகழ்கிறான். சான்றாக, ஒரு நாள் குழந்தைவேல் தானப்பனுக்குத் துணையாகக் கடைக்குச் சென்று கத்தரிக்காய்களை வாங்கிக் கொண்டு தானப்பனை அவனது வீட்டிற்கு அனுப்பிவிட்டு வருகிறான். அரை மணிநேரம் கழித்து, தானப்பன் கண்கள் கலங்கியபடி குழந்தைவேலின் வீட்டின் முன் நிற்கிறான். விசாரித்ததில், தான் வாங்கி வந்த காய்கள் வேண்டாமென்றும் வேறு காய்கள் மாற்றிக் கொண்டு வருமும் சித்தி கோபப்பட்டு அனுப்பியதையும் கடைக்காரர் காயை எடுத்துக் கொண்டு காசு தர மறுப்பதையும் அவன் அழுது கொண்டே குழந்தைவேலிடம் விளக்குகிறான். இக்கட்டான சூழ்நிலையில் மாட்டிக்கொண்டு தவிக்கும் தன் நண்பனுக்கு உதவி செய்ய குழந்தைவேல் நினைக்கிறான். இதனை உடனே தன் தாயிடம் கூறி அக்காய்களை எடுத்துக் கொண்டு மூன்றணாவைத் தானப்பனுக்குக் கொடுத்து உதவுகிறான். அவ்வகையில் **இச்சம்பவம் குழந்தைவேல் உதவும் மனப்பான்மை கொண்டவன் என்பதை மெய்ப்பிக்கிறது.**

மேலும். குழந்தைவேல் **நட்பைப் போற்றுபவனாக** விளங்குகிறான். உதாரணமாக, தன் பால்ய நண்பனான தானப்பன் சித்தியின் கொடுமை தாங்காது ஊரைவிட்டு ஓடிய பொழுது குழந்தைவேல் அவனின் பிரிவு துன்பத்தால் வாடுகிறான். சில வருடங்கள் கழித்து, தானப்பனிடமிருந்து கிடைத்த கடிதத்தின் மூலம் குழந்தைவேல் அவன் சென்னையில் ஒரு புலால் உணவுக்கடையில் வேலை செய்வதாக அறிகிறான். குழந்தைவேலும் சென்னையில் அமைந்துள்ள ஒரு கல்லூரியில் தன் மேற்கல்வியைத் தொடர்கிறான். அங்குத் தன் நண்பனைத் தேடும் முயற்சியில், குழந்தைவேல் மரக்கறி உண்பவனாக இருந்தாலும் ஒவ்வொரு புலால் உணவுக்கடையிலும் ஏறி இறங்குகிறான். இவ்வளவு பெரிய சென்னையில் முகவரி இல்லாமல் ஒருவனைத் தேடிக் கண்டுபிடிக்க நினைப்பது முட்டாள்தனம் எனக் குழந்தைவேலை அவனது கல்லூரி நண்பர்கள் எள்ளி நகையாடினாலும் தன் தேடும் முயற்சியை ஒருபோதும் கைவிடவில்லை. தனது பால்ய நண்பனைத் தேடிக் கண்டுப்பிடித்தே தீர வேண்டுமெனக் கங்கணம் கட்டுகிறான். **ஆகவே, குழந்தைவேலின் நட்பைப் போற்றும் திறம் இதன் மூலம் புலப்படுகிறது.**

இதுமட்டுமின்றி, குழந்தைவேல் **பெற்றோரை மதித்துப் போற்றுபவனாகவும் மிளிர்கிறான்.** அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பதற்கொப்ப வாழ்க்கையின் எச்சூழ்நிலையிலும் தன் பெற்றோரின் மனம் நோகாமல் நடந்து கொள்கிறான் குழந்தைவேல். சான்றாக, பி.ஏ தேர்வு முடிந்த


பிறகு தான் மேலும் எம்.ஏ. படிக்க வேண்டும் எனத் தன் தாயிடம் வேண்டுகிறான். ஆனால், குழந்தைவேலின் தாய் அவன் அவ்வயதில் திருமணம் செய்து கொள்ள வேண்டியது அவசியம் என எடுத்துரைக்கிறார். குழந்தைவேலும் தன் பெற்றோரின் விருப்பத்திற்கு எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்காமல் அனைத்துத் திருமண ஏற்பாடுகளையும் தன் பெற்றோரின் விருப்பப்படியே விட்டுவிடுகிறான். மேலும், சுயத்தொழில் செய்யுமாறு வலியுறுத்திய தன் தந்தையின் சொல்லுக்குச் செவிசாய்த்து அவர் பிரித்துக் கொடுத்த சிமெண்ட் வியாபாரத்தையும் முறையாகக் கவனித்துக் கொள்கிறான் **எனவே, வாழ்க்கைத்துணை, தொழில் போன்றவற்றை நிர்ணயம் செய்வதில் தன் பெற்றோரின் விருப்பத்திற்கும் ஆலோசனைக்கும் இணங்கி நடப்பதன்வழி குழந்தைவேல் பெற்றோரை மதித்து நடப்பவன் என்பது தெளிவாகிறது.**

தொடர்ந்து, குழந்தைவேல் **கல்வியில் அக்கறை** கொண்டவனாகவும் திகழ்கிறான். எடுத்துக்காட்டாக, குழந்தைவேல் பள்ளிப்படிப்பை முடித்துச் சென்னையிலுள்ள ஒரு கல்லூரியில் தன் <u>மேற்கல்வியைத் தொடர்கிறான்</u>. அங்குக் கருணாகரன் எனும் ஒரு மாணவனுடன் ஒரே விடுதி அறையில் தங்க நேரிடுகிறது. கருணாகரன் புகைப்பிடித்தல், சீட்டாடுதல், ஊரைச் சுற்றி திரிதல் எனப் பலத் தீயப் பழக்கங்களைக் கொண்டிருக்கிறான். குழந்தைவேலுக்கும் அப்பழக்கங்களைக் கற்றுத்தர அவன் முற்பட்டாலும் குழந்தை உடன்படமறுக்கிறான். கூடாநட்பை விடுத்து, தன் பக்கத்து அறையிலுள்ள நல்ல நண்பனான பழனிச்சாமியுடனும் அவனது நண்பர்களுடனும் பழக்கம் கொண்டு <u>நன்மாணாக்கனாகத்</u> திகழ்கிறான். <u>கல்வியைக் கண்ணுங்கருத்துமாகப் பயின்றதால்</u> பி.ஏ தேர்வில் முதல் வகுப்பில் தேறுகிறான். இதனால் கல்லூரி முதல்வரிடமிருந்து பாராட்டுக் கடிதமும் பெறுகிறான். கல்வியை அதோடு நிறுத்தாமல் <u>முதுகலை படிப்பைத்</u> தொடரவும் விரும்புகிறான். **எனவே, குழந்தைவேல் கல்வியில் அக்கறை கொண்டவன் என்பது இதன்வழி உறுதியாகிறது.**

இதைத்தவிர்த்து, குழந்தைவேல் **பொறுமை குணம்** கொண்டவனாகவும் இந்நாவலில் வலம் வருகிறான். இல்லறவாழ்க்கை குழந்தைவேலுக்குச் சில சிக்கல்களை ஏற்படுத்துகிறது. குழந்தைவேலின் மனைவியான பூங்கொடி ஆணவம், கோபம், பிடிவாதம், பொறுப்பின்மை போன்ற குணங்கள் வாய்த்தவளாக உள்ளாள். உதாரணமாக, பூங்கொடி தனிக்குடித்தனம் வேண்டுமெனப் பிடிவாதம் பிடிக்கிறாள். தன் தாய் பூங்கொடியை அன்புடன் கவனித்துக் கொண்டாலும் அவளுக்கு தன் தாயின் அன்பு புரியவில்லையே என குழந்தைவேல் மன வேதனை அடைந்தாலும் பொறுமை காக்கிறான். அவளின் விருப்பப்படியே இருவரும் தனிக்குடித்தனம் செல்கின்றனர். அத்துடன், தானப்பனின் திருமணத்திற்குப் பிறகு, குழந்தைவேல் தன் நண்பனுக்காக வீட்டில் விருந்து வைக்க விரும்புகிறான். அவன் பலமுறை பூங்கொடியிடம் இதனைப் பற்றி மனமிறங்கி வந்து கேட்டும் அவள் ஒத்துழைக்க மறுக்கிறாள். அதற்கு மாறாக, மனம் புண்படும்படி கடுமையாகப் பேசுகிறாள். ஆனால், குழந்தைவேல் எச்சூழ்நிலையிலும் தன் பொறுமையை இழக்கவில்லை; அவளை வெறுத்து ஒதுக்கவில்லை. இறுதியாக, தன் தந்தைக்கு ஏற்பட்ட துன்பத்திற்குப் பிறகு, பூங்கொடியின் போக்கில் மாற்றம் ஏற்பட்டு வாழ்க்கையில் வசந்தம் வீசுகிறது. **ஆகவே, குழந்தைவேல் தனது இல்லற வாழ்க்கையில் பல போராட்டங்களைச் சந்திக்க நேர்ந்தாலும் தம்பதியினரிடையே பிரிவு நேராமல் இனிமை கைக்கூடியதற்குக் காரணம் அவனது பொறுமை குணமே என்பது வெள்ளிடைமலை.**

ஆகவே, குடும்பம், நட்பு, கல்வி, தொழில், இல்லறவாழ்க்கை என அனைத்து வகையிலும் ஓர் இளைஞனுக்கு இருக்க வேண்டிய சிறந்த பண்புகளைக் கொண்டவனாகக் குழந்தைவேல் திகழ்வது உள்ளங்கை நெல்லிக்கனி. இதனாலேயே அவனது வாழ்க்கை அதிக துன்பங்களும் போராட்டங்களும் இன்றி அமைதியான நீரோடையாக விளங்கியது. இன்றைய இளைஞர்கள் குழந்தைவேலை நல்ல முன்னுதாரணமாகக் கொண்டார்களேயானால் வாழ்க்கையில் சிறந்த நிலையை அடையலாம் என்பது திண்ணம்.

**2. குழந்தைவேலின் பண்புநலன்களை விளக்கி எழுதுக. (20 புள்ளி) - மாதிரி 2**




இலக்கிய அன்னைக்கு அருந்தொண்டு ஆற்றியவர் டாக்டர் மு.வரதராசன். சமுதாயத்தைப் பண்படுத்தும் உன்னத நோக்கோடு உருவானதே இவரது வாடா மலர் நாவலாகும். நல்வாழ்விற்கு அன்பே ஆதாரம் என்ற கருப்பொருளை கொண்டு இந்நாவல் எழுந்துள்ளது. இதில் முதன்மை கதைப்பாத்திரமாகத் திகழும் குழந்தைவேலிடம் பல போற்றத்தக்க பண்புகளைக் காண இயலுகிறது.

அவ்வகையில், குழந்தைவேல் **விளையாட்டில் ஆர்வம்** கொண்டவனாக விளங்குகிறான். எடுத்துக்காட்டாக, சிறுவயதில் பள்ளி விடுமுறை என்றாலே குழந்தைவேலுக்குக் குதூகலம் ஆரம்பித்துவிடுகிறது. தன் உயிர் நண்பனான தானப்பனுடனும் பிற நண்பர்களுடனும் சேர்ந்து புல்லடித்தல், பம்பரம், கோலி, காற்றாடி, கதை கூறுதல், கபடி போன்ற பல வகையான விளையாட்டுகளை மகிழ்ச்சியோடு விளையாடுகிறான். இவற்றிலும் குறிப்பாகக் காற்றாடி, கதைகூறுதல், கபடி போன்ற விளையாட்டுகளில் தானப்பனைவிட சிறந்து விளங்குகிறான். மேலும், ஆடி மாதத்தில் அவன் மதியம் உணவும் உண்ண மறந்து பகல் முழுவதும் காற்றாடி விளையாடுவதில் மூழ்கிக் கிடக்கிறான். குழந்தைவேலின் தாய் அவனை உரக்க அழைத்துச் சாப்பிட சொல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. **ஆகவே, குழந்தைவேல் விளையாட்டில் ஆர்வம் கொண்டவன் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி**.

மேலும், குழந்தைவேல் **நட்பைப் போற்றுபவனாகத்** திகழ்கிறான். சான்றாக, தன் அண்டைவீட்டில் வசிக்கும் தானப்பனுடன் நகமும் சதையும் போல் பழகுவதோடு அவன் மீது அன்பும் அக்கறையும் கொள்கிறான். தாயை இழந்த தானப்பன் தன் சித்தியின் வருகைக்குப் பிறகு சொல்லொணா துன்பங்களை அனுபவிப்பதைக் கண்டு குழந்தைவேல் மனம் வருந்துவதோடு அதனைக் களையவும் முற்படுகிறான். ஒருநாள், தானப்பன் தன் வீட்டிலேயே ஓர் அறையில் பூட்டிவைக்கப்பட்டுக் காலையிலிருந்து உணவும் தண்ணீரும் கொடுக்கப்படாமல் இருப்பதைச் சுடர்விழி கூறியதாக அவனது தாய் கூறுகிறார். இதைக் கேட்டுக் குழந்தைவேல் அதிர்ச்சியும் வருத்தமும் கொள்கிறான். உடனே தானப்பனின் வீட்டிற்குச் சென்று அவனை வீட்டுச் சிறையிலிருந்து விடுவித்துத் தங்கள் வீட்டுக்கு அழைத்து வந்துவிடலாமெனத் தன் பெற்றோரை வற்புறுத்துகிறான். குழந்தைவேலின் தந்தை அவனை அமைதிப்படுத்துகிறார். **எனவே, இச்சம்பவம் குழந்தைவேல் நட்பைப் போற்றும் திறம் கொண்டவன் என்பதை உறுதிபடுத்துகிறது.**

தொடர்ந்து, குழந்தைவேல் **ஒழுக்கத்தைப் போற்றுபவனாக** வலம் வருகிறான். உதாரணமாக, சென்னையிலுள்ள ஒரு கல்லூரியில் தன் <u>மேற்கல்வியைத் தொடர்கிறான் குழந்தைவேல்</u>. அங்குக் கருணாகரன் எனும் மாணவனுடன் ஒரே விடுதி அறையில் தங்கும் நிலை ஏற்படுகிறது. கருணாகரனைச் சந்தித்த முதல் நாளே, அவன் சிகரெட் பெட்டியை எடுத்துத் தான் ஒன்று எடுத்துக் கொண்டு குழந்தைவேலிடம் நீட்டியபோது, தனக்குப் பழக்கமில்லை என மறுக்கிறான். சிகரெட் பிடிக்க அவன் கற்றுக் கொடுக்க முயன்றபோதும் குழந்தைவேல் உறுதியாக மறுக்கிறான். இதுமட்டுமல்லாது, தானப்பனை ஒரு நாள் சந்திக்கச் சென்ற இடத்தில் அவன் வீட்டில் இல்லை எனத் தெரிந்ததும்


திரும்பிப் போக குழந்தைவேல் முயன்ற பொழுது, தானப்பனின் மனைவி கனகம் அவனை உள்ளே அழைத்துத் தன்னுடன் பேசிக் கொண்டிருக்கும்படி நெருங்கி வற்புறுத்துகிறாள். அது ஒழுங்கீனச் செயல் என்பதால் குழந்தைவேல் உடனே அங்கிருந்து கிளம்புகிறான். தானப்பன் வீட்டில் இல்லாத நிலையில் அவனுடைய மனைவி கவர்ச்சியாக உடையுடுத்திக் கொண்டு வச்சிரநாதன் என்பவனோடு வெளியே செல்வதையும் முறையற்றதாகக் கருதுகிறான். **ஆகவே, ஒழுக்கம் என்ற ஆலமரம் குழந்தைவேலின் மனத்தில் ஆழமாக வேர்விட்டிருப்பதை இச்சம்பவங்கள் பறைசாற்றுகின்றன.**

இதனைத்தவிர்த்து, குழந்தைவேல் **இரக்க குணம் வாய்ந்தவனாகவும்** இருக்கிறான். எடுத்துக்காட்டாக, தன் பள்ளி விடுமுறையைப் பாட்டி வீட்டில் கழித்துவிட்டுத் திரும்பிய குழந்தைவேல் தன் அருமை நண்பன் தானப்பனை ஆவலுடன் சந்திக்கச் செல்கிறான். அங்குச் சித்தி எனும் புது உறவு அவனைக் கடுஞ்சொற்களால் தீட்டி அனுப்பினாலும் மீண்டும் அவனது வீட்டினுள் எட்டிப் பார்க்கிறான். அங்குத் தானப்பனின் தங்கையான சுடர்விழி கவனிப்பாரின்றி வெறுந்தரையில் படுத்துறங்குவதைக் கண்டு இரக்கம் கொள்கிறான். சொந்த தாய் இருந்தால் இச்சிறு குழந்தைக்கு இந்நிலை ஏற்பட்டிருக்காதே என மனம் கலங்குகிறான். இதைப்போலவே, சுடர்விழி திருமணம் ஆகி குழந்தை பெற்றிருந்த சமயத்தில் குழந்தைவேலின் தாய் அவளைக் கவனித்துக் கொள்ளச் செல்கிறார். இருப்பினும், வீட்டில் சமைக்க ஆளில்லாத காரணத்தால் கணவர் சிரமம்படுகிறார் என்பதை அறிந்து அவனது தாய் மீண்டும் வீட்டிற்குத் திரும்ப முடிவெடுக்கிறார். ஆனால், குழந்தை பெற்றுள்ள சுடர்விழிக்கு உதவி செய்ய வேறு யாரும் இல்லாத காரணத்தால் அவள் மீது இரக்கம் கொண்டு இன்னும் இரண்டு மூன்று வாரங்கள் கவனித்துக் கொள்ளுமாறு தன் தாயிடம் வேண்டுகிறான். **இதன்மூலம் குழந்தைவேல் இரக்க குணம் மிகுந்தவன் என்பது தெளிவாகிறது**.

இதுமட்டுமல்லாது, **கொள்கையில் உறுதி கொண்டவனாகவும்** குழந்தைவேல் விளங்குகிறான். சான்றாக, தன் தந்தையின் மறைவிற்குப் பிறகு ஊர் திரும்பிய தானப்பன் பணம், புகழ், செல்வாக்குப் பெறுவதில் தீவிரமாக ஈடுபடுகிறான். அரசியல் தேர்தலில் நிற்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி நகர்மன்றத்தில் உறுப்பினராகிவிட்டால் தனது கடை வியாபாரத்திற்கு இடையூறு இல்லாமல் பார்த்துக் கொள்ள முடியுமெனக் கருதுகிறான். தானப்பனின் இம்முடிவைக் குழந்தைவேல் ஏற்றுக்கொள்ளவில்லை. தேர்தலில் ஓட்டுப் போடுவதோடு கடமையை முடித்துக் கொள்ள வேண்டுமெனவும் அதற்கு மேல் ஈடுபடக்கூடாது எனவும் தானப்பனிடம் கூறுகிறான். தேர்தலுக்குப் பத்து நாள்கள் இருக்கும் வேளையில் தனக்காக ஒரு நாளில் ஒரு மணி நேரமாவது மக்களிடம் பிரசாரம் செய்யும்படி தானப்பன் வேண்டுக்கிறான். ஆனால், குழந்தைவேல் தான் தானப்பனுக்கு ஓட்டை மட்டும் போடுவதாகவும் மற்றத் தேர்தல் வேலைகளுக்குத் தன்னை இழுக்க வேண்டாமென உறுதியாக மறுக்கிறான். **ஆகவே, நெருங்கிய நட்பாக இருந்தாலும் அரசியல் ஈடுபாடு வேண்டாமென்ற தனது முடிவில் சற்றும் மாறாத குழந்தைவேல் கொள்கையில் உறுதி கொண்டவன் என்பதை நாம் அறிய முடிகிறது.**

ஆகவே, குழந்தைவேல் என்ற கதைப்பாத்திரத்தின் பண்புநலன்கள் சமுதாயத்திற்குப் பல செய்திகளை உணர்த்தும் வண்ணம் அமைந்திருப்பதை நாம் அறியலாம். இன்றைய இளைஞர்கள் இப்பண்புகளைத் தங்கள் வாழ்க்கை நெறியாகக் கொண்டு செயல்பட்டால் மேன்மையான சமுதாயம் உருவாகும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

**3. தானப்பனின் பண்புநலன்களை விளக்கி எழுதுக. (20 புள்ளி) - மாதிரி 1**




நாவல் உலகின் முடிசூடா மன்னனாக விளங்குபவர் டாக்டர் மு. வரதராசன். இவரது இலக்கிய உளியால் செதுக்கப்பட்ட சிற்பமே வாடாமலர் நாவலாகும். இந்நாவல் நல்வாழ்விற்கு அன்பே ஆதாரம் என்ற கருப்பொருளை ஒட்டிய சமுதாய நாவலாகத் திகழ்கிறது. இதில் துணைக்கதைப்பாத்திரமாக வலம் வரும் தானப்பனிடம் பல பண்புநலன்களைக் காண இயலுகிறது.

அவ்வகையில், தானப்பன் **நட்பைப் போற்றுபவனாகத்** திகழ்கிறான். உதாரணமாக, சித்தியின் கொடுமை தாளாது ஊரைவிட்டு ஓடிய தானப்பன், குழந்தைவேலின் நட்பை மறக்காது அவனுக்குக் கடிதம் எழுதுகிறான். இரயில் ஏறி சென்னைக்குத் தான் வந்து சேர்ந்த முதல் எவ்வாறு புலால் உணவுக்கடையில் தனது பணி ஆரம்பமானது என எல்லாத் தகவல்களையும் பரிமாறுகிறான். தன்னை உலகம் மதித்துப் போற்றும்வரையில் தான் ஊர் திரும்பப் போவதில்லை எனவும் வெளிப்படையாகக் கூறுகிறான். மேலும், தனது திருமண விருந்தில் குழந்தைவேலைத் தன் மனைவிக்கு அறிமுகம் செய்து வைக்கும் பொழுது அவனைப்பற்றிப் பெருமையாகப் பேசுகிறான். தனக்கு இவ்வுலகில் வாழ வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டதற்குக் காரணம் தனது தங்கை சுடர்விழியும் நண்பன் குழந்தைவேலும்தான் எனக் கூறுகிறான். “இவனைவிட நண்பன் எனக்கு இவ்வுலகத்தில் இல்லை” என உளமாற அறிமுகப்படுத்துகிறான். திருமண விருந்திற்குப் பிறகு குழந்தைவேலிடம் பேசும் பொழுது தங்கள் நட்பு இருபது ஆண்டுகளுக்கு முன் இருந்தது போலவே இருக்க வேண்டுமெனவும் கூறுகிறான். **எனவே, காலம் மாறினாலும் கோலம் சிதைந்தாலும் கொண்ட நட்பு மாறாது என்பதை உணர்த்தும் இச்சம்பவங்கள் தானப்பன் நட்பைப் போற்றுபவன் என்பதை மெய்ப்பிக்கின்றன.**

இதனைத் தவிர்த்து, தானப்பன் **சுயக்காலில் நிற்பவனாகவும்** விளங்குகிறான். எடுத்துக்காட்டாக, சென்னையில் உள்ள திருவல்லிக்கேணியில் தானப்பனைத் தேடிப் பார்க்கச் செல்லும் குழந்தைவேல் அவனை இரயில் நிலையத்தில் சந்திக்கிறான். பல ஆண்டுகள் கழித்து நேரில் சந்திக்கும் இருவரும் மனம்விட்டுப் பேசுகின்றனர். புலால் உணவக முதலாளி தனக்குத் துரோகம் செய்து விட்டதாகவும் தனக்குச் சேர வேண்டிய பங்கைக் கொடுக்காமல் வேலையிலிருந்து நீக்கிவிட்டதாகவும் குறிப்பிடுகிறான் தானப்பன். வேலையில்லாமல் இருக்கும் தானப்பன் சாப்பாட்டுக்கு என்ன செய்வான் என நினைத்த குழந்தைவேல் அவனுக்குப் பணம் கொடுத்து உதவ முன்வருகிறான். ஆனால், தானப்பனோ குழந்தைவேல் தரும் பணம் இரண்டு மூன்று நாள்களுக்கு மட்டுமே வருமென்றும் அதற்குப் பிறகு யார் தருவார் என்ற கேள்வியை முன்வைக்கிறான். தன் கையே தனக்குதவி எனக் கூறி தன்னால் இச்சூழலைச் சமாளித்துக் கொள்ள முடியுமென்று குழந்தைவேலின் பணத்தை வாங்க மறுக்கிறான். **எனவே, பிறரை எதிர்பார்க்காமல் வாழ முற்படும் தானப்பன் சுயக்காலில் நிற்பவன் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.**


மேலும், தானப்பன் **உடன்பிறப்புகளின்மீது பாசம் கொண்டவனாகவும்** இருக்கிறான். சான்றாக, தன் தந்தை மறுமணம் செய்து கொண்ட பிறகு சித்தியின் கொடுமைகளுக்குத் தானப்பனும் அவன் தங்கை சுடர்விழியும் ஆளாகின்றனர். ஒரு சமயம் வீட்டிற்கு வந்த பெண்கள் சுடர்விழியைப் பற்றி விசாரிக்கையில், அவள் சம்பளமில்லாத வேலைக்காரப் பெண் எனத் தன் எதிரிலேயே தன் தங்கையைப் பற்றிச் சித்தி சொல்வதைக் கேட்டுத் தானப்பன் கோபம் கொள்கிறான். இதைப் பற்றிக் குழந்தைவேலின் தாயிடமும் முறையிடுகிறான். மற்றொரு சம்பவத்தில், திருமணம் முடித்த சுடர்விழிக்கு ஆறாம் மாதம் என்பதால் அவளது கணவர் முருகய்யா தாய்வீட்டிலே விட்டுச் செல்கிறார். சுடர்விழி ஓர் அழகான ஆண் குழந்தையைப் பெற்றெடுக்கிறாள். மூன்றாம் மாதமே சுடர்விழியையும் குழந்தையையும் அழைத்துச் செல்ல முருகய்யா வந்த பொழுது இன்னும் இரண்டு மாதம் தன்னோடு இருந்து செல்லும்படி தானப்பன் வற்புறுத்துகிறான். தாய்மாமன் என்ற முறையில் குழந்தை செங்கதிருக்குப் பொன் அரைஞானும், பொன் காப்பும் செய்து அணிவிக்கிறான். **இதன் மூலம் தானப்பன் உடன்பிறப்புகளின்மீது பாசம் கொண்டவன் என்பதை அறிய முடிகிறது.**

இதுமட்டுமின்றி, **வேகத்துடனும் சுறுசுறுப்புடனும் செயல்படுபவனாகத்** தானப்பன் விளங்குகிறான். உதாரணமாக, தேர்தலில் வெற்றிப் பெற்ற பிறகு தானப்பன் குழந்தைவேலைச் சந்திக்கும் பொழுது தான் புலால் உணவுக்கடையைத் திறக்கவிருப்பதாகத் தெரிவிக்கிறான். அவ்வுணவுக் கடைக்கு 'பாம்பே தில்குஷ் ஓட்டல்' எனப் பெயரிடப்பட்டிருப்பதையும் கூறுகிறான். சொல்வீரனாக மட்டுமிருக்காது அவன் விரைவிலேயே உணவுக்கடையைத் தொடங்கிவிடுகிறான். கடையை விருத்தி செய்ய கால நேரம் பார்க்காமல் பம்பரமாய்ச் சுழல்கிறான். ஆட்களுக்கு நல்ல பயிற்சி தந்து தேர்ச்சிப் பெறச் செய்கிறான். தானப்பனின் வியாபார உத்திகளினால் இரண்டு வாரங்களுக்குள் ஊரிலேயே மற்ற எல்லா உணவுக்கடைகளையும்விட அது பெரிதாகப் பெயர் பெற்றுவிடுகிறது. எந்நேரமும் அவனது உணவுக்கடையில் மக்கள் கூட்டம் நிறைந்திருக்கிறது. இதனால் நல்ல வருமானம் ஈட்டி தன் நிலையை உயர்த்திக் கொள்கிறான். எனவே, சித்தியின் கொடுமை, ஊரைவிட்டு ஓடுதல், முதலாளியின் துரோகம், சிறைவாசம் எனப் பற்பல போராட்டங்களையும் தோல்விகளையும் சந்தித்திருந்தாலும் **வாழ்க்கையில் உயர வேண்டும் எனத் தானப்பன் கொண்ட இலட்சிய வேட்கை வெற்றிப் பெற்றதற்கு அவனது வேகமும் சுறுசுறுப்புமே காரணம் என்பது தெளிவான உண்மை.**

தொடர்ந்து, தானப்பன் **முரட்டுக் குணம் கொண்டவனாகவும்** வலம் வருகிறான். வாழ்க்கையில் இளமைக் காலம்தொட்டுப் போராட்டம் நிறைந்த பாதையைக் கடந்து வந்ததால் காலம் அவனை முரட்டுக் குணம் வாய்ந்தவனாக மாற்றிவிடுகிறது. சான்றாக, ஊரைவிட்டு ஓடிச் சென்ற தானப்பன் தந்தையின் மறைவைப் பற்றிக் குழந்தைவேல் தந்தி அனுப்பியவுடன் ஊர் திரும்புகிறான். தந்தைக்குச் செய்ய வேண்டிய இறுதிக் காரியங்களை அனைத்தையும் முறையாகச் செய்து முடித்தவன் பின்னர் தந்தையின் நகைக்கடைக்குச் செல்கிறான். கடப்பாரையைக் கொண்டு கடையின் பூட்டை உடைத்துப் புதிய பூட்டைப் போடுகிறான். இதை அறிந்த சித்தியின் தந்தை ஆள் சேர்த்து நியாயம் கேட்க, இனிமேல் அது தன் கடை என்றும் அதைப் பற்றிக் கேட்க யாருக்கும் உரிமை இல்லையென்றும் அங்கே யாரேனும் ஏதாவது செய்தால் உதை விழும் எனவும் கடுமையாக எச்சரிக்கிறான். தானப்பனின் முரட்டுக்குணத்தைக் கண்டு பயந்து அங்கிருந்தவர்கள் எதையும் பேசாமல் போகின்றனர். **எனவே, இச்சம்பவம் தானப்பன் முரட்டுக் குணம் கொண்டவன் என்பதை வெளிப்படையாகக் காட்டுகிறது.**

ஆகவே, தானப்பனின் பண்புநலன்கள் யாவும் போராட்ட வாழ்க்கையைக் கடந்துவரும் ஒரு சராசரி இளைஞனின் இயல்பான தன்மையை நமக்குக் காட்டுகின்றன. அன்பு அரவணைப்பும் நல்வழிகாட்டலும் இருந்தால் தானப்பனைப் போன்ற இளைஞர்களின் ஆக்கச் சக்தி நன்முறையில் பயன்பட்டுச் சமுதாய மேன்மைக்கு வழிகோலும் என்பது திண்ணம்.

**4. தானப்பனின் பண்புநலன்களை விளக்கி எழுதுக. (20 புள்ளி) - மாதிரி 2**




சமுதாயம் செம்மையுற வேண்டும் என்ற நன்னோக்குடன் படைப்புகளைத் தந்தவர் டாக்டர் மு. வரதராசன். இவரது கைவண்ணத்தில் உருவான நாவலே வாடா மலர் ஆகும். நல்வாழ்விற்கு அன்பே ஆதாரம் என்பதே இந்நாவலின் கருப்பொருளாகும். இந்நாவலின் துணைக்கதைப்பாத்திரமான தானப்பனிடம் பல பண்புநலன்களைக் காண இயலுகிறது

அவ்வகையில், தானப்பன் **பேராசை கொண்டவனாக** விளங்குகிறான். சான்றாக, சித்தியின் கொடுமையினால் சென்னைக்கு ஓடிச் சென்ற தானப்பன் அங்கு ஒரு புலால் உணவுக்கடையில் வேலைக்குச் சேர்கிறான். அவனது முதலாளி அவனைப் பயன்படுத்திக் கள்ளச்சாராயம் தயாரித்து விற்றுப் பெரும் பணம் சம்பாதிக்கிறார். ஆனால், விதிவசத்தால் தானப்பன் காவலர்களிடம் பிடிபடும் பொழுது முழுப்பழியும் அவன் மீது விழுந்து சிறைவாசம் செல்கிறான். விடுதலையாகி வந்தவனுக்கு முதலாளி அவனது பங்கைக் கொடுக்க மறுப்பதுடன் வேலையிலிருந்தும் நீக்குகிறார். முதலாளியின் துரோகத்தை உணர்ந்த தானப்பன் தானும் பெரும் பணம் சம்பாதிக்க முடிவெடுக்கிறான். எனவே, பழைய முதலாளியிடம் கற்றுக் கொண்ட வித்தையைப் பயன்படுத்தி கள்ளச்சாராயத்தைத் தயாரித்து அதை அதிக விலையில் விற்கிறான். பின்னாளில், தான் சுயமாகத் திறந்த புலால் உணவுக்கடையின் வியாபாரத்தைப் பெருக்க அங்கு உணவோடு மதுவகைகளைக் கள்ளத்தனமாக விற்பனை செய்கிறான். **எனவே, பணம் என்றால் பிணமும் வாயைப் பிளக்கும் என்பதற்கொப்ப பணம் சம்பாதிப்பதிலேயே தானப்பன் குறியாக இருந்ததற்கு அவனது பேராசை குணமே காரணம் என்பது என்பது வெள்ளிடைமலை.**

மேலும், தானப்பன் **ஆடம்பரமாக வாழ விரும்புவனாகவும்** உள்ளான். எடுத்துக்காட்டாக, சென்னையில் தனது திருமணத்தை ஆடம்பரமாக நடத்துகிறான். காலையில் திருமணமும் மாலையில் திருமண இசையரங்கமும் நடக்கிறது. திருமண இசையரங்கில் விலையுயர்ந்த நீல நிற ட்வீட் துணியில் தைத்த கோட்டும் கால்சட்டையும் அணிந்து கொண்டு ஐரோப்பிய உடையில் தோற்றமளிக்கிறான். இதைக்கண்டு குழந்தைவேலே ஆச்சரியப்பட்டுப் போகிறான். எளிமையைப் போற்றாத தானப்பனின் குணத்தை முருகய்யாவும் சுட்டிக்காட்டுகிறார். திருமணத்திற்குப் பின்பும் தானப்பன் ஆடம்பரத்தைக் கைவிடவில்லை. கணவன் மனைவி என இருவர் மட்டுமே என்றாலும் ஆடம்பரமான பெரிய வீட்டை வாடகைக்கு எடுத்து விலையுயர்ந்த பொருள்களால் வீட்டை அலங்கரித்து ஊரார் மெச்ச வாழத் தொடங்குகிறான். அவன் வீட்டிற்குச் செல்லும் குழந்தைவேலின் தந்தையும் தேவையற்ற ஆடம்பரமெனக் குழந்தைவேலிடம் எடுத்துரைக்கிறார். **இதன் மூலம் தானப்பன் ஆடம்பரமாக வாழ விரும்புபவன் என்பது புலனாகிறது.**


தானப்பனிடம் சில போற்றத்தக்க பண்புகளும் இருக்கவே செய்கின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்கது **இரக்க குணமாகும்**. கல்லுக்குள்ளும் ஈரம் இருப்பது போல தானப்பன் முரட்டுக்குணம் வாய்ந்தவனாகப் பார்க்கப்பட்டாலும் அவனுக்குள்ளும் இரக்கம் கசியவே செய்கிறது. சான்றாக, தன் வீட்டு சமையலாள் ஏகப்பன் ஐந்து நாள் காய்ச்சலில் படுத்தபொழுது அவன் மீது இரக்கம் கொண்டு ஒவ்வொரு வேளையும் வந்து விசாரித்துச் செல்கிறான். தானப்பனின் இத்தகைய மேன்மையான குணத்தை ஏகப்பன் குழந்தைவேலைச் சந்திக்கும் பொழுது புகழ்ந்துரைக்கிறான். தானப்பன் இத்தகைய இரக்க மனப்பான்மையைத் தன் மனைவியிடத்திலும் காட்டுகிறான். தன் மனைவி கனகம் வச்சிரநாதன் போன்ற ஆண்களுடன் நெருக்கமாகப் பழகும் போக்கை அறிந்து அவளை மணவிலக்கு செய்கிறான் தானப்பன். ஆனால், சில காலத்திற்குப் பிறகு கனகம் மீண்டும் தானப்பனின் வீட்டிற்கு வர அனுமதி கேட்டுக் கடிதம் எழுதுகிறாள். கனகத்தின் தந்தை இறப்பிற்குப் பிறகு தள்ளாத வயதில் இருக்கும் தாயின் செல்வாக்குக் குறைந்த நிலையில் அண்ணன் தம்பி, அவர்தம் மனைவியர் செல்வாக்குப் பெற்றுவிட்டதால் கனகத்திற்குத் தாய்வீட்டில் அன்பு கிடைக்கவில்லை என்ற அவளது குடும்பச் சூழலை அறிந்து இரக்கம் கொள்கிறான்; தன் வீட்டில் தங்க அனுமதிக்கிறான். **எனவே, இதன்வழி தானப்பன் இரக்க குணமிக்கவன் என்பது தெளிவாகிறது.**

இதைத்தவிர்த்து, தானப்பன் **வாசிக்கும் பழக்கம் கொண்டவனாகவும்** திகழ்கிறான். சான்றாக, தானப்பனும் குழந்தைவேலும் சுடர்விழிக்குக் குழந்தை பிறந்திருப்பதையொட்டி அவளைக் காணச் ஊருக்குப் புறப்படுகின்றனர். அங்கே முருகய்யா இருவரையும் திரு,வி.க எனும் சான்றோரின் உரையைக் கேட்க அருட்பா மன்றத்திற்கு அழைத்துச் செல்கிறார். திரு. வி.க அவர்களின் வாழ்வியல் கருத்துகளைத் தானப்பன் மெய்மறந்து கேட்கிறான். அன்று முதல் தானப்பனிடம் மிகப் பெரிய மாற்றம் ஏற்படுகிறது. தன் மைத்துனரிடம் சொல்லி பல அறநூல்களை அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறான்; அவற்றை ஆழ்ந்து வாசிக்கிறான். பல வேலைகளுக்கிடையே கிடைக்கும் நேரத்திலெல்லாம் 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்', 'உள்ளொளி' போன்ற அறநூல்களை வாசிக்கும் புத்தகப்புழுவாக மாறுகிறான். அதன் விளைவாக, தானப்பனிடம் குடிகொண்டிருந்த முரடுத்தன்மை, கோபம், வேகம் போன்றவை நீங்குகின்றன; அவனிடத்தில் சாந்தமும் அமைதியும் ஏற்படுகிறது. **எனவே, தானப்பனின் வாழ்க்கை திருப்புனைக்கு வாசிப்புப் பழக்கமே காரணம் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.**

இதுமட்டுமல்லாது, தானப்பன் **கடமையுணர்வு கொண்டவனாகவும்** விளங்குகிறான். உதாரணமாக, ஊரைவிட்டுச் சென்னைக்கு ஓடிச் சென்ற பல ஆண்டுகளுக்குப் பிறகு குழந்தைவேல் அனுப்பிய தந்தி மூலம் தந்தையின் மறைவைப் பற்றித் தானப்பன் அறிகிறான். இளமை காலத்தில் தானப்பனின் தந்தை அவனையும் தங்கை சுடர்விழியையும் பொறுப்பாகக் கவனித்துக் கொள்ளாமல் சித்தியின் கொடுமைகளுக்கு ஆளாகவிட்டிருந்தாலும் அவர் மீது தானப்பனுக்கு அன்பு இருக்கவே செய்கிறது. சமுதாயம் தன்னை மதிக்கும் வரையில் ஊர் திரும்பக் கூடாது என்பதில் தானப்பன் கொண்டிருந்த வைராக்கியத்தைக் குழந்தைவேல் அனுப்பிய தந்தி உடைத்தெரிகிறது. காலம் தாமதிக்காமல் ஊர் திரும்பி தந்தைக்கு மகன் செய்யக் கூடிய அனைத்து இறுதி காரியங்களையும் முறையாகச் செய்கிறான். மறுநாள் பால் சடங்கு முடிந்ததும் வீட்டில் உணவுக்கு யாரும் எந்தவொரு ஏற்பாடும் செய்யாமல் இருந்ததால் உணவுக்கடையிலிருந்து உணவை வரவழைத்து அனைவரையும் அழைத்து உட்கார வைத்து உண்ணச் செய்கிறான். **இச்சம்பவம் தானப்பன் கடமையுணர்வு தவறாதவன் என்பதை மெய்ப்பிக்கிறது.**

ஆகவே, தானப்பன் நேர்மறை, எதிர்மறை பண்புகள் இரண்டையும் கலவையாகக் கொண்ட இளைஞனாகவே காணப்படுகிறான். சூழ்நிலைக் கைதியாகி பண்புகள் சீர்கெட்டுப் போகும் தானப்பன் போன்ற இளைஞர்கள் நம் சமுதாயத்தில் அதிகமாகவே உள்ளனர். இவர்கள் நல்வழிக்குத் திரும்பி குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் பலன் தரும் இளைஞர் சக்தியாக உருமாற அனைத்துத் தரப்பினரும் பங்காற்ற வேண்டுமென்ற உன்னத செய்தியை நாவலாசிரியர் தானப்பன் மூலம் பதியம் செய்துள்ளார்.

5. சுடர்விழியின் பண்புநலன்களை விளக்கி எழுதுக. (20 புள்ளி)




இருபதாம் நூற்றாண்டின் தமிழக வரலாற்றிலும் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் உலகத் தமிழர்களின் உள்ளங்களைக் கவர்ந்த முதல் தமிழ்ப்பேராசிரியர் டாக்டர் மு. வரதராசன் ஆவார். இவரது கற்பனை நீரோடையில் உருவான சிறந்த இலக்கியப் படைப்பே வாடா மலர் நாவல். நல்வாழ்விற்கு அன்பே ஆதாரம் என்ற கருப்பொருளைத் தாங்கி இந்நாவல் உருப்பெற்றுள்ளது. இந்நாவலில் துணைக்கதைப்பாத்திரமாகத் திகழும் சுடர்விழியிடத்தில் பெண்மையின் உன்னத பண்புகளைக் காண இயலுகிறது.

அவ்வகையில், சுடர்விழி **பெரியோரை மதிப்பவளாகத்** திகழ்கிறாள். சுடர்விழியின் இப்பண்பு சிறு வயது முதற்கொண்டே அவளிடத்தில் குடிகொள்கிறது. சான்றாக, சுடர்விழி ஆறு வயது குழந்தையாக இருக்கும் காலத்தில் பக்கத்து வீட்டுத் தாயாரம்மா கொடுத்த வடையைத் தின்றதால் சித்தி அவளைக் கன்னத்தில் அறைந்துவிடுகிறாள். இதனால் அழுது கொண்டிருந்த சுடர்விழியிடம் குழந்தைவேலின் தாய் விசாரிக்க அவள் நடந்தவற்றைக் கூறுகிறாள். சித்தி கடுமையாக நடந்து கொண்டாலும் அவளுக்கு அடங்கி நடக்க வேண்டுமெனக் குழந்தைவேலின் தாய் கூறியதைச் சுடர்விழி கேட்டுக் கொள்கிறாள். சில காலத்திற்குப் பிறகு ஒருநாள் குழந்தைவேலின் தாய் சுடர்விழிக்குப் பூச்சரத்தைச் சூட எத்தனித்த வேளையில் சுடர்விழி அதனை நயமாக மறுக்கிறாள். அப்பூவைச் சூடிக்கொண்டால் சித்திக்குக் கோபம் வரும் என்பதால் தன்னை மன்னித்துவிடுமாறு குழந்தைவேல் தாயிடம் வேண்டுகிறாள். அச்சிறு வயதில் அறிவோடும் அடக்கத்தோடும் நடக்கும் சுடர்விழியின் உயர்பண்பைக் கண்டு மீனாட்சி அம்மாளும் வியந்து போய் அவளை வாழ்த்துகிறார். **எனவே, இதன்வழி சுடர்விழி பெரியோரை மதித்து நடக்கும் உயர்குணம் கொண்ட பெண் என்பது புலனாகிறது.**

இதுமட்டுமல்லாது, சுடர்விழி **கணவரின் கொள்கைகளைப் போற்றுபவளாகவும்** விளங்குகிறாள். சுடர்விழியின் கணவரான முருகய்யா எளிய வாழ்க்கை வாழும் பண்புடையவர். தமிழ் ஆசானான அவர் உடுத்தும் உடை, உண்ணும் உணவு என அனைத்திலும் எளிமையைப் போற்றுகிறார்; ஆடம்பரத்தை வெறுக்கிறார். கணவன் எவ்வழியோ தானும் அவ்வழி எனச் சுடர்விழியும் கணவரைப் போன்று எளிய வாழ்க்கை வாழத் தொடங்குகிறாள்; தேவைகளைக் குறைத்துக் கொள்கிறாள். சான்றாக, தனது அண்ணன் தானப்பனின் திருமணத்தில்கூட மற்றவர்களைப் போல் பட்டுச்சேலையும், தங்க வைர நகைகள் அணியாமல் மிகச் சாதாரண சேலை அணிந்து எளிய கோலத்தில் வலம் வருகிறாள். மேலும், பூக்களைப் பறிக்கக் கூடாது என்ற தன் கணவரின் கொள்கைக்கு ஏற்ப குழந்தைவேலின் தாய் தனக்குப் பூச்சூடுவதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறாள். கணவரின் விருப்பமே தன்னுடைய விருப்பம் எனக் குழந்தைவேலின் தாயிடம் கூறுகிறாள். **எனவே, சுடர்விழியும் அவளது கணவர் முருகய்யாவும் மனமொத்த தம்பதிகளாக இல்லறத்தை நல்லறமாக வாழ்ந்ததற்குச் சுடர்விழியின் இத்தகைய கணவரின் கொள்கையைப் போற்றும் பண்பே காரணம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.**


இதுமட்டுமல்லாது, சுடர்விழி **தன்மானம் மிக்கவளாகத்** திகழ்கிறாள். உதாரணமாகத் தன் அண்ணன் தானப்பனின் திருமணத்தில் சுடர்விழி தன் கணவர் முருகய்யாவுடனும் மகன் செங்கதிருடனும் கலந்து கொள்கிறாள். இருப்பினும், திருமணத்தில் கலந்து கொண்ட பிறரைப் போல் அல்லாமல் தங்கள் கொள்கைபடி எளிமையான முறையிலேயே உடுத்தியிருக்கின்றனர். சுடர்விழி பட்டுச்சேலைக்குப் பதிலாகப் பருத்தித் துணி அணிந்திருப்பதையும் வைரநகை இல்லாத கோலத்தையும் பார்த்துத் தானப்பனின் மாமனார் வீட்டார் அவளை மதிக்காமல் அலட்சியம் செய்கின்றனர். இதனைப் புரிந்து கொண்ட சுடர்விழி திருமணம் முடிந்த கையோடு திருமண விருந்தில் கலந்து கொள்ளாமல் அவ்விடத்தைவிட்டு வெளியேறுகிறாள். **எனவே, இச்சம்பவம் சுடர்விழி தன்மானமே பெரிதெனக் கருதுபவள் என்பதை உணர்த்துகிறது.**

தொடர்ந்து, சுடர்விழி **குடும்பப்பற்று** எனும் பண்பையும் தன்னகத்தே கொண்டிருக்கிறாள். சான்றாக, தந்தையின் மறைவிற்குப் பிறகு ஊர் திரும்பிய தானப்பன் தனது தந்தையின் நகைக்கடையில் தனக்கு உரிமை உள்ளதால் அதைத் தன்வயமாக்கிக் கொள்கிறான். தானப்பனின் வருகையை விரும்பாத சித்தி வீட்டிலிருந்த பணம், நகை அனைத்தையும் மூட்டைக்கட்டிக் கொண்டு ஊருக்குக் கிளம்புவதோடு தானப்பன் மீது வழக்குத் தொடுக்க அறிக்கையும் அனுப்புகிறாள். இதற்குப் பதிலடியாகத் தானப்பனும் எதிர்வழக்குத் தொடுக்க முடிவெடுத்திருக்கும் செய்தி சுடர்விழிக்கு எட்டுகிறது. குடும்பத்திற்குள்ளே இத்தகைய நீதிமன்ற வழக்குகள் உண்டானால் அது குடும்பச் சீரழிவுக்கு வித்திடும் என உணருகிறாள். எனவே, தானப்பன் சித்தியின் மீது வழக்குப் போடக்கூடாது என்பதற்காகக் கணவர் முருகய்யாவை அவனிடம் பேசச் சொல்லி அனுப்புகிறாள். **இச்சம்பவத்தின் மூலம் சுடர்விழியின் குடும்பப்பற்றுத் தெளிவாகத் தெரிகிறது.**

இறுதியாக, சுடர்விழி **அனைவரிடமும் அன்பாகப் பழகும் குணம்** வாய்ந்தவளாகவும் திகழ்கிறாள். எடுத்துக்காட்டாக, குழந்தைவேலின் வீட்டிற்கு வந்த சுடர்விழி அவன் மனைவி பூங்கொடியிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறான். புதிய அறிமுகம் என்றாலும் பூங்கொடியுடன் பல விசயங்களைக் கலகலப்பாகப் பேசிச் சிரிக்கிறாள். அத்துடன், குழந்தைவேலிடமும் மீனாட்சி அம்மையாரிடமும் இதே போல் பேசிப் பழகுகிறாள். தான் கணவரின் கொள்கைகளை ஏற்று வாழ்வதன் அடிப்படை காரணத்தையும் மீனாட்சி அம்மையாரிடம் தத்துவமாக விளக்கிச் சொல்கிறாள். சுடர்விழியின் இனிய பேச்சும் செயலும் வீட்டில் குதூகலத்தை ஏற்படுத்துகிறது. இள வயதில் சித்திக்கு அடங்கி வாயிற்படிக்கு வெளியில் ஒடுங்கி நின்ற சுடர்விழியா இவள் எனக் குழந்தைவேலும் பிரமித்துப் போகிறான்; திருமண வாழ்வு அவளை மாற்றி அமைத்துள்ளதை எண்ணிப் பூரிக்கிறான். **எனவே, சுடர்விழி அனைவரிடமும் அன்பாகப் பழகும் சிறந்த குணம் பெற்றவள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.**

ஆகவே, டாக்டர் மு.வ அவர்கள் தனது இலக்கிய உளியால் சுடர்விழியை உயரிய பெண்மையின் முழு உருவமாகச் செதுக்கியுள்ளதை அறிய முடிகிறது. நவநாகரிகம் எனும் போர்வையில் பெண்மையின் உயர்குணங்கள் சிதைந்து வரும் இக்காலக்கட்டத்தில் சுடர்விழியை முன்னுதாரணமாகக் கொண்டு பெண்கள் வாழ முற்பட்டால் குடும்பம் செழிக்கும்; சமுதாயம் வளப்பம் பெறும்; நாடு மேன்மையுறும் என்பது திண்ணம்.

**6. <u>முருகய்யாவின் பண்புநலன்களை விளக்கி எழுதுக. [20 புள்ளி]</u>**




தமிழ்க்கூறு நல்லுலகம் போற்றும் தமிழறிஞர் டாக்டர் மு.வரதராசன். இவரது சமுதாய நன்நோக்கோடு எழுதப்பட்ட நாவல்களுள் குறிப்பிடத்தக்கது வாடா மலர் ஆகும். நல்வாழ்விற்கு அன்பே ஆதாரம் என்ற கருப்பொருளை ஒட்டி இந்நாவல் புனையப்பட்டுள்ளது. இதில் முருகய்யா துணைக்கதைப்பாத்திரமாகத் திகழ்கிறார். இவரிடத்தில் உயர்ந்த பண்புநலன்களைக் காண முடிகிறது.

அவ்வகையில், முருகய்யா **எளிமையான வாழ்க்கையை** விரும்புவராகத் திகழ்கிறார். சான்றாக, ஊர் மெச்ச வேண்டும் என்பதற்காகப் பகட்டாக உடையுடுத்தித் திரியும் உலகத்தோர் மத்தியில் முருகய்யா பட்டாடைகளைத் தவிர்த்து எப்பொழுதும் எளிமையான கதர் ஆடைகளையே உடுத்துகிறார். தானப்பனின் திருமணத்தில் குடும்பத்தோடு கலந்து கொள்ளும் வேளையிலும் அவர் எளிமை பண்பையே கடைப்பிடிக்கிறார். அவரின் எளிய தோற்றத்தைக் கண்டு குழந்தைவேலும் வியப்புக்குள்ளாகிறான். மனைவி சுடர்விழியும் மகனும்கூட பட்டாடை அணியாமல் திருமணத்தில் கலந்து கொண்டிருப்பதைக் குழந்தைவேல் சுட்டிக்காட்டியபொழுது, எளிமையாக உடுத்துவது மதிப்புக் குறைவான செயல் என்ற எண்ணம் சமுதாயத்தில் மாற வேண்டும் எனக் கருத்துரைக்கிறார். மேலும், தானப்பன் தனது திருமண இசையரங்கின்பொழுது விலையுயர்ந்த நீல நிறமான ட்வீட் துணியில் தைத்த கோட்டும் கால்சட்டையும் அணிந்து கொண்டு ஐரோப்பிய உடையில் விளங்கினான். தானப்பனின் இத்தகைய ஆடம்பர திருமணத்தைக் கண்டு முருகய்யா வீண் செலவுகள் என்று குழந்தைவேலிடம் கூறுகிறார். **இதன் மூலம் எளிமையைத் தனது வாழ்க்கை கொள்கையாகக் கடைப்பிடிக்கும் முருகய்யாவின் பண்பு நன்கு புலப்படுகிறது.**

மேலும், முருகய்யா **பொதுநலச்சிந்தனை** கொண்டவராகவும் இந்நாவலில் உலா வருகிறார். எடுத்துக்காட்டாக, அவரின் ஊரில் சில ஆண்டுகளுக்கு முன் உணவுப் பஞ்சம் ஏற்படுகிறது. ஆனால், பக்கத்து நகரத்தில் அரிசி ஆலை ஓடிக் கொண்டிருந்தது. இதனால், அவரின் உள்ளூர் மக்கள் கிராமத்திலிருந்து நெல் மூட்டைகளைக் கொண்டு சென்று அவ்வாலையில் அரிசியாக்கிக் கொண்டு வருகின்றனர். முருகய்யா தம் ஊரில் உள்ள பசியால் வாடும் ஏழைகளின் வாழ்வில் அக்கறை கொண்டு அவர்களுக்கெனத் திட்டம் தீட்டுகிறார். ஏழை மக்களின் அவலநிலையை ஊர் மக்களுக்குக் காட்டி நெல் மூட்டைகளை அவர்களிடம் கொடுத்து அரிசியாக்க வேண்டிக் கொள்கிறார். ஊர் மக்களுக்கும் அவர்களுக்குக் கூலிக்குப் பதிலாக அரிசியைக் கொடுத்துப் பசியைப் போக்குகின்றனர். இதனால் ஆலை முதலாளியின் பகைமைக்கு ஆளானபோதும் அதைப்பற்றி அவர் கவலைக்கொள்ளவில்லை. **இதன் வழி கைம்மாறு எதிர்பார்க்காமல் மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற தூய எண்ணம் கொண்டவர் முருகய்யா என்பது தெளிவாகிறது.**


அதுமட்டுமில்லாமல், முருகய்யா **குடும்பப்பற்று** மிக்கவராகவும் வலம் வருகிறார். சான்றாக, தானப்பனின் தந்தையின் மறைவிற்குப் பிறகு சித்தி தன் குழந்தைகளை அழைத்துக் கொண்டு பெற்றோருடன் ஊருக்குச் சென்றுவிடுகிறாள். பின்னர், சொத்துப் பங்கீடு தொடர்பாகத் தானப்பனுக்கு வழக்கு அறிக்கை அனுப்புகிறாள். அதற்கு மறுமொழியாகத் தானப்பனும் சித்தி தனது தந்தையின் மறைவுக்குப் பிறகு பதினாயிரம் ரூபாயையும் நகைநட்டுகளையும் திருடிச் சென்றதுடன் கடைக்கணக்கிலிருந்து ஊரில் நிலம் வாங்கி இருப்பதால் அதில் தனக்கும் தன் தங்கை சுடர்விழிக்கும் பங்கு உண்டென்பதால் தானும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப் போவதாக மருட்டி அறிக்கை அனுப்புகிறான். இதனைக் கேள்வியுற்ற முருகய்யா சொத்து வழக்கு வேண்டாமென்றும் அது குடும்பச் சீரழிவுக்கு வித்திடுமெனவும் குழந்தைவேலின் மூலம் தானப்பனிடம் கூறச் செய்கிறார். **எனவே, இதன் மூலம் முருகய்யா குடும்ப நலனில் அதிக அக்கறையுள்ளவர் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.**

இதைத்தவிர, முருகய்யா **சான்றோரைப் போற்றுபவராகவும்** திகழ்கிறார். எடுத்துக்காட்டாக, சுடர்விழி குழந்தையைப் பெற்றெடுத்த செய்தி அறிந்து குழந்தைவேலும் தானப்பனும் ஊருக்கு இரயிலில் புறப்பட்டனர். அங்கு வந்தடைந்து சுடர்விழியையும் குழந்தையையும் கண்டு மகிழ்கின்றனர். பின்பு தானப்பன் சினிமா படத்திற்குச் செல்ல விரும்புகிறான். ஆனால், முருகய்யா தானப்பனின் விருப்பத்திற்கு இசையாமல் தமிழறிஞர் திரு.வி.க வின் அருமை பெருமைகளைக் கூறுகிறார். திரு.வி.கவின் வாழ்வியலுக்கான சீரிய அறக்கருத்துகளைச் செவிமடுத்துத் தானப்பனும் குழந்தைவேலும் பயன்பெற வேண்டுமெனக் கருதுகிறார். எனவே, அவர்கள் இருவரையும் திரு.வி.க வின் சொற்பொழிவைக் கேட்க அருட்பா மன்றத்திற்கு அழைத்து செல்கிறார். **இதன் மூலம், முருகய்யா சான்றோரிடத்தில் ஆழ்ந்த பற்று கொண்டவர் என்பது வெள்ளிடைமலை.**

இறுதியாக, முருகய்யா **கடமைத் தவறாதவராகவும்** மிளிர்கிறார். உதாரணத்திற்கு, தானப்பன் திரு.வி.க வின் சொற்பொழிவைக் கேட்டதன் தொடக்கம் பல அறக்கருத்துகளைக் கொண்ட நூல்களை வாசித்துச் சீரான வாழ்க்கை வாழத் தொடங்குகிறான்; நன்மை பயக்கும் நற்காரியங்களையும் செய்யத் தொடங்குகிறான். அவ்வகையில், சித்தி மகள் மனோன்மணிக்குத் திருமணம் நடத்தவும் தான் வாங்கிய நிலத்தில் பள்ளிக்கூடம் கட்டவும் தானப்பன் எண்ணம் கொள்வதுடன் அதனை முருகய்யாவிடமும் தெரிவிக்கிறான். ஆனால், காலம் செய்த கோலத்தின்படி தானப்பன் யாரும் எதிர்பாரா வண்ணம் திடீர் மரணம் எய்துகிறான். தானப்பனின் இறப்பிற்குப் பிறகு, அவனது விருப்பத்தை நிறைவேற்றும் கடமை தனக்கிருப்பதை முருகய்யா உணர்கிறார். எனவே, தன் ஆசிரியர் தொழிலைவிட்டு வந்து அவன் வாங்கியிருந்த நிலத்தில் ஒரு பள்ளிக்கூடத்தைக் கட்டி அதில் முதல் வேலையாக மனோன்மணிக்குத் திருமணத்தையும் நடத்தி தானப்பனின் வேண்டுகோளை நிறைவேற்றுகிறார். **இச்செயல் முருகய்யா கடமைத்தவறாதவர் என்பதை நன்கு வெளிப்படுத்துகிறது.**

ஆகவே, நாவலாசிரியர் முருகய்யா எனும் துணைக்கதைப்பாத்திரத்தின் மூலம் நாம் வாழ்க்கையில் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டிய சிறந்த பண்புநலன்களைச் சுட்டிக்காட்டுகிறார். இன்றைய சமுதாயம் முருகய்யாவை ஒரு தலைச்சிறந்த முன்னுதாரணமாகக் கொண்டு செயல்பட்டால் வாழ்வு சிறக்கும் என்பது திண்ணம்.

**7. பூங்கொடியின் பண்பு நலன்களை விளக்கி எழுதுக. (20 புள்ளி)**




கற்பனைக் குதிரைக்குக் கடிவாளமிட்டு நாவல் எனும் தேரோட்டுவதில் வல்லவர் டாக்டர் மு. வரதராசன். இவரது பேனாமுனை செதுக்கிய சிற்பமே வாடா மலர் நாவல். நல்வாழ்விற்கு அன்பே ஆதாரம் என்ற கருப்பொருளை உள்வாங்கி இந்நாவல் எழுதப்பட்டுள்ளது. இந்நாவலில் குழந்தைவேலின் மனைவி எனும் கதைப்பாத்திரத்தில் வலம் வரும் பூங்கொடியின் பண்புநலன்கள் இன்றைய பெண்களுக்குச் சில செய்திகளை உணர்த்தும் வண்ணம் அமைந்துள்ளது.

அவ்வகையில், பூங்கொடி **பொறுப்பிள்ளாதவளாக** உள்ளாள். எடுத்துக்காட்டாக, குழந்தைவேலுடன் திருமண பந்தத்தில் நுழையும் பூங்கொடி மனைவியாகவும் மருமகளாகவும் தன் பொறுப்புகளை முறையே ஆற்றவதில் அலட்சியம் காட்டுகிறாள். ஒரு நாள், குழந்தைவேல் தெருவில் நடந்து செல்லும் பொழுது தானப்பனின் சித்தியும் தாயாரம்மாவும் பேசிக் கொண்டிருப்பது அவன் செவியில் விழுகிறது. பூங்கொடி வீட்டில் எவ்வித வேலைகளும் செய்யாமல் சுகமாகப் படுத்து உறங்குவதாகவும் வீணை மீட்டிக் கொண்டிருப்பதாகவும் மாமியார்தான் வேலைக்காரிபோல் அனைத்து வேலைகளைச் செய்வதாகவும் அவர்கள் பேசிக் கொண்டிருக்கின்றனர். இதுவரையில் இவ்விசயத்தைப் பற்றி அறிந்திராத குழந்தைவேல் வீட்டிற்கு விரைந்து சென்று உண்மை நிலவரத்தைக் கண்டறிய முற்படுகிறான். அங்கே குழந்தைவேலின் தாய், மகன் சாப்பிட வேண்டுமே என அரக்கப் பரக்க சமையலறையில் உணவுத் தயாரிப்பதில் ஈடுபட்டிருக்க, பூங்கொடியோ அறையில் படுத்து ஓய்வெடுத்துக் கொண்டிருப்பதைக் கண்ணாரக் கண்டு தான் கேட்டது உண்மையே என்றுணர்கிறான். **எனவே, இச்சம்பவத்தின் மூலம் பூங்கொடி தனது பொறுப்புகளைச் சரிவர கவனிக்காதவள் என்பது தெளிவாகிறது.**

மேலும், பூங்கொடி **ஆணவம் மிகுந்தவளாகவும்** இருக்கிறாள். உதாரணத்திற்கு, தானப்பனின் திருமணத்திற்குப் பிறகு, அவனுக்கு விருந்து வைக்க குழந்தைவேல் விரும்பினாலும் பூங்கொடி அதற்கு ஒத்துவரவில்லை. இதனால், குழந்தைவேல் தாய்வீட்டிலேயே விருந்துக்கு ஏற்பாடு செய்கிறான். அதில், பூங்கொடி கலந்து கொள்ளவில்லை. இதை அறிந்த குழந்தைவேலின் தாய், மருமகள் சாப்பிட வேண்டுமே என அக்கறை கொண்டு குழந்தைவேலின் வீட்டிற்கு உணவை அனுப்பி வைக்கிறார். பூங்கொடி, மாமியார் அனுப்பிய விருந்துணவை உண்ணாமல் அவமதிப்புச் செய்கிறாள். விருந்திற்குப் பிறகு வீடு திரும்பிய குழந்தைவேல் தாய் அனுப்பிய உணவைப் பூங்கொடி இன்னும் உண்ணவில்லை என்பதை அறிகிறான். அச்சமயத்தில் அங்கு வந்த வேலைக்காரியிடம் அவ்வுணவை எடுத்துக் கொள்ளுமாறும் பின்பு உணவுத்தூக்கியைத் துலக்கி மாமியார் வீட்டில் கொடுத்துவிட்டுப் போகுமாறு பூங்கொடி பணிக்கிறாள். **எனவே, பூங்கொடியின் இச்செயல் அவள் ஆணவம் மிகுந்தவள் என்பதைப் படம் பிடித்துக் காட்டுகிறது.**


அதனைத் தவிர்த்து, பூங்கொடியிடம் **பிடிவாத குணத்தையும்** காண இயலுகிறது. சுடர்விழி குழந்தை பெற்றெடுக்கும் நாள் நெருங்கிவிட்டதால் குழந்தைவேலின் தாய் அவளைக் கவனித்துக் கொள்ள ஊருக்குச் சென்றுவிடுகிறார். அவ்வேளையில், பூங்கொடி தன் தாய்க்குக் கடிதம் எழுதி அனுப்பி அவளை ஊருக்கு அழைக்கும்படி செய்துவிடுகிறாள். ஆனால், வீட்டில் தாய் இல்லாத நிலையில் அவளும் ஊருக்குச் சென்றுவிட்டால் வீட்டில் சமைக்க ஆளில்லாமல் போகுமெனக் குழந்தைவேல் எடுத்துக் கூறியது செவிடம் காதில் ஊதிய சங்காகிறது. தாய் வீட்டிற்குச் சென்றே ஆக வேண்டுமெனக் குரங்குப்பிடியாய்ப் பூங்கொடி ஊருக்குப் புறப்பட்ட பிறகு, குழந்தைவேலும் அவனது தந்தையும் உணவகத்திலிருந்து தருவித்த உணவையும் ஞாயிற்றுகிழமைகளில் தானப்பனின் வீட்டிலும் சாப்பிடும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். **எனவே, சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு தனது முடிவை மாற்றிக் கொள்ளாத பூங்கொடியின் போக்கு அவள் பிடிவாத குணம் கொண்டவள் என்பதை மெய்ப்பிக்கிறது.**

அதுமட்டுமல்லாமல், பூங்கொடி **பிறரின் அன்பை உணராதவளாகவும்** உள்ளாள். எடுத்துக்காட்டாக, தன்னைச் சந்திக்க வந்த பெற்றோருடன் செல்லும் பூங்கொடி தாய்வீட்டிலேயே தங்கிவிடுகிறாள். பல நாட்களாகியும் அவர்களிடமிருந்து எவ்வித கடிதமும் வரவில்லை. குழந்தைவேல் அவர்களுக்குக் கடிதம் அனுப்பிய பொழுது மறுமொழி கடிதத்தில் பூங்கொடியை அழைத்து செல்ல வருமாறும் குறிப்பிடவில்லை. குழந்தைவேல் நேரடியாகக் கடலூருக்குப் பூங்கொடியை அழைத்து வரச் செல்கிறான். சென்ற இடத்தில் பூங்கொடியின் பெற்றோர் அவனைச் சரியாக வரவேற்கவில்லை. மாறாக, பூங்கொடியின் தாய் தனிக்குடித்தனம் பற்றி குழந்தைவேலிடம் பேசுகின்றார். பூங்கொடியிடம் அவளுக்கு வீட்டில் என்ன குறை எனக் குழந்தைவேல் நேரிடையாகவே கேட்கும் பொழுது, தனக்குத் தனிக்குடித்தனம்தான் வேண்டுமெனவும் குழந்தைவேலின் பெற்றோர் வீட்டில் இருக்க தனக்கு விருப்பம் இல்லையெனவும் தீர்க்கமாகக் கூறுகிறாள். இதனைக் கேட்டுக் குழந்தைவேல் பெரும் வருத்தத்திற்குள்ளாகிறான். **எனவே, சொந்த மகளைப் போன்று கவனிக்கும் மாமனார் மாமியாரைவிட்டுத் தனிக்குடித்தனம் செல்ல விரும்பும் பூங்கொடி, பிறரின் அன்பை உணராதவள் எனப் புலனாகிறது.**

இறுதியாக, பூங்கொடி **செய்த தவற்றை உணரும் பெண்ணாகவும்** திகழ்கிறாள். சான்றாக, முன்னாள் கலெக்டரின் மகள், படித்தவள், பணம் படைத்தவள் என்ற ஆணவத்துடம் பிறரை மதிக்காது தான் தோன்றித்தனமாகச் செயல்பட்ட பூங்கொடிக்குக் காலம் நல்ல பாடம் புகட்டுகிறது. பூங்கொடியின் தந்தை தன் நண்பரை நம்பி இருந்த பணத்தையெல்லாம் செலவழித்துச் சினிமா படம் எடுக்கிறார். ஆனால், அப்படம் ஓடாததால் பெருத்த நட்டத்திற்கு ஆளாகிறார்; கவலையில் நோய்வாய்ப்படுகிறார். தந்தையின் நிலையை எண்ணி பூங்கொடிக்கும் வருத்தம் ஏற்படுகிறது. இதனிடையே, பூங்கொடி தன் கணவரின் வீட்டாரிடம் பணம் பெற்றுத் தன் அண்ணனுக்கு உதவியது அவருக்குத் தெரிய வர, இனிமேல் அவ்வாறு செய்யக்கூடாது எனவும் விழிப்பாக இருக்கும்படியும் அறிவுறுத்துகிறார். கணவரிடத்தில் அன்பாக நடக்கும்படியும் இனிமேல் அம்மாவின் பேச்சையோ அண்ணன் தம்பி பேச்சையோ கேட்டுத் தன் வாழ்வைக் கெடுத்துக் கொள்ளக்கூடாது என அறிவுறுத்தி மகளுக்குக் கடிதம் எழுதுகிறார். இதனால் பூங்கொடி மனம் திருந்துகிறாள். தான் செய்த தவறுகளுக்குக் குழந்தைவேலிடம் மன்னிப்புக் கேட்பதுடன் மீண்டும் மாமன் மாமியாருடன் சேர்ந்து கூட்டுக்குடும்பமாக வாழ்கிறாள். **இதன்வழி பூங்கொடி செய்த தவற்றை உணருபவள் என்பது தெரியவருகிறது.**

ஆகவே, தாய்வீட்டில் அதிகம் செல்லம் கொடுக்கப்பட்டு வளரும் பெண்களின் பிரதிநிதியாக பூங்கொடி விளங்குகிறாள். மகள், மருமகள், தாய், மாமியார் என்ற பரிமாணத்திற்கேற்ப ஒவ்வொரு வாழ்க்கைச் சூழலுக்கும் பெண்கள் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதைப் பூங்கொடியின் மூலம் அறியலாம். அவ்வாறு செயல்படுத்தத் தவறினால் பெண்கள் பல்வேறு சிக்கல்களுக்கு ஆளாக வேண்டுமென்பதைப் பூங்கொடி நமக்குச் சொல்லாமல் சொல்கிறாள்.

**8. மீனாட்சி அம்மாளின் பண்பு நலன்களை விளக்கி எழுதுக. (20 புள்ளி)**




நாவல் உலகில் தனிப்பெரும் சிற்பியாக விளங்குபவர் டாக்டர் மு. வரதராசன். இவரது இலக்கிய உளியால் செதுக்கப்பட்ட சிற்பமே வாடாமலர் நாவலாகும். நல்வாழ்விற்கு அன்பே ஆதாரம் என்ற கருப்பொருளை ஒட்டி இந்நாவல் உருவாக்கம் கண்டுள்ளது. இந்நாவலின் முதன்மைக் கதைப்பாத்திரமான குழந்தைவேலின் தாயாக மீனாட்சி அம்மாள் வலம் வருகிறார். இவரிடத்தில் பல நற்பண்புகளைக் காண இயலுகிறது.

அவ்வகையில், மீனாட்சி அம்மாள் **இரக்க மனப்பான்மை** கொண்டவராகத் திகழ்கிறார். உதாரணத்திற்கு, சித்தியின் கொடுமையால் தானப்பனும் சுடர்விழியும் சொல்லொணா துன்பத்தை அடைகின்றனர். அடிவாங்குதல், மனம் புண்படுத்தும் வகையில் திட்டுப்பெறுதல், வேலைக்காரர்களைப்போல் வீட்டு வேலைகளைச் செய்தல் எனச் சித்தியின் ஈவிரக்கமற்ற செயல்களை அச்சிறு குழந்தைகள் தாங்கிக் கொண்டாலும் உணவு தரப்படாமல் பசிப்பட்டினியை மட்டும் தாங்க முடியாமல் தவிக்கின்றன. தாயில்லா இக்குழந்தைகளின் அவலநிலையைக் கண்டு மீனாட்சி அம்மாள் மனம் இரங்கி அவ்வப்பொழுது உணவு வழங்கி அவர்களின் பசியை ஆற்றுகிறார். ஒரு சமயம், பள்ளி செல்லும் வேளையில் பசி மயக்கத்தால் தானப்பன் மயங்கி விழுந்த பொழுது, குழந்தைவேல் அவனைத் தன் வீட்டிற்கு அழைத்து வருகிறான். அவன் நிலைகண்டு மனம் உருகிய மீனாட்சி அம்மாள் அவனுக்கு வீட்டிலிருந்த இட்டிலியும் காப்பியும் கொடுத்துச் சாப்பிட வைக்கிறார். **இதன்வழி, மீனாட்சி அம்மாள் இரக்க மனப்பான்மை கொண்டவர் என்பது தெளிவாகிறது.**

மேலும், மீனாட்சி அம்மாள் **பொறுப்புணர்வு மிகுந்தவராகவும்** விளங்குகிறார். தாயாகவும் மனைவியாகவும் மாமியாராகவும் பல்வேறு சூழ்நிலைகளில் தனது பொறுப்பைச் சரியாக மேற்கொள்கிறார். எடுத்துக்காட்டாக, குழந்தைவேல் சிறுவயதில் சடுகுடு, புல்லடித்தல், பட்டம் விடுதல் என விளையாட்டில் மும்முரமாய் இருந்து சாப்பிடாமல் இருப்பதை அந்தத் தாயுள்ளம் பொறுக்க மாட்டாதவராய், உரத்த குரலில் கூப்பிட்டுச் சோறு உண்ணச் செய்கிறார். இதுமட்டுமல்லாது, தன் கணவருக்கும் முறையான உணவு கிடைக்க வேண்டுமென்பதில் முழு அக்கறையாக உள்ளார். குழந்தை பிரசவித்த சுடர்விழியைக் கவனித்துக் கொள்ள ஊருக்குச் சென்றிருந்த வேளையில் மருமகள் பூங்கொடியும் தன் தாய் வீட்டிற்குச் சென்று விட்ட நிலையில் வீட்டில் சமைக்க ஆளில்லாத காரணத்தால் கணவர் ஓட்டலில் சாப்பிடும் செய்தியறிந்து மிகுந்த மனவருத்தம் கொள்கிறார். வெளி சாப்பாடு கணவருக்கு ஆகாதே என எண்ணி உடனே தன்னை வீட்டிற்கு அழைத்துச் செல்லும்படி குழந்தைவேலிடம் வேண்டுகிறார். **இதன்வழி, மீனாட்சி அம்மாள் பொறுப்பு மிகுந்தவர் என்பதை ஆணித்தரமாகக் கூறலாம்.**


இதுமட்டுமல்லாது, மீனாட்சி அம்மாள் **பெருந்தன்மை** மிக்கவராகவும் மிளிர்கிறார். சான்றாக, பூங்கொடிக்கு எந்தவொரு வேலையும் வைக்காமல் அனைத்தையும் தானே செய்வதற்கான காரணத்தைக் குழந்தைவேல் தன் தாயிடம் வினவுகிறான். புதிதாக வந்த மருமகளுக்கு வேலை வைத்து மருட்டக் கூடாது எனவும் காலம் கொஞ்சம் போனால் தன்னாலேயே அவளுக்குப் பொறுப்பு வந்து விடுமென்றும் கூறுகிறார். சராசரி மாமியாரைப்போல் அல்லாமல் தன் தாயின் பெருந்தன்மையை எண்ணி குழந்தைவேலும் மனம் உருகுகின்றான். மற்றொரு சூழலில் பூங்கொடி தனிக்குடித்தனம் வேண்டும் எனக் குரங்குப்பிடியாய் இருந்த வேளையில் மீனாட்சி அம்மாள் அதற்கு மறுப்பேதும் கூறாமல் சம்மதிக்கிறார். ஒரே மகனும் தனிக்குடித்தனம் சென்றால் வயதான தங்கள் நிலை என்னவாவது என அவர் எண்ணி எந்தவொரு சிக்கலையும் விளைவிக்கவில்லை. மாறாக, தனிக்குடித்தனம் நடத்துவதற்காகத் குழந்தைவேலின் தந்தை அனுப்பி வைத்த அரிசி, பருப்பு என மளிகைப் பொருள்களைச் சுத்தப்படுத்தி வீட்டில் முறையாக ஒழுங்குபடுத்தி வைக்கிறார். தன் மகனின் மகிழ்ச்சியே அவருக்கு முக்கியமாகத் தெரிகிறது. **எனவே, மீனாட்சி அம்மாள் பெருந்தன்மை எனும் உயர்குணத்தைத் தன்னகத்தே கொண்டிருப்பது இதன்வழி புலனாகிறது.**

தொடர்ந்து, மீனாட்சி அம்மாள் **அண்டை அயலாரோடு அன்பாகப் பழகுபவராகவும்** திகழ்கிறார். சான்றாக, தானப்பனின் தாயுடன் சகோதரி போல் பழகுகிறார். அவர் இறந்த பிறகு அதே அன்பைத் தானப்பன் சித்தியிடமும் காட்டுகிறார். தனக்கு வாங்கிய புடவையைப் போலவே சித்திக்கும் ஒரு புடவை எடுத்துக் கொடுக்கிறார். சித்தி மகப்பேற்றுக்காகத் தாய் வீட்டிற்குச் சென்றுவிட்ட பிறகு, தானப்பனின் தந்தை இரு குழந்தைகளை வைத்துக் கொண்டு உணவுக்கு என்ன செய்வார் என யோசிக்கிறார். எனவே, தானப்பன் குடும்பத்தினரைத் தங்கள் வீட்டிலேயே சாப்பிடுமாறு அழைக்கிறார். தானப்பனின் தந்தை தயக்கம் காட்டி வர மறுத்த நிலையில் தானப்பனுக்கும் சுடர்விழிக்கும் முறையான உணவளித்துப் பராமரிக்கிறார். அக்குழந்தைகளைத் தன் குழந்தைகளாகவே எண்ணி கவனிக்கிறார். **இதன்வழி, அண்டை அயலாரைத் தன் உறவாக எண்ணும் மீனாட்சி அம்மாளின் போக்கு நன்கு வெளிப்படுகிறது.**

இதைத்தவிர, மீனாட்சி அம்மாளிடத்தில் **பொறுமை** எனும் பண்பையும் காண இயலுகிறது. உதாரணமாக, சித்தியின் அரக்க குணம் எல்லைமீறி போக ஒரு நாள் அவனை அறையில் அடைத்து வைத்து வைத்து உணவும் நீரும் கொடுக்காமல் கொடுமை செய்வதைச் சுடர்விழியின் மூலம் அறிந்த குழந்தைவேலின் தந்தை கடுங்கோபத்திற்கு ஆளாகிறார். அதனைக் கண்டித்துத் தானப்பன் தந்தையிடம் பேசப்போவதாகக் கூறுகிறார். கணவனின் கோபத்தை உணர்ந்த மீனாட்சி அம்மாள், எடுத்தோம் கவிழ்த்தோம் எனச் செயல்படாமல் அவரைப் பொறுமை காக்கும்படி கூறுகிறார். கோபத்துடன் செயல்பட்டால் நிலைமை இன்னும் மோசமாகத்தான் போகுமென எடுத்துரைக்கிறார். தாயில்லா பிள்ளைகள் இனி தங்கள் வீட்டிற்கு வருவதற்கும் உணவு உண்பதற்கும் வழியில்லாமலும் போகக் கூடும் எனவும் விளக்குகிறார். **எனவே, மீனாட்சி அம்மாள் பொறுமை குணம் மிக்கவர் என்பது இதன்வழி தெளிவாகிறது.**

ஆகவே, 'மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா' என்ற கவிமணியின் கூற்றுக்கொப்ப மீனாட்சி அம்மாள் எனும் கதைப்பாத்திரத்தை டாக்டர் மு. வரதராசன் உயரிய பெண்மையைப் பறைசாற்றும் வண்ணம் வைரமாய் மிளிர வைத்துள்ளார். இன்றைய பெண்கள் மீனாட்சி அம்மாளைச் சிறந்த முன்னுதாரணமாகக் கொண்டால் வீடும் நாடும் சிறக்கும்.

**9. குழந்தைவேல் தந்தையின் பண்பு நலன்களை விளக்கி எழுதுக. (20 புள்ளி)**




இலக்கிய உலகில் தனக்கெனச் சிறப்பிடத்தைப் பெற்றிருப்பவர் டாக்டர் மு. வரதராசன். பார் போற்றும் இவரது படைப்புகளுள் ஒன்றுதான் வாடா மலர் நாவல். நல்வாழ்விற்கு அன்பே ஆதாரம் என்ற கருப்பொருளை ஒட்டி இந்நாவல் எழுந்துள்ளது. குழந்தைவேலின் தந்தை பல சிறந்த பண்புகளைக் கொண்ட துணைக்கதைப்பாத்திரமாக இச்சமுதாய நாவலுக்கு வலு சேர்த்துள்ளார்.

அவ்வகையில் குழந்தைவேலின் தந்தை **பிறர் நலத்தில் அக்கறை** கொண்டவராகத் திகழ்கிறார். சான்றாக, தானப்பனும் சுடர்விழியும் சித்தியினால் பசித்துன்பத்திற்கு ஆளாகின்றனர். சித்தி தனக்கும் தன் குழந்தைகளுக்கு மட்டும் சுவையான, சத்தான உணவுகளைத் தயாரித்து உண்ணும் வேளையில் அவ்விரு பச்சிளங்குழந்தைகளுக்கும் பசிக்குமே என்ற ஈர உணர்வில்லாதவளாக உள்ளாள். இந்நிலையில் ஒருநாள் குழந்தைவேலுடன் பள்ளிக்குச் செல்லும் தருவாயில் பசியின் கொடுமையால் தானப்பன் மயங்கி விழுகிறான். பிற நண்பர்களின் உதவியுடன் குழந்தைவேல் அவனைத் தன் வீட்டிற்கு அழைத்து வருகிறான். மீனாட்சி அம்மாள் அவனுக்கு இட்டிலியும் காப்பியும் கொடுத்துப் பசியை ஆற்றுகிறார். வீடு திரும்பிய குழந்தைவேலின் அப்பா தானப்பனின் நிலையை அறிந்து, இனி பசித்தால் கூச்சப்படாமல் தங்கள் வீட்டிற்கு வந்து சாப்பிடும்படி அன்புடன் கூறுகிறார். அத்துடன், குடும்பச் சிக்கல்களை மனத்தில் போட்டுக் குழப்பிக் கொள்ளாது கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பயிலும்படி ஆறுதலாகப் பேசி அவனை வீட்டிற்கு அனுப்பி வைக்கிறார். **இச்சம்பவத்தின் மூலம் குழந்தைவேலின் தந்தை பிறர் நலத்தில் அக்கறை கொண்டவர் என்பது புலனாகிறது.**

மேலும், குழந்தைவேலின் தந்தை **கோப உணர்ச்சிக்கு ஆட்படுபவராக** உள்ளார். தானப்பனின் தந்தை மறுமணம் செய்த பின் சித்தியின் கையே அவ்வீட்டில் ஓங்கி இருக்கிறது. மாற்றாந்தாயினால் தானப்பனும் சுடர்விழியும் பல கொடுமைகளுக்கு ஆளாவதைக் கண்ணாரக் காணும் பொழுதெல்லாம் குழந்தைவேலின் தந்தைக்கு மன ஆதங்கம் மேலோங்குகிறது. சான்றாக, சிறுமியான சுடர்விழியைப் பாத்திரம் துலக்குதல் போன்ற வீட்டு வேலைகள் செய்வதற்கும் குழந்தை மாணிக்கவல்லியைப் பார்த்துக் கொள்வதற்கும் சித்தி தன் கணவரிடம் சொல்லி அவளைப் பள்ளியிலிருந்து நிறுத்துகிறாள். இச்செய்தியைக் கேட்டறியும் குழந்தைவேலின் தந்தைக்குக் கோபக்கனல் பற்றிக் கொள்கிறது. சொந்த மகளின் எதிர்காலத்திற்குக் கல்வி முக்கியம் என்பதை அறியாத தந்தையாகவும் மனைவிக்கு அடிமையாகிக் கிடக்கும் ஆண்மகனாகவும் இருக்கும் சுடர்விழியின் தந்தை மீது அவருக்கு அளவுகடந்த கோபம் ஏற்பட்டுக் கடும் வார்த்தைகளால் திட்டித் தீர்க்கிறார். குழந்தைவேலின் தாய் அவரை அமைதிப்படுத்துகிறார். **இதன் மூலம் குழந்தைவேலின் தந்தை கோப உணர்ச்சிக்கு ஆட்படுபவர் என்பது தெளிவாகிறது.**

இதுமட்டுமின்றி, **ஆடம்பரத்தை விரும்பாதவராகவும்** குழந்தைவேலின் தந்தை விளங்குகிறார். எடுத்துக்காட்டாக, குழந்தை பெற்றெடுத்த சுடர்விழியைக் கவனிக்க குழந்தைவேலின் தாய் ஊருக்குச் சென்றுவிட்ட நிலையில் பூங்கொடியும் தன் தாய் வீட்டிற்குச் சென்று விட்டதால் வீட்டில் சமைக்க ஆளில்லாத நிலை உருவாகிறது. குழந்தைவேலும் அவனது தந்தையும் ஓட்டல் உணவைத் தருவித்துச் சாப்பிடுவதை அறிந்து அவர்களைத் தன் வீட்டில் வந்து சாப்பிடுமாறு தானப்பன் வேண்டுகிறான். அதன்படி அவன் வீட்டிற்குச் செல்லும் குழந்தைவேலின் தந்தை, அங்குள்ள ஆடம்பட பகட்டு வாழ்க்கை முறையைக் கண்டு மனம் வெறுக்கிறார். பெரிய மேசை, பளபளக்கும் தட்டு, கத்திகள், கரண்டிகள், விலையுயர்ந்த நாற்காலிகள், விலையுயர்ந்த கைத்துண்டுகள் என அனைத்தும் தேவையற்றவையாகக் கருதுகிறார். கையை அலம்பி, தரையில் பாய் போட்டு அமர்ந்து இலையில் சாப்பிட முடியாதா எனக் குழந்தைவேலிடம் பல கேள்விகளை முன்வைக்கிறார். வீண் ஆடம்பரங்களில் பணத்தை இறைத்துவிட வேண்டாமெனத் தன் வீட்டிற்கு வந்த தானப்பனுக்கு அறிவுரையும் கூறுகிறார். **எனவே, குழந்தைவேலின் தந்தை ஆடம்பரத்தில் விருப்பம் கொள்ளாதவர் என்பதை இச்சம்பவம் வெளிப்படுத்துகிறது.**

தொடர்ந்து, குழந்தைவேலின் தந்தை **பெருந்தன்மை கொண்டவராகவும்** திகழ்கிறார். சான்றாக, தாய்வீட்டிற்குச் சென்ற பூங்கொடி தனிக்குடித்தனம்தான் வேண்டும் எனக் குரங்குப்பிடியாய் இருக்கிறாள். எவ்வளவு எடுத்துக் கூறியும் தன்னுடன் வர மறுத்த பூங்கொடியைப் அங்கேயே விட்டுவிட்டு வருத்தத்துடன் குழந்தைவேல் ஊர் திரும்புகிறான். இவ்விசயத்தை அறிந்து கொண்ட குழந்தைவேலின் தந்தை தானே கடலூருக்குச் சென்று தனிக்குடித்தனம் அனுப்புவதாகக் கூறி மருமகளை அழைத்து வருகிறார். அவர்களுக்கென ஒரு வாடகை வீட்டைப் பார்த்து குடித்தனம் நடத்த மளிகை பொருட்கள் உட்பட அனைத்துப் பொருள்களை வாங்கி வைக்கிறார். ஆதரவாக இருக்க வேண்டிய ஒரே மகனைத் தனிக்குடித்தனம் அனுப்புவதில் அவர் சற்றும் தயக்கம் காட்டவில்லை; தன் மகனின் இல்லற வாழ்க்கை நலம்பெற வேண்டுமென்பதையே முக்கியமாகக் கருதுகிறார். **இதன்வழி குழந்தைவேல் தந்தையின் பெருந்தன்மை எனும் சீரிய குணம் தெரியவருகிறது.**

இறுதியாக, **பண விசயத்தில் குழந்தைவேலின் தந்தை விழிப்பாக** இருப்பவர். பணம் என்றால் பிணமும் வாயைப் பிளக்கும் என்பதற்கொப்ப பணத்திற்காக ஏமாற்றிப் பிழைக்கும் மனிதர்களிடம் விழிப்புணர்வோடு நடந்து கொள்ள வேண்டுமென்பதில் அவர் மிகத் தெளிவாக உள்ளார். சான்றாக, பணத்தைப் பெற்றுக் கொள்ளும்போது மிக நயமாகப் பெற்றுக் கொண்டு, திருப்பித் தரும்போது வன்கண்மையோடு பேசுவது உலக வழக்கம் எனக் குழந்தைவேலுக்கு அறிவுரை கூறுகிறார். மேலும், பணம் கேட்டு வருபவர்களுக்கு ஐநூறு அறுநூறு என்று கடன் கொடுக்காமல் ஐம்பது அறுபது ரூபாய் என நன்கொடையாகக் கொடுத்துவிடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார். எனவேதான், பூங்கொடியின் அண்ணன் இரண்டாயிரம் ரூபாய் பணத்தைக் கடனாகக் கேட்டிருப்பதைக் குழந்தைவேல் தன் தந்தையிடம் கூறியபோது, ஆயிரம் கொடுத்தால் போதுமென்றும் பாண்டு எழுதி கையெழுத்து வாங்கிக் கொண்டு கொடுக்கும்படியும் கூறுகிறார். **எனவே, குழந்தைவேலின் தந்தை பண விசயத்தில் விழிப்பாக இருப்பவர் என்பதை அறிய முடிகிறது.**

ஆகவே, குழந்தைவேலின் தந்தையிடம் போற்றத்தக்க பண்புநலன்களை நாம் காண இயலுகிறது. ஒவ்வொரு குடும்பத் தலைவரும் குழந்தைவேலின் தந்தையை முன்னுதாரணமாகக் கொண்டு செயல்பட்டால் சமுதாயம் மேன்மையுறுவது திண்ணம்.

**10. சித்தியின் பண்பு நலன்கள் மூன்றனை விளக்கி எழுதுக. (10 புள்ளி)**

சித்தி **இரக்க மனப்பான்மை இல்லாதவளாக** உள்ளாள். சான்றாக, தானப்பனின் தந்தையை மறுமணம் செய்து கொண்ட அவள் முதல் தாரத்துப் பிள்ளைகளான தானப்பனையும் சுடர்விழியையும் சொல்லொணா கொடுமைகளைக்கு ஆட்படுத்துகிறாள். பச்சிளங் குழந்தைகள் என்றும் பாராமால் பாத்திரம் கழுவுதல், கடைக்குச் சென்று பொருள்கள் வாங்குதல், எடுபிடி வேலை செய்தல் என சம்பளமில்லாத வேலைக்காரர்களைப் போல் வேலை வாங்கிறாள். அப்பிள்ளைகள் செய்யும் சிறு தவறுகளைக் கூடப் பொறுத்துக் கொள்ளாமல் அடித்தும் கடுமையான சொற்களைக் கூறி மனத்தைப் புண்படுத்துகிறாள். உதாரணமாக, பால் வாங்கி வந்த தானப்பன் அதைக் கைதவறி கீழே கொட்டிவிடுகிறான். இதைப் பெருங் குற்றமாகக் கருதும் சித்தி உடனே அருகிலிருந்த இரும்பு இடுக்கியால் தானப்பனின் முகத்தில் அடிக்கிறாள். அதனால் தானப்பனின் முகத்தில் இடப்பக்கத்தில் தழும்பும் வீக்கமும் ஏற்படுகிறது. இதை அறிந்த மீனாட்சி அம்மாளும், கொஞ்சம் இடம் தவறியிருந்தால் தானப்பனின் கண்ணுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்குமே எனச் சித்தியின் ஈவிரக்கமற்ற குணத்தை எண்ணி மனம் கொதிப்படைகிறார். ***எனவே, இச்சம்பவம் சித்தியின் ஈரம் கசியாத உள்ளத்தை நன்கு வெளிப்படுக்கிறது.***

இதைத்தவிர்த்து, சித்தி **புறம் பேசுபவளாகவும்** உள்ளாள். எடுத்துக்காட்டாக, குழந்தைவேலின் தாய் மீனாட்சி அம்மாளுடன் முதலில் நல்லுறவை வைத்துக் கொண்டிருந்த சித்தி பிறகு அவரின் உறவை முறித்துக் கொண்டு பக்கத்து வீட்டுத் தாயாரம்மாவுடன் நெருங்கிப் பழகுகிறாள். இருப்பினும், குழந்தைவேலின் வீட்டில் என்ன நடக்கிறது என்பதை அடிக்கடி மோப்பம் பிடிக்கிறாள். மீனாட்சி அம்மாள் தனது மருமகளான பூங்கொடிக்கு எந்தவொரு வேலையும் வைக்காமல் வேலைக்காரிபோல் தானே அனைத்து வேலைகளையும் செய்வதாகவும் பூங்கொடி படுத்துத் தூங்குவதாகவும் புறம் பேசுகிறாள். மேலும், அவர்கள் உறவு விரைவிலேயே பிட்டுக் கொள்ளத்தான் போகிறது என மற்றவர் குடும்ப நலனைச் சீர்கெடுக்கும் வகையில் தாயாரம்மாவுடன் புறம் பேசுகிறாள். இதை அவ்வீட்டின் வழியே சென்ற குழந்தைவேலின் காதுகளுக்கும் எட்டி அவனை வருத்தமுறச் செய்கிறது. ***எனவே, இச்சம்பவத்தின் மூலம் சித்தி புறம் பேசும் பண்பு கொண்டவள் என்பதைத் தெள்ளத் தெளிவாக அறியலாம்.***

மேலும், சித்தியிடம் **பணத்தாசையும்** மேலோங்கி இருக்கிறது. உதாரணமாக, தானப்பனின் தந்தையை மறுமணம் செய்த தொடக்கம் அனைத்துப் பண நிர்வாகத்தையும் தன் கையில் எடுத்துக் கொண்டு கணவரைத் தன் பேச்சுக்கு அடங்கும் தலையாட்டி பொம்மையாக மாற்றி வாழ்கிறாள். சித்தியின் கையில்தான் பணம் இருக்கிறது எனத் தானப்பனே ஒருமுறை குழந்தைவேலிடம் தெரிவிக்கிறான். கணவரின் மறைவிற்குப் பிறகு தானப்பன் ஊருக்குத் திரும்பி வந்ததை அவள் விரும்பவில்லை. எல்லாம் அவன் கையில் சென்றுவிடுமோ என்றெண்ணி, பெட்டி பேழையெல்லாம் ஆராய்ந்து பணம், நகை முதலியவற்றை மூட்டைகளாகக் கட்டிக் கொண்டு தன் பெற்றோருடன் ஊருக்குக் கிளம்புகிறாள். இதோடு விடாமல், தானப்பனின் தந்தையின் நகைக்கடையில் ஏறக்குறைய ஐம்பதினாயிர ரூபாய் பெறக்கூடிய நகை முதலியவை இருந்தன என்றும், அவற்றில் தனக்கும் தன் குழந்தைகள் இருவர்க்கும் பங்கு உண்டு என்றும் அந்த மூலதனத்திலும் மற்ற சொத்திலும் பாதி தர வேண்டும் என்று தானப்பனுக்கு வழக்கு அறிக்கை நோட்டீசு அனுப்புகிறாள். ***எனவே, சித்தியின் இச்செயல் அவள் பணத்தாசை மிக்கவள் என்பதை மெய்ப்பிக்கின்றன.***

**11. பூங்கொடி தந்தையின் பண்பு நலன்கள் மூன்றனை விளக்கி எழுதுக. (10 புள்ளி)**

பூங்கொடியின் தந்தை **மகளின் நலத்தில் அக்கறை கொண்டவராக** விளங்குகிறார். சான்றாக, பூங்கொடி தன் கணவரின் வீட்டாரிடம் பணம் பெற்றும் தன் பெரிய கழுத்துச் சங்கிலியைக் கொடுத்தும் தன் அண்ணனுக்கு உதவியது அவருக்குத் தெரிய வருகிறது. தாய்வீட்டு உறவையே பெரிதென நினைத்திருக்கும் பூங்கொடியின் போக்கு தவறு என அவர் உணருகிறார். இதனால் மகளின் வாழ்க்கையில் பல சிக்கல்கள் எழும்; அவளது இல்லற வாழ்க்கை பாழ்படும் என்பதை ஒரு தந்தை நிலையில் வருத்தம் கொள்கிறார். எனவே, இனிமேல் அவ்வாறு செய்யக்கூடாது எனவும் விழிப்பாக இருக்கும்படியும் அறிவுறுத்துகிறார். கணவரிடத்தில் அன்பாக நடக்கும்படியும் இனிமேல் அம்மாவின் பேச்சையோ அண்ணன் தம்பி பேச்சையோ கேட்டுத் தன் வாழ்வைக் கெடுத்துக் கொள்ளக்கூடாது என அறிவுறுத்தி மகளுக்குக் கடிதமும் எழுதி நினைவூட்டுகிறார். அதுவரையில் தான்தோன்றித்தனமாகப் புகுந்த வீட்டில் மாமன் மாமியாரையும் கணவரையும் மதிக்காது நடந்து கொண்ட பூங்கொடி, தந்தையின் அறிவுரையினால் மனம் திருந்தி தனிக்குடித்தனத்தையும்விட்டு மீண்டும் குழந்தைவேலின் பெற்றோருடன் கூட்டுக்குடும்பமாக இணைந்து வாழ்கிறாள். **இதன்மூலம், பூங்கொடியின் தந்தை மகளின் வாழ்க்கையில் அக்கறை கொண்டவர் என்பதை அறியலாம்.**

மேலும், பூங்கொடியின் தந்தை **எளிதில் பிறரை நம்புவராக** உள்ளார். உதாரணமாக, முன்னாள் கலெக்டரான பூங்கொடியின் தந்தை ஊரில் நல்ல மதிப்பு மரியாதையுடனும் பணச்சேமிப்புடன் வாழ்கிறார். ஆனால், நண்பர் ஒருவர் பூங்கொடியின் தந்தையைச் சினிமா படம் எடுக்கும்படி வற்புறுத்துகிறார். சினிமா படம் எடுத்தால் நல்ல வருமானம் ஈட்டலாம் என்ற இனிப்புப் பேச்சுக்கு அவரும் மயங்கிப் போகிறார். தன் நண்பரின் பேச்சை நம்பி தன் சேமிப்பில் இருந்த எண்பதினாயிரம் ரூபாயையும் சினிமா படம் எடுப்பதற்குச் செலவழிக்கிறார் பூங்கொடியின் தந்தை. ஆனால், 'அழகின் விலை' எனும் அப்படம் ஒருவாரம்கூட ஓடவில்லை என்பதால் போட்ட பணம் திரும்பி வராமல் பெரும் நட்டத்திற்கு ஆளாகிறார். கடைசியில் பத்தாயிரம் ரூபாயும் வரவில்லை என்ற நிலையில் பெரும் மனவுளைச்சலுக்கு ஆளாகிறார். அன்றிரவே இதய நோய் அவரைத் தாக்க பெரும் துன்பத்திற்கு ஆளாகிறார். **எனவே, பூங்கொடியின் தந்தை எளிதில் பிறரை நம்பி ஏமாறுபவர் என்பதை இச்சம்பவம் உணர்த்துகிறது.**

இதுமட்டுமல்லாது, பூங்கொடியின் தந்தை **கடன் பெறுவதை விரும்பாதவராகவும்** இருக்கிறார். பூங்கொடியின் அண்ணன் நடத்திய மின்சார சாதனங்கள் விற்கும் கடையின் வியாபாரம் நன்றாக ஓடவில்லை என்பதால் தங்கையிடம் வந்து இரண்டாயிரம் ரூபாய் கடனாகக் கேட்கிறான். தந்தைக்குத் தெரியாமல் அண்ணனுக்கு உதவ வேண்டி தன் கணவனிடம் பணம் கேட்கிறாள். குழந்தைவேல் தன்னிடம் அவ்வளவு பணம் இல்லை எனக்கூறியதால் அவன் மூலம் மாமனாரிடம் பணம் பெற்று அண்ணனுக்கு உதவுகிறாள். பூங்கொடியின் இச்செயல் அவளது தந்தைக்குத் தெரிய வந்த பொழுது கடுங்கோபத்திற்கு உள்ளாகிறார். அப்படிச் செய்தது பெருந்தவறு எனப் பூங்கொடியிடம் கடுமையாகப் பேசுகிறார். இனிமேல் கடன் கொடுக்கும் வழக்கம் வேண்டாமெனக் குழந்தைவேலிடமும் தெரிவிக்கிறார். இதனால் குடும்பத்தில் வீணான மனக்கசப்புகள் வரும் என்கிறார். தான் முன்போல் பணவசதியுடன் இல்லாவிட்டாலும் தன் ஆயுள் இருக்கும்போதே அப்பணத்தைத் திருப்பிக் கொடுக்க முயல்வதாகக் கூறுகிறார். **எனவே, இதன் மூலம் பூங்கொடியின் தந்தை கடன் பெறுவதை விரும்பாதவர் என்பதை நன்கறியலாம்.**

**12. கனகத்தின் பண்பு நலன்கள் <u>மூன்றனை</u> விளக்கி எழுதுக. (10 புள்ளி)**

கனகம் **மேற்கத்திய நாகரிகத்தைப் போற்றுபவளாக** உள்ளாள். சான்றாக, கனகம் சென்னையில் உள்ள வசதிபடைத்த குடும்பத்தைச் சார்ந்தவளாகவும் கல்லூரிப்படிப்பை முடித்த பெண்ணாகவும் இருந்ததால் அவளைத் தானப்பன் திருமணம் செய்து கொள்கிறான். குழந்தைவேல் தன் நண்பன் தானப்பனின் திருமணத்தையொட்டி அவனுக்கு விருந்து ஏற்பாடு செய்கிறான். குழந்தைவேல் குடும்பத்தினர் ஏற்பாடு செய்திருந்த திருமண விருந்தில் தானப்பனும் கனகமும் கலந்து கொள்கின்றனர். திருமண விருந்து என்பதால் மீனாட்சி அம்மாள் சிரத்தைக் கொண்டு பலவிதமான உணவு வகைகளைத் தயாரித்துப் பரிமாறிகிறார். ஆனால், கனகம் அவ்வுணவை ருசித்து உண்ணாமலும் சில உணவு வகைகளைத் தொடாமலும் இருக்கிறாள். அதற்கு மாறாக சினிமா படங்களைப் பற்றியும் நடிகர்களைப் பற்றியும் ஓயாமல் பேசுகிறாள். இதைத் தானப்பன் சுட்டிக்காட்டிய பொழுது மேனாட்டாரின் பழக்கவழக்கங்கள் அப்படித்தான் என்கிறாள். சாப்பிடும்பொழுது உணவு தவிர மற்ற விசயங்களைத்தான் பேசுவார்கள் என்றும் தாங்கள் கல்லூரி விருந்துகளில் அதையே பின்பற்றி வந்துள்ளதாகவும் கூறுகிறாள். **இதன்வழி கனகம் மேற்கத்திய நாகரிகத்தைப் போற்றுபவள் என்பது தெளிவாகிறது.**

இதைத்தவிர்த்து, கனகம் **ஆண்களிடம் நெருங்கிப் பழகுபவளாகவும்** இருக்கிறாள். உதாரணமாக, திருமண விருந்தில் குழந்தைவேல் தனக்கு நெருங்கிய நண்பன் எனத் தானப்பன் அறிமுகப்படுத்திய பொழுது சற்றும் கூச்சப்படாமல் அவனிடம் நிறைய பேசுகிறாள். பெண்கள் பெண்களோடு அமர்ந்து உண்ணும் வழக்கத்திற்கு மாறாக, தானப்பனின் பக்கத்தில் உட்கார்ந்து குழந்தைவேலையும் தன் பக்கத்தில் அமரும்படி அழைக்கிறாள்; குழந்தைவேலுக்கு இது புதுமையாகவே இருக்கிறது. இதைத் தவிர்த்து, தானப்பன் வீட்டில் இல்லாத நேரத்தில் வச்சிரநாதன் என்பவனோடு நெருக்கமாகப் பேசிப் பழகுகிறாள்; கவர்ச்சியாக உடையுடுத்தி அவனோடு வெளியே செல்கிறாள். மற்றொரு சூழலில் தானப்பன் வீட்டில் இல்லை எனத் தெரிந்ததும் திரும்பிப் போக குழந்தைவேல் முயன்ற பொழுது அவனை உள்ளே அழைத்துத் தன்னுடன் பேசிக் கொண்டிருக்கும்படி நெருங்கி வற்புறுத்துகிறாள்; குழந்தைவேல் அவளது செயலை விரும்பாமல் உடனே அங்கிருந்து கிளம்புகிறான். **எனவே, இதன் மூலம் கனகம் ஆண்களிடம் கூச்சமின்றி நெருங்கிப் பழகும் பண்புள்ளவள் என்பதை அறிய முடிகிறது.**

இதுமட்டுமல்லாது, கனகம் **பொறுப்பற்றவளாகவும்** உள்ளாள். தானப்பனைத் திருமணம் செய்தவள் வீட்டுப் பொறுப்புகளையும் வீட்டிற்கு வரும் விருந்தினர்களையும் முறையாகக் கவனிக்கத் தவறுகிறாள். அவளது பெருமளவு நேரம் கவர்ச்சியாக உடையுடுத்தி அலங்காரம் செய்து வெளியே சென்று வருவதிலே கழிகிறது. உதாரணமாக, மீனாட்சி அம்மாளும் பூங்கொடியும் வீட்டில் இல்லாத காரணத்தால் குழந்தைவேலையும் அவனது தந்தையையும் தானப்பன் தன் வீட்டில் சாப்பிட அழைக்கிறான். தானப்பனின் அழைப்பை ஏற்று அவர்கள் தானப்பனின் வீட்டிற்குச் செல்கிறனர். அச்சமயம் வெளியே சென்று வீடு திரும்பிய கனகம் அவர்களை அக்கறையோடு வரவேற்று உபசரிக்காமல் நேரே படுக்கையறைக்குச் சென்றுவிடுகிறாள். கனகத்தின் போக்கு குழந்தைவேலின் தந்தைக்குப் பிடிக்காமல் போகிறது. எனவே, மதியாதார் தலைவாசல் மிதியாதே என்பதற்கொப்ப இனித் தான் அவ்வீட்டிற்குப் போவதில்லை என்று தீர்க்கமாகக் குழந்தைவேலிடம் கூறுகிறார். **இச்சம்பவம், கனகம் பொறுப்பற்றவள் என்பதற்குச் சான்று பகர்கின்றது.**

**13. குழந்தைவேலின் பாத்திரப்படைப்பை விளக்கி எழுதுக. (20 புள்ளி)**

இலக்கிய உலகில் மின்னும் விண்மீனாகத் திகழ்பவர் டாக்டர் மு.வரதராசனார் ஆவார். இவரது பேனாமுனை செதுக்கிய சிற்பமே வாடா மாலர் நாவலாகும். நல்வாழ்விற்கு அன்பே ஆதாரம் என்ற கருப்பொருளை கொண்டு இந்நாவல் உருவாகியுள்ளது. இச்சிறந்த நாவலில் முதன்மை கதைப்பாத்திரமான குழந்தைவேல் நற்பண்புகளின் உறைவிடமாகப் படைக்கப்பட்டுள்ளான்.

அவ்வகையில் குழந்தைவேல், **உதவும் மனப்பான்மை** கொண்டவனாக நாவலாசிரியர் படைத்துள்ளார். சான்றாக, ஒரு நாள் குழந்தைவேல் தானப்பனுக்குத் துணையாகக் கடைக்குச் சென்று கத்தரிக்காய்களை வாங்கிக் கொண்டு தானப்பனை அவனது வீட்டிற்கு அனுப்பிவிட்டு வருகிறான். அரை மணிநேரம் கழித்து, தானப்பன் கண்கள் கலங்கியபடி குழந்தைவேலின் வீட்டின் முன் நிற்கிறான். விசாரித்ததில், தான் வாங்கி வந்த காய்கள் வேண்டாமென்றும் வேறு காய்கள் மாற்றிக் கொண்டு வருமும் சித்தி கோபப்பட்டு அனுப்பியதையும் கடைக்காரர் காயை எடுத்துக் கொண்டு காசு தர மறுப்பதையும் அவன் அழுது கொண்டே குழந்தைவேலிடம் விளக்குகிறான். இக்கட்டான சூழ்நிலையில் மாட்டிக்கொண்டு தவிக்கும் தன் நண்பனுக்கு உதவி செய்ய குழந்தைவேல் நினைக்கிறான். இதனை உடனே தன் தாயிடம் கூறி அக்காய்களை எடுத்துக் கொண்டு மூன்றணாவைத் தானப்பனுக்குக் கொடுத்து உதவுகிறான். **எனவே, துன்பத்தில் உள்ளவர்களுக்கு மனமிரங்கி நம்மால் ஆன உதவிகளைச் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தும் நாவலாசிரியரின் நோக்கம் இதன்வழி புலப்படுகிறது.**

மேலும். குழந்தைவேல் **நட்பைப் போற்றுபவனாகவும் படைக்கப்பட்டுள்ளான்**. உதாரணமாக, தன் பால்ய நண்பனான தானப்பன் சித்தியின் கொடுமை தாங்காது ஊரைவிட்டு ஓடிய பொழுது குழந்தைவேல் அவனின் பிரிவு துன்பத்தால் வாடுகிறான். சில வருடங்கள் கழித்து, தானப்பனிடமிருந்து கிடைத்த கடிதத்தின் மூலம் குழந்தைவேல் அவன் சென்னையில் ஒரு புலால் உணவுக்கடையில் வேலை செய்வதாக அறிகிறான். குழந்தைவேலும் சென்னையில் அமைந்துள்ள ஒரு கல்லூரியில் தன் மேற்கல்வியைத் தொடர்கிறான். அங்கு தன் நண்பனைத் தேடும் முயற்சியில், குழந்தைவேல் மரக்கறி உண்பவனாக இருந்தாலும் ஒவ்வொரு புலால் உணவுக்கடையிலும் ஏறி இறங்குகிறான். இவ்வளவு பெரிய சென்னையில் முகவரி இல்லாமல் ஒருவனைத் தேடிக் கண்டுபிடிக்க நினைப்பது முட்டாள்தனம் எனக் குழந்தைவேலை அவனது கல்லூரி நண்பர்கள் எள்ளி நகையாடினாலும் தன் தேடும் முயற்சியை ஒருபோதும் கைவிடவில்லை. தனது பால்ய நண்பனைத் தேடிக் கண்டுப்பிடித்தே தீர வேண்டுமெனக் கங்கணம் கட்டுகிறான். **ஆகவே, நல்ல நட்பு சமுதாயத்தில் மேம்பட வேண்டும் என்ற நாவலாசிரியரின் நோக்கம் குழந்தைவேலின் மூலம் பளிச்சிடுகிறது.**

இதுமட்டுமின்றி, குழந்தைவேல் **பெற்றோரை மதித்துப் போற்றுபவனாக நாவலாசிரியர் செதுக்கியுள்ளார்**. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பதற்கொப்ப வாழ்க்கையின் எச்சூழ்நிலையிலும் தன் பெற்றோரின் மனம் நோகாமல் நடந்து கொள்கிறான் குழந்தைவேல். சான்றாக, பி.ஏ தேர்வு முடிந்த பிறகு தான் மேலும் எம்.ஏ. படிக்க வேண்டும் எனத் தன் தாயிடம் வேண்டுகிறான். ஆனால், குழந்தைவேலின் தாய் அவன் அவ்வயதில் திருமணம் செய்து கொள்ள வேண்டியது அவசியம் என எடுத்துரைக்கிறார். குழந்தைவேலும் தன் பெற்றோரின் விருப்பத்திற்கு எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்காமல் அனைத்துத் திருமண ஏற்பாடுகளையும் தன் பெற்றோரின் விருப்பப்படியே விட்டுவிடுகிறான். மேலும், சுயத்தொழில் செய்யுமாறு வலியுறுத்திய தன் தந்தையின் சொல்லுக்குச் செவிசாய்த்து அவர் பிரித்துக் கொடுத்த சிமெண்ட் வியாபாரத்தையும் முறையாகக் கவனித்துக் கொள்கிறான். **ஆகவே, இன்றைய இளைஞர்கள் பெற்று வளர்த்த பெற்றோரை மதித்துப் போற்ற வேண்டும் என்று வலியுறுத்தும் நாவலாசிரியரின் நோக்கம் இதன்வழி மெய்ப்பிக்கப்படுகிறது.**

தொடர்ந்து, குழந்தைவேல் **கல்வியில் அக்கறை** கொண்டவனாகவும் இந்நாவலில் படைக்கப்பட்டுள்ளான். எடுத்துக்காட்டாக, குழந்தைவேல் பள்ளிப்படிப்பை முடித்துச் சென்னையிலுள்ள ஒரு கல்லூரியில் தன் மேற்கல்வியைத் தொடர்கிறான். அங்குக் கருணாகரன் எனும் ஒரு மாணவனுடன் ஒரே விடுதி அறையில் தங்க நேரிடுகிறது. கருணாகரன் புகைப்பிடித்தல், சீட்டாடுதல், ஊரைச் சுற்றி திரிதல் எனப் பலத் தீயப் பழக்கங்களைக் கொண்டிருக்கிறான். குழந்தைவேலுக்கும் அப்பழக்கங்களைக் கற்றுத்தர அவன் முற்பட்டாலும் குழந்தை உடன்படமறுக்கிறான். கூடாநட்பை விடுத்து, தன் பக்கத்து அறையிலுள்ள நல்ல நண்பனான பழனிச்சாமியுடனும் அவனது நண்பர்களுடனும் பழக்கம் கொண்டு நன்மாணாக்கனாகத் திகழ்கிறான். கல்வியைக் கண்ணுங்கருத்துமாகப் பயின்றதால் பி.ஏ தேர்வில் முதல் வகுப்பில் தேறுகிறான். இதனால் கல்லூரி முதல்வரிடமிருந்து பாராட்டுக் கடிதமும் பெறுகிறான். கல்வியை அதோடு நிறுத்தாமல் முதுகலை படிப்பைத் தொடரவும் விரும்புகிறான். **ஆகையால், வாழ்க்கை முன்னேற்றத்திற்கு வழிகோலும் கல்வியைப் பெறுவதில் மாணவர் சமுதாயம் அக்கறை கொள்ள வேண்டுமென்ற நாவலாசிரியரின் நோக்கத்தை இதன்வழி அறியலாம்.**

இதைத்தவிர்த்து, குழந்தைவேல் **பொறுமை குணம்** கொண்டவனாகவும் இந்நாவலில் பட்டைத் தீட்டப்பட்டுள்ளான். இல்லறவாழ்க்கை குழந்தைவேலுக்குச் சில சிக்கல்களை ஏற்படுத்துகிறது. குழந்தைவேலின் மனைவியான பூங்கொடி ஆணவம், கோபம், பிடிவாதம், பொறுப்பின்மை போன்ற குணங்கள் வாய்த்தவளாக உள்ளாள். உதாரணமாக, பூங்கொடி தனிக்குடித்தனம் வேண்டுமெனப் பிடிவாதம் பிடிக்கிறாள். தன் தாய் பூங்கொடியை அன்புடன் கவனித்துக் கொண்டாலும் அவளுக்கு தன் தாயின் அன்பு புரியவில்லையே என குழந்தைவேல் மன வேதனை அடைந்தாலும் பொறுமை காக்கிறான். அவளின் விருப்பப்படியே இருவரும் தனிக்குடித்தனம் செல்கின்றனர். அத்துடன், தானப்பனின் திருமணத்திற்குப் பிறகு, குழந்தைவேல் தன் நண்பனுக்காக வீட்டில் விருந்து வைக்க விரும்புகிறான். அவன் பலமுறை பூங்கொடியிடம் இதனைப் பற்றி மனமிறங்கி வந்து கேட்டும் அவள் ஒத்துழைக்க மறுக்கிறாள். அதற்கு மாறாக, மனம் புண்படும்படி கடுமையாகப் பேசுகிறாள். ஆனால், குழந்தைவேல் எச்சூழ்நிலையிலும் தன் பொறுமையை இழக்கவில்லை; அவளை வெறுத்து ஒதுக்கவில்லை. இறுதியாக, தன் தந்தைக்கு ஏற்பட்ட துன்பத்திற்குப் பிறகு, பூங்கொடியின் போக்கில் மாற்றம் ஏற்பட்டு வாழ்க்கையில் வசந்தம் வீசுகிறது. **ஆகவே, இல்லறச் சிக்கல்களைக் களைய தம்பதியினர் பொறுமை குணத்தைக் கையாள வேண்டுமென்பதை நாவலாசிரியர் குழந்தைவேல் பாத்திரத்தின்மூலம் சுட்டிக்காட்டியுள்ளார்.**

ஆகவே, குடும்பம், நட்பு, கல்வி, தொழில், இல்லறவாழ்க்கை என அனைத்து வகையிலும் ஒரு இளைஞனுக்கு இருக்க வேண்டிய சிறந்த பண்புகளைக் கொண்டவனாகக் குழந்தைவேல் படைக்கப்பட்டுள்ளது உள்ளங்கை நெல்லிக்கனி. இதனாலேயே அவனது வாழ்க்கை அதிக துன்பங்களும் போராட்டங்களும் இன்றி அமைதியான நீரோடையாக விளங்கியது என நாவலாசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார். இன்றைய இளைஞர்கள் குழந்தைவேலை நல்ல முன்னுதாரணமாகக் கொண்டார்களேயானால் வாழ்க்கையில் சிறந்த நிலையை அடையலாம் என்பது திண்ணம்.

**14. தானப்பனின் பாத்திரப்படைப்பை விளக்கி எழுதுக. (20 புள்ளி)**

நாவல் உலகின் முடிசூடா மன்னனாக விளங்குபவர் டாக்டர் மு. வரதராசன். இவரது இலக்கிய உளியால் செதுக்கப்பட்ட சிற்பமே வாடாமலர் நாவலாகும். இந்நாவல் நல்வாழ்விற்கு அன்பே ஆதாரம் என்ற கருப்பொருளை ஒட்டிய சமுதாய நாவலாகத் திகழ்கிறது. இதில் தானப்பன் துணைக்கதைப்பாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளான்.

அவ்வகையில், தானப்பன் **நட்பைப் போற்றுபவனாக** நாவலாசியர் படைத்துள்ளார். உதாரணமாக, சித்தியின் கொடுமை தாளாது ஊரைவிட்டு ஓடிய தானப்பன், குழந்தைவேலின் நட்பை மறக்காது அவனுக்குக் கடிதம் எழுதுகிறான். இரயில் ஏறி சென்னைக்குத் தான் வந்து சேர்ந்த முதல் எவ்வாறு புலால் உணவுக்கடையில் தனது பணி ஆரம்பமானது என எல்லாத் தகவல்களையும் பரிமாறுகிறான். தன்னை உலகம் மதித்துப் போற்றும்வரையில் தான் ஊர் திரும்பப் போவதில்லை எனவும் வெளிப்படையாகக் கூறுகிறான். மேலும், தனது திருமண விருந்தில் குழந்தைவேலைத் தன் மனைவிக்கு அறிமுகம் செய்து வைக்கும் பொழுது அவனைப்பற்றிப் பெருமையாகப் பேசுகிறான். தனக்கு இவ்வுலகில் வாழ வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டதற்குக் காரணம் தனது தங்கை சுடர்விழியும் நண்பன் குழந்தைவேலும்தான் எனக் கூறுகிறான். “இவனைவிட நண்பன் எனக்கு இவ்வுலகத்தில் இல்லை” என உளமாற அறிமுகப்படுத்துகிறான். திருமண விருந்திற்குப் பிறகு குழந்தைவேலிடம் பேசும் பொழுது தங்கள் நட்பு இருபது ஆண்டுகளுக்கு முன் இருந்தது போலவே இருக்க வேண்டுமெனவும் கூறுகிறான். **எனவே, காலம் மாறினாலும் கோலம் சிதைந்தாலும் நல்ல நட்பு என்றும் மாறாது என்பதை உணர்த்தும் நாவலாசிரியரின் நோக்கம் இதன்வழி நன்கு புலப்படுகிறது.**

இதனைத் தவிர்த்து, தானப்பன் **சுயக்காலில் நிற்பவனாகவும்** படைக்கப்பட்டுள்ளான். எடுத்துக்காட்டாக, சென்னையில் உள்ள திருவல்லிக்கேணியில் தானப்பனைத் தேடிப் பார்க்கச் செல்லும் குழந்தைவேல் அவனை இரயில் நிலையத்தில் சந்திக்கிறான். பல ஆண்டுகள் கழித்து நேரில் சந்திக்கும் இருவரும் மனம்விட்டுப் பேசுகின்றனர். புலால்கடை முதலாளி தனக்குத் துரோகம் செய்து விட்டதாகவும் தனக்குச் சேர வேண்டிய பங்கைக் கொடுக்காமல் வேலையிலிருந்து நீக்கிவிட்டதாகவும் குறிப்பிடுகிறான் தானப்பன். வேலையில்லாமல் இருக்கும் தானப்பன் சாப்பாட்டுக்கு என்ன செய்வான் என நினைத்த குழந்தைவேல் அவனுக்குப் பணம் கொடுத்து உதவ முன்வருகிறான். ஆனால், தானப்பனோ குழந்தைவேல் தரும் பணம் இரண்டு மூன்று நாள்களுக்கு மட்டுமே வருமென்றும் அதற்குப் பிறகு யார் தருவார் என்ற கேள்வியை முன்வைக்கிறான். தன் கையே தனக்குதவி எனக் கூறி தன்னால் இச்சூழலைச் சமாளித்துக் கொள்ள முடியுமென்று குழந்தைவின் பணத்தை வாங்க மறுக்கிறான். **எனவே, இன்றைய இளைஞர்கள் பிறரை எதிர்பார்க்காமல் சுயக்காலில் நின்று வாழ முற்பட வேண்டுமென்ற நாவலாசிரியரின் நோக்கத்தைத் தானப்பன் பாத்திரப்படைப்பு தாங்கிப் பிடித்துள்ளது.**

மேலும், தானப்பன் **உடன்பிறப்புகளின்மீது பாசம் கொண்டவனாகவும்** டாக்டர் மு.வ செதுக்கியுள்ளார். சான்றாக, தன் தந்தை மறுமணம் செய்து கொண்ட பிறகு சித்தியின் கொடுமைகளுக்குத் தானப்பனும் அவன் தங்கை சுடர்விழியும் ஆளாகின்றனர். ஒரு சமயம் வீட்டிற்கு வந்த பெண்கள் சுடர்விழியைப் பற்றி விசாரிக்கையில், அவள் வேலைக்காரப் பெண் எனத் தன் எதிரிலேயே தன் தங்கையைப் பற்றிச் சித்தி சொல்வதைக் கேட்டுத் தானப்பன் கோபம் கொள்கிறான். இதைப் பற்றிக் குழந்தைவேலின் தாயிடமும் முறையிடுகிறான். மற்றொரு சம்பவத்தில், திருமணம் முடித்த சுடர்விழிக்கு ஆறாம் மாதம் என்பதால் அவளது கணவர் முருகய்யா தாய்வீட்டிலே விட்டுச் செல்கிறார். சுடர்விழி ஓர் அழகான ஆண் குழந்தையைப் பெற்றெடுக்கிறாள். மூன்றாம் மாதமே சுடர்விழியையும் குழந்தையையும் அழைத்துச் செல்ல முருகய்யா வந்த பொழுது இன்னும் இரண்டு மாதம் தன்னோடு இருந்து செல்லும்படி தானப்பன் வற்புறுத்துகிறான். தாய்மாமன் என்ற முறையில் குழந்தை செங்கதிருக்குப் பொன் அரைஞானும், பொன் காப்பும் செய்து அணிவிக்கிறான். எனவே, மகிழ்ச்சியான குடும்ப வாழ்விற்கு உடன்பிறப்புகளின் மீதுள்ள பாசம் அதிகரிக்க வேண்டுமென்ற நாவலாசிரியரின் நோக்கம் இதன்வழி தெளிவாகிறது.

இதுமட்டுமின்றி, **வேகத்துடனும் சுறுசுறுப்புடனும் செயல்படுபவனாக** நாவலாசிரியர் தானப்பனைப் பட்டைத்தீட்டியுள்ளார். உதாரணமாக, தேர்தலில் வெற்றிப் பெற்ற பிறகு தானப்பன் குழந்தைவேலைச் சந்திக்கும் பொழுது தான் புலால் உணவுக்கடையைத் திறக்கவிருப்பதாகத் தெரிவிக்கிறான். அவ்வுணவுக் கடைக்கு 'பாம்பே தில்குஷ் ஓட்டல்' எனப் பெயரிடப்பட்டிருப்பதையும் கூறுகிறான். சொல்வீரனாக மட்டுமிருக்காது அவன் விரைவிலேயே உணவுக்கடையைத் தொடங்கிவிடுகிறான். கடையை விருத்தி செய்ய கால நேரம் பார்க்காமல் பம்பரமாய்ச் சுழல்கிறான். ஆட்களுக்கு நல்ல பயிற்சி தந்து தேர்ச்சிப் பெறச் செய்கிறான். தானப்பனின் வியாபார உத்திகளினால் இரண்டு வாரங்களுக்குள் ஊரிலேயே மற்ற எல்லா உணவுக்கடைகளையும்விட அது பெரிதாகப் பெயர் பெற்றுவிடுகிறது. எந்நேரமும் அவனது உணவுக்கடையில் மக்கள் கூட்டம் நிறைந்திருக்கிறது. இதனால் நல்ல வருமானம் ஈட்டி தன் நிலையை உயர்த்திக் கொள்கிறான். எனவே, சித்தியின் கொடுமை, ஊரைவிட்டு ஓடுதல், முதலாளியின் துரோகம், சிறைவாசம் எனப் பற்பல போராட்டங்களையும் தோல்விகளையும் சந்தித்திருந்தாலும் வாழ்க்கையில் உயர வேண்டும் எனத் தானப்பன் கொண்ட இலட்சிய வேட்கை வெற்றிப் பெற்றதற்கு அவனது வேகமும் சுறுசுறுப்புமே காரணம் என்பது தெளிவான உண்மை. **இதனை இன்றைய இளைஞர்களும் செயல்படுத்த வேண்டும் என்ற நாவலாசிரியரின் நோக்கம் இங்குப் பதியம் செய்யப்பட்டுள்ளது.**

தொடர்ந்து, தானப்பன் **முரட்டுக் குணம் கொண்டவனாகவும்** நாவலாசிரியர் வலம் வைத்துள்ளார் வாழ்க்கையில் இளமைக் காலம்தொட்டுப் போராட்டம் நிறைந்த பாதையைக் கடந்து வந்ததால் காலம் அவனை முரட்டுக் குணம் வாய்ந்தவனாக மாற்றிவிடுகிறது. சான்றாக, ஊரைவிட்டு ஓடிச் சென்ற தானப்பன் தந்தையின் மறைவைப் பற்றிக் குழந்தைவேல் தந்தி அனுப்பியவுடன் ஊர் திரும்புகிறான். தந்தைக்குச் செய்ய வேண்டிய இறுதிக் காரியங்களை அனைத்தையும் முறையாகச் செய்து முடித்தவன் பின்னர் தந்தையின் நகைக்கடைக்குச் செல்கிறான். கடப்பாரையைக் கொண்டு கடையின் பூட்டை உடைத்துப் புதிய பூட்டைப் போடுகிறான். இதை அறிந்த சித்தியின் தந்தை ஆள் சேர்த்து நியாயம் கேட்க, இனிமேல் அது தன் கடை என்றும் அதைப் பற்றிக் கேட்க யாருக்கும் உரிமை இல்லையென்றும் அங்கே யாரேனும் ஏதாவது செய்தால் உதை விழும் எனவும் கடுமையாக எச்சரிக்கிறான். தானப்பனின் முரட்டுக்குணத்தைக் கண்டு பயந்து அங்கிருந்தவர்கள் எதையும் பேசாமல் போகின்றனர். **எனவே, இளைஞர்கள் முரட்டுக்குணத்தை விடுத்து நயமான முறையில் பேசிப்பழகுவதன் மூலம் பிறரது ஆதரவைப் பெறலாம் என்ற கருத்தை நாவலாசிரியர் இங்கு நிலைநிறுத்தியுள்ளார்.**

ஆகவே, தானப்பனின் பாத்திரப்படைப்பின் மூலம் போராட்ட வாழ்க்கையைக் கடந்துவரும் ஒரு சராசரி இளைஞனின் இயல்பான தன்மையை நமக்குக் காட்டுகிறார் நாவலாசிரியர். அன்பும் அரவணைப்பும் நல்வழிகாட்டலும் இருந்தால் தானப்பனைப் போன்ற இளைஞர்களின் ஆக்கச் சக்தி நன்முறையில் பயன்பட்டுச் சமுதாய மேன்மைக்கு வழிகோலும் என்பது திண்ணம் என்ற செய்தியை டாக்டர் மு.வ இந்நாவலில் பதியம் செய்துள்ளார்.

**15. சுடர்விழியின் பாத்திரப்படைப்பை விளக்கி எழுதுக. (20 புள்ளி)**

இருபதாம் நூற்றாண்டின் தமிழக வரலாற்றிலும் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் உலகத் தமிழர்களின் உள்ளங்களைக் கவர்ந்த முதல் தமிழ்ப்பேராசிரியர் டாக்டர் மு. வரதராசன் ஆவார். இவரது கற்பனை நீரோடையில் உருவான சிறந்த இலக்கியப் படைப்பே வாடா மலர் நாவல். நல்வாழ்விற்கு அன்பே ஆதாரம் என்ற கருப்பொருளைத் தாங்கி இந்நாவல் உருப்பெற்றுள்ளது. இந்நாவலில் துணைக்கதைப்பாத்திரமாகத் திகழும் சுடர்விழியிடத்தில் பெண்மையின் உன்னத பண்புகளைக் காண இயலுகிறது.

அவ்வகையில், சுடர்விழி **பெரியோரை மதிப்பவளாகப்** படைக்கப்பட்டுள்ளாள். சுடர்விழியின் இப்பண்பு சிறு வயது முதற்கொண்டே அவளிடத்தில் குடிகொள்கிறது. சான்றாக, சுடர்விழி ஆறு வயது குழந்தையாக இருக்கும் காலத்தில் பக்கத்து வீட்டுத் தாயாரம்மா கொடுத்த வடையைத் தின்றதால் சித்தி அவளைக் கன்னத்தில் அறைந்துவிடுகிறாள். இதனால் அழுது கொண்டிருந்த சுடர்விழியிடம் குழந்தைவேலின் தாய் விசாரிக்க அவள் நடந்தவற்றைக் கூறுகிறாள். சித்தி கடுமையாக நடந்து கொண்டாலும் அவளுக்கு அடங்கி நடக்க வேண்டுமெனக் குழந்தைவேலின் தாய் கூறியதைச் சுடர்விழி கேட்டுக் கொள்கிறாள். சில காலத்திற்குப் பிறகு ஒருநாள் குழந்தைவேலின் தாய் சுடர்விழிக்குப் பூச்சரத்தைச் சூட எத்தனித்த வேளையில் சுடர்விழி அதனை நயமாக மறுக்கிறாள். அப்பூவைச் சூடிக்கொண்டால் சித்திக்குக் கோபம் வரும் என்பதால் தன்னை மன்னித்துவிடுமாறு குழந்தைவேல் தாயிடம் வேண்டுகிறாள். அச்சிறு வயதில் அறிவோடும் அடக்கத்தோடும் நடக்கும் சுடர்விழியின் உயர்பண்பைக் கண்டு மீனாட்சி அம்மாளும் வியந்து போய் அவளை வாழ்த்துகிறார். **எனவே, பெண்கள் பெரியோரை மதித்து நடக்கும் உயர்குணம் கொண்டவர்களாக இருக்க வேண்டுமென்ற நாவலாசிரியரின் நோக்கம் சுடர்விழியின் மூலம் பளிச்சிடுகிறது.**

இதுமட்டுமல்லாது, சுடர்விழி **கணவரின் கொள்கைகளைப் போற்றுபவளாகவும்** நாவலாசிரியர் படைத்துள்ளார். சுடர்விழியின் கணவரான முருகய்யா எளிய வாழ்க்கை வாழும் பண்புடையவர். தமிழ் ஆசானான அவர் உடுத்தும் உடை, உண்ணும் உணவு என அனைத்திலும் எளிமையைப் போற்றுகிறார்; ஆடம்பரத்தை வெறுக்கிறார். கணவன் எவ்வழியோ தானும் அவ்வழி எனச் சுடர்விழியும் கணவரைப் போன்று எளிய வாழ்க்கை வாழத் தொடங்குகிறாள்; தேவைகளைக் குறைத்துக் கொள்கிறாள். சான்றாக, தனது அண்ணன் தானப்பனின் திருமணத்தில்கூட மற்றவர்களைப் போல் பட்டுச்சேலையும், தங்க வைர நகைகள் அணியாமல் மிகச் சாதாரண சேலை அணிந்து எளிய கோலத்தில் வலம் வருகிறாள். மேலும், பூக்களைப் பறிக்கக் கூடாது என்ற தன் கணவரின் கொள்கைக்கு ஏற்ப குழந்தைவேலின் தாய் தனக்குப் பூச்சூடுவதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறாள். கணவரின் விருப்பமே தன்னுடைய விருப்பம் எனக் குழந்தைவேலின் தாயிடம் கூறுகிறாள். **எனவே, பெண்கள் தங்கள் கணவரின் கொள்கைகளுக்கு உடன்பட்டு வாழ்ந்தால் மனமொத்த தம்பதிகளாக வாழ முடிமென்று நாவலாசிரியர் வலியுறுத்தியுள்ளார்.**

இதுமட்டுமல்லாது, சுடர்விழி **தன்மானம் மிக்கவளாகப் படைக்கப்பட்டுள்ளாள்**. உதாரணமாகத் தன் அண்ணன் தானப்பனின் திருமணத்தில் சுடர்விழி தன் கணவர் முருகய்யாவுடனும் மகன் செங்கதிருடனும் கலந்து கொள்கிறாள். இருப்பினும், திருமணத்தில் கலந்து கொண்ட பிறரைப் போல் அல்லாமல் தங்கள் கொள்கைபடி எளிமையான முறையிலேயே உடுத்தியிருக்கின்றனர். சுடர்விழி பட்டுச்சேலைக்குப் பதிலாகப் பருத்தித் துணி அணிந்திருப்பதையும் வைரநகை இல்லாத கோலத்தையும் பார்த்துத் தானப்பனின் மாமனார் வீட்டார் அவளை மதிக்காமல் அலட்சியம் செய்கின்றனர். இதனைப் புரிந்து கொண்ட சுடர்விழி திருமணம் முடிந்த கையோடு திருமண விருந்தில் கலந்து கொள்ளாமல் அவ்விடத்தைவிட்டு வெளியேறுகிறாள். **ஆகையால், தன்மானமிக்க வாழ்க்கையே சிறப்பைத் தருமென்ற கருத்தை நாவலாசிரியர் சுடர்விழியின் மூலம் உணர்த்தியுள்ளார்.**

தொடர்ந்து, சுடர்விழி **குடும்பப்பற்று** எனும் பண்பையும் தன்னகத்தே கொண்டவளாகவும் நாவலாசிரியர் பட்டைத்தீட்டியுள்ளார். சான்றாக, தந்தையின் மறைவிற்குப் பிறகு ஊர் திரும்பிய தானப்பன் தனது தந்தையின் நகைக்கடையில் தனக்கு உரிமை உள்ளதால் அதைத் தன்வயமாக்கிக் கொள்கிறான். தானப்பனின் வருகையை விரும்பாத சித்தி வீட்டிலிருந்த பணம், நகை அனைத்தையும் மூட்டைக்கட்டிக் கொண்டு ஊருக்குக் கிளம்புவதோடு தானப்பன் மீது வழக்குத் தொடுக்க அறிக்கையும் அனுப்புகிறாள். இதற்குப் பதிலடியாகத் தானப்பனும் எதிர்வழக்குத் தொடுக்க முடிவெடுத்திருக்கும் செய்தி சுடர்விழிக்கு எட்டுகிறது. குடும்பத்திற்குள்ளே இத்தகைய நீதிமன்ற வழக்குகள் உண்டானால் அது குடும்பச் சீரழிவுக்கு வித்திடும் என உணருகிறாள். எனவே, தானப்பன் சித்தியின் மீது வழக்குப் போடக்கூடாது என்பதற்காகக் கணவர் முருகய்யாவை அவனிடம் பேசச் சொல்லி அனுப்புகிறாள். **எனவே, ஒவ்வொரிடத்திலும் குடும்பப்பற்று மேலோங்கினால் மேன்மையான சமுதாயத்தை உருவாக்கலாம் என வலியுறுத்தும் நாவலாசிரியரின் நோக்கத்தை நாம் அறியலாம்.**

இறுதியாக, சுடர்விழி **அனைவரிடமும் அன்பாகப் பழகும் குணம்** வாய்ந்தவளாகவும் படைக்கப்பட்டுள்ளாள். எடுத்துக்காட்டாக, குழந்தைவேலின் வீட்டிற்கு வந்த சுடர்விழி அவன் மனைவி பூங்கொடியிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறாள். புதிய அறிமுகம் என்றாலும் பூங்கொடியுடன் பல விசயங்களைக் கலகலப்பாகப் பேசிச் சிரிக்கிறாள். அத்துடன், குழந்தைவேலிடமும் மீனாட்சி அம்மையாரிடமும் இதே போல் பேசிப் பழகுகிறாள். தான் கணவரின் கொள்கைகளை ஏற்று வாழ்வதன் அடிப்படை காரணத்தையும் மீனாட்சி அம்மையாரிடம் தத்துவமாக விளக்கிச் சொல்கிறாள். சுடர்விழியின் இனிய பேச்சும் செயலும் வீட்டில் குதூகலத்தை ஏற்படுத்துகிறது. இள வயதில் சித்திக்கு அடங்கி வாயிற்படிக்கு வெளியில் ஒடுங்கி நின்ற சுடர்விழியா இவள் எனக் குழந்தைவேலும் பிரமித்துப் போகிறான்; திருமண வாழ்வு அவளை மாற்றி அமைத்துள்ளதை எண்ணிப் பூரிக்கிறான். **எனவே, அனைவரிடமும் அன்பாகப் பழகும் சிறந்த குணம் மகிழ்ச்சியான குடும்பத்திற்கு அடித்தளமாக அமையுமென நாவலாசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார்.**

ஆகவே, டாக்டர் மு.வ அவர்கள் தனது இலக்கிய உளியால் சுடர்விழியை உயரிய பெண்மையின் முழு உருவமாகச் செதுக்கியுள்ளதை அறிய முடிகிறது. நவநாகரிகம் எனும் போர்வையில் பெண்மையின் உயர்குணங்கள் சிதைந்து வரும் இக்காலக்கட்டத்தில் சுடர்விழியை முன்னுதாரணமாகக் கொண்டு பெண்கள் வாழ முற்பட்டால் குடும்பம் செழிக்கும்; சமுதாயம் வளப்பம் பெறும்; நாடு மேன்மையுறும் என்பது திண்ணம்.

**16. முருகய்யாவின் பாத்திரப்படைப்பை விளக்கி எழுதுக. (20 புள்ளி)**

இலக்கிய அன்னைக்கு அருந்தொண்டு ஆற்றியவர் டாக்டர் மு.வரதராசன். இவரது சமுதாய நன்நோக்கோடு எழுதப்பட்ட நாவலே வாடா மலர் ஆகும். நல்வாழ்விற்கு அன்பே ஆதாரம் என்ற கருப்பொருளை ஒட்டி இந்நாவல் புனையப்பட்டுள்ளது. இதில் முருகய்யா துணைக்கதைப்பாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளார்.

அவ்வகையில், முருகய்யா **எளிமையான வாழ்க்கையை** விரும்புவராக நாவலாசிரியர் படைத்துள்ளார். சான்றாக, ஊர் மெச்ச வேண்டும் என்பதற்காகப் பகட்டாக உடையுடுத்தித் திரியும் உலகத்தோர் மத்தியில் முருகய்யா பட்டாடைகளைத் தவிர்த்து எப்பொழுதும் எளிமையான கதர் ஆடைகளையே உடுத்துகிறார். தானப்பனின் திருமணத்தில் குடும்பத்தோடு கலந்து கொள்ளும் வேளையிலும் அவர் எளிமை பண்பையே கடைப்பிடிக்கிறார். அவரின் எளிய தோற்றத்தைக் கண்டு குழந்தைவேலும் வியப்புக்குள்ளாகிறான். மனைவி சுடர்விழியும் மகனும்கூட பட்டாடை அணியாமல் திருமணத்தில் கலந்து கொண்டிருப்பதைக் குழந்தைவேல் சுட்டிக்காட்டியபொழுது, எளிமையாக உடுத்துவது மதிப்புக் குறைவான செயல் என்ற எண்ணம் சமுதாயத்தில் மாற வேண்டும் எனக் கருத்துரைக்கிறார். மேலும், தானப்பன் தனது திருமண இசையரங்கின்பொழுது விலையுயர்ந்த நீல நிறமான ட்வீட் துணியில் தைத்த கோட்டும் கால்சட்டையும் அணிந்து கொண்டு ஐரோப்பிய உடையில் விளங்கினான். தானப்பனின் இத்தகைய ஆடம்பர திருமணத்தைக் கண்டு முருகய்யா வீண் செலவுகள் என்று குழந்தைவேலிடம் கூறுகிறார். **ஆகவே, தேவைகளைக் குறைத்து எளிமை வாழ்வை அமல்படுத்துவது சமுதாய மேன்மைக்கு வழிவகுக்கும் என்று நாவலாசிரியரின் நோக்கத்தை முருகய்யாவின் பாத்திரம் தெளிவுபடுத்துகிறது.**

மேலும், முருகய்யா **பொதுநலச்சிந்தனை** கொண்டவராகவும் நாவலாசிரியர் உலா வர வைத்துள்ளார். எடுத்துக்காட்டாக, அவரின் ஊரில் சில ஆண்டுகளுக்கு முன் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. ஆனால், பக்கத்து நகரத்தில் அரிசி ஆலை ஓடிக் கொண்டிருந்தது. இதனால், அவரின் உள்ளூர் மக்கள் கிராமத்திலிருந்து நெல் மூட்டைகளைக் கொண்டு சென்று அவ்வாலையில் அரிசியாக்கிக் கொண்டு வருவார்கள். முருகய்யா தம் ஊரில் உள்ள பசியால் வாடும் ஏழைகளின் வாழ்வில் அக்கறை கொண்டு அவர்களுக்கெனத் திட்டம் தீட்டினார். ஏழை மக்களின் அவலநிலையை ஊர் மக்களுக்குக் காட்டி நெல் மூட்டைகளை அவர்களிடம் கொடுத்து அரிசியாக்க வேண்டிக் கொண்டார். ஊர் மக்களுக்கும் அவர்களுக்குக் கூலிக்குப் பதிலாக அரிசியைக் கொடுத்துப் பசியைப் போக்கினர். **இதன் வழி கைம்மாறு எதிர்பார்க்காமல் மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற தூய எண்ணம் கொண்டவர் சமுதாயத்தில் அதிகரிக்க வேண்டுமென நாவலாசிரியர் வலியுறுத்தியுள்ளார்.**

அதுமட்டுமில்லாமல், முருகய்யா **குடும்பப்பற்று** மிக்கவராகவும் நாவலாசிரியர் செதுக்கியுள்ளார். சான்றாக, தானப்பனின் தந்தையின் மறைவிற்குப் பிறகு சித்தி தன் குழந்தைகளை அழைத்துக் கொண்டு பெற்றோருடன் ஊருக்குச் சென்றுவிடுகிறாள். பின்னர், சொத்துப் பங்கீடு தொடர்பாகத் தானப்பனுக்கு வழக்கு அறிக்கை அனுப்புகிறாள். அதற்கு மறுமொழியாகத் தானப்பனும் சித்தி தனது தந்தையின் மறைவுக்குப் பிறகு பதினாயிரம் ரூபாயையும் நகைநட்டுகளையும் திருடிச் சென்றதுடன் கடைக்கணக்கிலிருந்து ஊரில் நிலம் வாங்கி இருப்பதால் அதில் தனக்கும் தன் தங்கை சுடர்விழிக்கும் பங்கு உண்டென்பதால் தானும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப் போவதாக மருட்டி அறிக்கை அனுப்புகிறான். இதனைக் கேள்வியுற்ற முருகய்யா உடனே சொத்து வழக்கு வேண்டாமென்றும் அது குடும்பச் சீரழிவுக்கு வித்திடுமெனவும் குழந்தைவேலின் மூலம் தானப்பனிடம் கூறச் செய்கிறார். **எனவே, ஒவ்வொரிடத்திலும் குடும்பப்பற்று மேலோங்கினால் மேன்மையான சமுதாயத்தை உருவாக்கலாம் என வலியுறுத்தும் நாவலாசிரியரின் நோக்கத்தை நாம் அறியலாம்.**

இதைத்தவிர, முருகய்யா **சான்றோரைப் போற்றுபவராகவும்** பட்டைத்தீட்டப்பட்டுள்ளார். எடுத்துக்காட்டாக, சுடர்விழி குழந்தையைப் பெற்றெடுத்த செய்தி அறிந்து குழந்தைவேலும் தானப்பனும் ஊருக்கு இரயிலில் புறப்பட்டனர். அங்கு வந்தடைந்து சுடர்விழியையும் குழந்தையையும் கண்டு மகிழ்கின்றனர். பின்பு தானப்பன் சினிமா படத்திற்குச் செல்ல விரும்புகிறான். ஆனால், முருகய்யா தானப்பனின் விருப்பத்திற்கு இசையாமல் தமிழறிஞர் திரு.வி.க வின் அருமை பெருமைகளைக் கூறுகிறார். திரு.வி.கவின் வாழ்வியலுக்கான சீரிய அறக்கருத்துகளைச் செவிமடுத்துத் தானப்பனும் குழந்தைவேலும் பயன்பெற வேண்டுமெனக் கருதுகிறார். எனவே, அவர்கள் இருவரையும் திரு.வி.க வின் சொற்பொழிவைக் கேட்க அருட்பா மன்றத்திற்கு அழைத்து செல்கிறார். **எனவே, சான்றோரிடத்தில் ஆழ்ந்த பற்று கொண்டு அவர் வழிநடப்பது வாழ்க்கை முன்னேற்றத்திற்கு ஊன்றுகோலாக இருக்குமென நாவலாசிரியர் வலியுறுத்தியுள்ளார். .**

இறுதியாக, முருகய்யா **கடமைத் தவறாதவராகவும்** நாவலாசிரியர் மிளிர வைத்துள்ளார். உதாரணத்திற்கு, தானப்பன் திரு.வி.க வின் சொற்பொழிவைக் கேட்டதன் தொடக்கம் பல அறக்கருத்துகளைக் கொண்ட நூல்களை வாசித்துச் சீரான வாழ்க்கை வாழத் தொடங்குகிறான்; நன்மை பயக்கும் நற்காரியங்களையும் செய்யத் தொடங்குகிறான். அவ்வகையில், சித்தி மகள் மனோன்மணிக்குத் திருமணம் நடத்தவும் தான் வாங்கிய நிலத்தில் பள்ளிக்கூடம் கட்டவும் தானப்பன் எண்ணம் கொள்வதுடன் அதனை முருகய்யாவிடமும் தெரிவிக்கிறான். ஆனால், காலம் செய்த கோலத்தின்படி தானப்பன் யாரும் எதிர்பாரா வண்ணம் திடீர் மரணம் எய்துகிறான். தானப்பனின் இறப்பிற்குப் பிறகு, அவனது விருப்பத்தை நிறைவேற்றும் கடமை தனக்கிருப்பதை முருகய்யா உணர்கிறார். எனவே, தன் ஆசிரியர் தொழிலைவிட்டு வந்து அவன் வாங்கியிருந்த நிலத்தில் ஒரு பள்ளிக்கூடத்தைக் கட்டி அதில் முதல் வேலையாக மனோன்மணிக்குத் திருமணத்தையும் நடத்தி தானப்பனின் வேண்டுகோளை நிறைவேற்றினார். **எனவே, சமுதாயத்தில் ஒவ்வொருவரும் தங்களது கடமையுணர்ந்து செயல்பட்டால் வளமான வாழ்க்கையை உருவாக்கலாம் என நாவலாசிரியர் உணர்த்தியுள்ளார்.**

ஆகவே, நாவலாசிரியர் முருகய்யா எனும் பாத்திரப்படைப்பின் மூலம் நாம் வாழ்க்கையில் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டிய சிறந்த பண்புநலன்களை நாவலாசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார். இன்றைய சமுதாயம் முருகய்யாவை ஒரு தலைச்சிறந்த முன்னுதாரணமாகக் கொண்டு செயல்பட்டால் வாழ்வு சிறக்கும் என்பது திண்ணம்.

**17. பூங்கொடியின் பாத்திரப்படைப்பை விளக்கி எழுதுக. (20 புள்ளி)**

கற்பனைக் குதிரைக்குக் கடிவாளமிட்டு நாவல் எனும் தேரோட்டுவதில் வல்லவர் டாக்டர் மு. வரதராசன். இவரது பேனாமுனை செதுக்கிய சிற்பமே வாடா மலர் நாவல். நல்வாழ்விற்கு அன்பே ஆதாரம் என்ற கருப்பொருளை உள்வாங்கி இந்நாவல் எழுதப்பட்டுள்ளது. இந்நாவலில் குழந்தைவேலின் மனைவி எனும் கதைப்பாத்திரத்தில் வலம் வரும் பூங்கொடியின் மூலம் இன்றைய பெண்களுக்குச் சில செய்திகளை உணர்த்தும் வண்ணம் நாவலாசிரியர் படைத்துள்ளார்.

அவ்வகையில், பூங்கொடி **பொறுப்பில்லாதவளாக** நாவலாசிரியர் படைத்துள்ளார். எடுத்துக்காட்டாக, குழந்தைவேலுடன் திருமண பந்தத்தில் நுழையும் பூங்கொடி மனைவியாகவும் மருமகளாகவும் தன் பொறுப்புகளை முறையே ஆற்றவதில் அலட்சியம் காட்டுகிறாள். ஒரு நாள், குழந்தைவேல் தெருவில் நடந்து செல்லும் பொழுது தானப்பனின் சித்தியும் தாயாரம்மாவும் பேசிக் கொண்டிருப்பது அவன் செவியில் விழுகிறது. பூங்கொடி வீட்டில் எவ்வித வேலைகளும் செய்யாமல் சுகமாகப் படுத்து உறங்குவதாகவும் வீணை மீட்டிக் கொண்டிருப்பதாகவும் மாமியார்தான் வேலைக்காரிபோல் அனைத்து வேலைகளைச் செய்வதாகவும் அவர்கள் பேசிக் கொண்டிருக்கின்றனர். இதுவரையில் இவ்விசயத்தைப் பற்றி அறிந்திராத குழந்தைவேல் வீட்டிற்கு விரைந்து சென்று உண்மை நிலவரத்தைக் கண்டறிய முற்படுகிறான். அங்கே குழந்தைவேலின் தாய், மகன் சாப்பிட வேண்டுமே என அரக்கப் பரக்க சமையலறையில் உணவுத் தயாரிப்பதில் ஈடுபட்டிருக்க, பூங்கொடியோ அறையில் படுத்து ஓய்வெடுத்துக் கொண்டிருப்பதைக் கண்ணாரக் கண்டு தான் கேட்டது உண்மையே என்றுணர்கிறான். **எனவே, குடும்ப மகிழ்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பெண்கள் தங்கள் பொறுப்புணர்ந்து செயல்பட வேண்டுமென நாவலாசிரியர் வலியுறுத்தியுள்ளார்.**

மேலும், பூங்கொடி **ஆணவம் மிகுந்தவளாகவும்** படைக்கப்பட்டுள்ளாள். உதாரணத்திற்கு, தானப்பனின் திருமணத்திற்குப் பிறகு, அவனுக்கு விருந்து வைக்க குழந்தைவேல் விரும்பினாலும் பூங்கொடி அதற்கு ஒத்துவரவில்லை. இதனால், குழந்தைவேல் தாய்வீட்டிலேயே விருந்துக்கு ஏற்பாடு செய்கிறான். அதில், பூங்கொடி கலந்து கொள்ளவில்லை. இதை அறிந்த குழந்தைவேலின் தாய், மருமகள் சாப்பிட வேண்டுமே என அக்கறை கொண்டு குழந்தைவேலின் வீட்டிற்கு உணவை அனுப்பி வைக்கிறார். பூங்கொடி, மாமியார் அனுப்பிய விருந்துணவை உண்ணாமல் அவமதிப்புச் செய்கிறாள். விருந்திற்குப் பிறகு வீடு திரும்பிய குழந்தைவேல் தாய் அனுப்பிய உணவைப் பூங்கொடி இன்னும் உண்ணவில்லை என்பதை அறிகிறான். அச்சமயத்தில் அங்கு வந்த வேலைக்காரியிடம் அவ்வுணவை எடுத்துக் கொள்ளுமாறும் பின்பு உணவுத்தூக்கியைத் துலக்கி மாமியார் வீட்டில் கொடுத்துவிட்டுப் போகுமாறு பூங்கொடி பணிக்கிறாள். **எனவே, ஆணவ குணத்தை அழித்து அனைவரையும் மதித்து வாழும் பண்பு மேம்பட வேண்டுமென நாவலாசிரியர் பூங்கொடியின் மூலம் உணர்த்தியுள்ளார்.**

அதனைத் தவிர்த்து, பூங்கொடி **பிடிவாத குணம்** கொண்ட பெண்ணாகவும் நாவலாசிரியர் உருவாக்கியுள்ளார். சுடர்விழி குழந்தை பெற்றெடுக்கும் நாள் நெருங்கிவிட்டதால் குழந்தைவேலின் தாய் அவளைக் கவனித்துக் கொள்ள ஊருக்குச் சென்றுவிடுகிறார். அவ்வேளையில், பூங்கொடி தன் தாய்க்குக் கடிதம் எழுதி அனுப்பி அவளை ஊருக்கு அழைக்கும்படி செய்துவிடுகிறாள். ஆனால், வீட்டில் தாய் இல்லாத நிலையில் அவளும் ஊருக்குச் சென்றுவிட்டால் வீட்டில் சமைக்க ஆளில்லாமல் போகுமெனக் குழந்தைவேல் எடுத்துக் கூறியது செவிடம் காதில் ஊதிய சங்காகிறது. தாய் வீட்டிற்குச் சென்றே ஆக வேண்டுமெனக் குரங்குப்பிடியாய்ப் பூங்கொடி ஊருக்குப் புறப்பட்ட பிறகு, குழந்தைவேலும் அவனது தந்தையும் உணவகத்திலிருந்து தருவித்த உணவையும் ஞாயிற்றுகிழமைகளில் தானப்பனின் வீட்டிலும் சாப்பிடும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். **எனவே, பெண்கள் பிடிவாத குணத்தை விட்டொழித்து விட்டுக்கொடுத்து வாழும் போக்கைக் கொண்டிருப்பது அவசியம் என நாவலாசிரியர் உணர்த்தியுள்ளார்.**

அதுமட்டுமல்லாமல், பூங்கொடி **பிறரின் அன்பை உணராதவளாகவும்** நாவலாசியர் வலம்வர வைத்துள்ளார். எடுத்துக்காட்டாக, தன்னைச் சந்திக்க வந்த பெற்றோருடன் செல்லும் பூங்கொடி தாய்வீட்டிலேயே தங்கிவிடுகிறாள். பல நாட்களாகியும் அவர்களிடமிருந்து எவ்வித கடிதமும் வரவில்லை. குழந்தைவேல் அவர்களுக்குக் கடிதம் அனுப்பிய பொழுது மறுமொழி கடிதத்தில் பூங்கொடியை அழைத்து செல்ல வருமாறும் குறிப்பிடவில்லை. குழந்தைவேல் நேரடியாகக் கடலூருக்குப் பூங்கொடியை அழைத்து வரச் செல்கிறான். சென்ற இடத்தில் பூங்கொடியின் பெற்றோர் அவனைச் சரியாக வரவேற்கவில்லை. மாறாக, பூங்கொடியின் தாய் தனிக்குடித்தனம் பற்றி குழந்தைவேலிடம் பேசுகின்றார். பூங்கொடியிடம் அவளுக்கு வீட்டில் என்ன குறை எனக் குழந்தைவேல் நேரிடையாகவே கேட்கும் பொழுது, தனக்குத் தனிக்குடித்தனம்தான் வேண்டுமெனவும் குழந்தைவேலின் பெற்றோர் வீட்டில் இருக்க தனக்கு விருப்பம் இல்லையெனவும் தீர்க்கமாகக் கூறுகிறாள். இதனைக் கேட்டுக் குழந்தைவேல் பெரும் வருத்தத்திற்குள்ளாகிறான். **எனவே, பிறரது அன்பைப் புரிந்து கொள்ளும் தன்மையை வளர்த்துக் கொண்டோமேயானால் வாழ்க்கை இனிக்கும் என்பதை நாவலாசிரியர் உணர்த்தியுள்ளார்.**

இறுதியாக, பூங்கொடி **செய்த தவற்றை உணரும் பெண்ணாகவும்** படைக்கப்பட்டுள்ளாள். சான்றாக, முன்னாள் கலெக்டரின் மகள், படித்தவள், பணம் படைத்தவள் என்ற ஆணவத்துடம் பிறரை மதிக்காது தான் தோன்றித்தனமாகச் செயல்பட்ட பூங்கொடிக்குக் காலம் நல்ல பாடம் புகட்டுகிறது. பூங்கொடியின் தந்தை தன் நண்பரை நம்பி இருந்த பணத்தையெல்லாம் செலவழித்துச் சினிமா படம் எடுக்கிறார். ஆனால், அப்படம் ஓடாததால் பெருத்த நட்டத்திற்கு ஆளாகிறார்; கவலையில் நோய்வாய்ப்படுகிறார். தந்தையின் நிலையை எண்ணி பூங்கொடிக்கும் வருத்தம் ஏற்படுகிறது. இதனிடையே, பூங்கொடி தன் கணவரின் வீட்டாரிடம் பணம் பெற்றுத் தன் அண்ணனுக்கு உதவியது அவருக்குத் தெரிய வர, இனிமேல் அவ்வாறு செய்யக்கூடாது எனவும் விழிப்பாக இருக்கும்படியும் அறிவுறுத்துகிறார். கணவரிடத்தில் அன்பாக நடக்கும்படியும் இனிமேல் அம்மாவின் பேச்சையோ அண்ணன் தம்பி பேச்சையோ கேட்டுத் தன் வாழ்வைக் கெடுத்துக் கொள்ளக்கூடாது என அறிவுறுத்தி மகளுக்குக் கடிதம் எழுதுகிறார். இதனால் பூங்கொடி மனம் திருந்துகிறாள். தான் செய்த தவறுகளுக்குக் குழந்தைவேலிடம் மன்னிப்புக் கேட்பதுடன் மீண்டும் மாமன் மாமியாருடன் சேர்ந்து கூட்டுக்குடும்பமாக வாழ்கிறாள். எனவே, மனித வாழ்க்கையில் தவறு செய்வது இயல்பு என்றாலும் அதை உணர்ந்து திருந்தி வாழ முற்படுதல் அவசியம் என்ற கருத்தை நாவலாசிரியர் முன்வைத்துள்ளார்.

ஆகவே, தாய்வீட்டில் அதிகம் செல்லம் கொடுக்கப்பட்டு வளரும் பெண்களின் பிரதிநிதியாக பூங்கொடியை டாக்டர் மு.வ படைத்துள்ளது உள்ளங்கை நெல்லிக்கனி. மகள், மருமகள், தாய், மாமியார் என்ற பரிமாணத்திற்கேற்ப ஒவ்வொரு வாழ்க்கைச் சூழலுக்கும் பெண்கள் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதைப் பூங்கொடியின் மூலம் நாவலாசிரியர் உணர்த்தியுள்ளார். அவ்வாறு செயல்படுத்தத் தவறினால் பெண்கள் பல்வேறு சிக்கல்களுக்கு ஆளாக வேண்டுமென்பதையும் டாக்டர் மு.வரதராசன் பூங்கொடியின் மூலம் சுட்டிக்காட்டியுள்ளார்.

**18. மீனாட்சி அம்மாளின் பாத்திரப்படைப்பை விளக்கி எழுதுக. (20 புள்ளி)**

நாவல் உலகில் தனிப்பெரும் சிற்பியாக விளங்குபவர் டாக்டர் மு. வரதராசன். இவரது இலக்கிய உளியால் செதுக்கப்பட்ட சிற்பமே வாடாமலர் நாவலாகும். நல்வாழ்விற்கு அன்பே ஆதாரம் என்ற கருப்பொருளை ஒட்டி இந்நாவல் உருவாக்கம் கண்டுள்ளது. இந்நாவலின் முதன்மைக் கதைப்பாத்திரமான குழந்தைவேலின் தாயாக மீனாட்சி அம்மாள் படைக்கப்பட்டுள்ளார்.

அவ்வகையில், மீனாட்சி அம்மாள் **இரக்க மனப்பான்மை** கொண்டவராக நாவலாசிரியர் படைத்துள்ளார். உதாரணத்திற்கு, சித்தியின் கொடுமையால் தானப்பனும் சுடர்விழியும் சொல்லொணா துன்பத்தை அடைகின்றனர். அடிவாங்குதல், மனம் புண்படுத்தும் வகையில் திட்டுப்பெறுதல், வேலைக்காரர்களைப்போல் வீட்டு வேலைகளைச் செய்தல் எனச் சித்தியின் ஈவிரக்கமற்ற செயல்களை அச்சிறு குழந்தைகள் தாங்கிக் கொண்டாலும் உணவு தரப்படாமல் பசிப்பட்டினியை மட்டும் தாங்க முடியாமல் தவிக்கின்றன. தாயில்லா இக்குழந்தைகளின் அவலநிலையைக் கண்டு மீனாட்சி அம்மாள் மனம் இரங்கி அவ்வப்பொழுது உணவு வழங்கி அவர்களின் பசியை ஆற்றுகிறார். ஒரு சமயம், பள்ளி செல்லும் வேளையில் பசி மயக்கத்தால் தானப்பன் மயங்கி விழுந்த பொழுது, குழந்தைவேல் அவனைத் தன் வீட்டிற்கு அழைத்து வருகிறான். அவன் நிலைகண்டு மனம் உருகிய மீனாட்சி அம்மாள் அவனுக்கு வீட்டிலிருந்த இட்டிலியும் காப்பியும் கொடுத்துச் சாப்பிட வைக்கிறார். **எனவே, மனித மனம் கருங்கல்லாய் இருகிப் போகாமல் இரக்கம் எனும் கருணையூற்றாய்ச் சுரந்தால் மனிதநேயம் தழைக்குமென நாவலாசிரியர் உணர்த்தியுள்ளார்.**

மேலும், மீனாட்சி அம்மாள் **பொறுப்புணர்வு மிகுந்தவராகவும்** நாவலாசிரியர் செதுக்கியுள்ளார். தாயாகவும் மனைவியாகவும் மாமியாராகவும் பல்வேறு சூழ்நிலைகளில் தனது பொறுப்பைச் சரியாக மேற்கொள்கிறார். எடுத்துக்காட்டாக, குழந்தைவேல் சிறுவயதில் சடுகுடு, புல்லடித்தல், பட்டம் விடுதல் என விளையாட்டில் மும்முரமாய் இருந்து சாப்பிடாமல் இருப்பதை அந்தத் தாயுள்ளம் பொறுக்க மாட்டாதவராய், உரத்த குரலில் கூப்பிட்டுச் சோறு உண்ணச் செய்கிறார். இதுமட்டுமல்லாது, தன் கணவருக்கும் முறையான உணவு கிடைக்க வேண்டுமென்பதில் முழு அக்கறையாக உள்ளார். குழந்தை பிரசவித்த சுடர்விழியைக் கவனித்துக் கொள்ள ஊருக்குச் சென்றிருந்த வேளையில் மருமகள் பூங்கொடியும் தன் தாய் வீட்டிற்குச் சென்று விட்ட நிலையில் வீட்டில் சமைக்க ஆளில்லாத காரணத்தால் கணவர் ஓட்டலில் சாப்பிடும் செய்தியறிந்து மிகுந்த மனவருத்தம் கொள்கிறார். வெளி சாப்பாடு கணவருக்கு ஆகாதே என எண்ணி உடனே தன்னை வீட்டிற்கு அழைத்துச் செல்லும்படி குழந்தைவேலிடம் வேண்டுகிறார். **எனவே, குடும்ப மகிழ்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பெண்கள் தங்கள் பொறுப்புணர்ந்து செயல்பட வேண்டுமென நாவலாசிரியர் வலியுறுத்தியுள்ளார்.**

இதுமட்டுமல்லாது, மீனாட்சி அம்மாள் **பெருந்தன்மை** மிக்கவராகவும் நாவலாசிரியர் மிளிர வைத்துள்ளார். சான்றாக, பூங்கொடிக்கு எந்தவொரு வேலையும் வைக்காமல் அனைத்தையும் தானே செய்வதற்கான காரணத்தைக் குழந்தைவேல் தன் தாயிடம் வினவுகிறான். புதிதாக வந்த மருமகளுக்கு வேலை வைத்து மருட்டக் கூடாது எனவும் காலம் கொஞ்சம் போனால் தன்னாலேயே அவளுக்குப் பொறுப்பு வந்து விடுமென்றும் கூறுகிறார். சராசரி மாமியாரைப்போல் அல்லாமல் தன் தாயின் பெருந்தன்மையை எண்ணி குழந்தைவேலும் மனம் உருகுகின்றான். மற்றொரு சூழலில் பூங்கொடி தனிக்குடித்தனம் வேண்டும் எனக் குரங்குப்பிடியாய் இருந்த வேளையில் மீனாட்சி அம்மாள் அதற்கு மறுப்பேதும் கூறாமல் சம்மதிக்கிறார். ஒரே மகனும் தனிக்குடித்தனம் சென்றால் வயதான தங்கள் நிலை என்னவாவது என அவர் எண்ணி எந்தவொரு சிக்கலையும் விளைவிக்கவில்லை. மாறாக, தனிக்குடித்தனம் நடத்துவதற்காகத் குழந்தைவேலின் தந்தை அனுப்பி வைத்த அரிசி, பருப்பு என மளிகைப் பொருள்களைச் சுத்தப்படுத்தி வீட்டில் முறையாக ஒழுங்குபடுத்தி வைக்கிறார். தன் மகனின்

மகிழ்ச்சியே அவருக்கு முக்கியமாகத் தெரிகிறது. **எனவே, குடும்ப உறுப்பினர்கள் பெருந்தன்மையை வளர்த்துக் கொள்வதன் மூலம் தேவையில்லாத சிக்கல்களைத் தவிர்க்கலாம் என உணர்த்துவதை நாவலாசிரியர் நோக்கமாகக் கொண்டுள்ளார்.**

தொடர்ந்து, மீனாட்சி அம்மாள் **அண்டை அயலாரோடு அன்பாகப் பழகுபவராகவும்** படைக்கப்பட்டுள்ளார். சான்றாக, தானப்பனின் தாய் வள்ளியுடன் சகோதரி போல் பழகுகிறார். அவர் இறந்த பிறகு அதே அன்பைத் தானப்பன் சித்தி மோகனாவிடமும் காட்டுகிறார். தனக்கு வாங்கிய புடவையைப் போலவே சித்திக்கும் ஒரு புடவை எடுத்துக் கொடுக்கிறார். சித்தி மகப்பேற்றுக்காகத் தாய் வீட்டிற்குச் சென்றுவிட்ட பிறகு, தானப்பனின் தந்தை இரு குழந்தைகளை வைத்துக் கொண்டு உணவுக்கு என்ன செய்வார் என யோசிக்கிறார். எனவே, தானப்பன் குடும்பத்தினரைத் தங்கள் வீட்டிலேயே சாப்பிடுமாறு அழைக்கிறார். தானப்பனின் தந்தை தயக்கம் காட்டி வர மறுத்த நிலையில் தானப்பனுக்கும் சுடர்விழிக்கும் முறையான உணவளித்துப் பராமரிக்கிறார். அக்குழந்தைகளைத் தன் குழந்தைகளாகவே எண்ணி கவனிக்கிறார். **எனவே, சமுதாய முன்னேற்றத்திற்கு அண்டை அயலாருடனான இணக்கமான உறவு வழிவகுக்கும் என நாவலாசிரியர் வலியுறுத்தியுள்ளார்.**

இதைத்தவிர, மீனாட்சி அம்மாளிடத்தில் **பொறுமை** எனும் பண்பையும் டாக்டர் மு.வ உரு கொடுத்துள்ளார். உதாரணமாக, சித்தியின் அரக்க குணம் எல்லைமீறி போக ஒரு நாள் அவனை அறையில் அடைத்து வைத்து வைத்து உணவும் நீரும் கொடுக்காமல் கொடுமை செய்வதைச் சுடர்விழியின் மூலம் அறிந்த குழந்தைவேலின் தந்தை கடுங்கோபத்திற்கு ஆளாகிறார். அதனைக் கண்டித்துத் தானப்பன் தந்தையிடம் பேசப்போவதாகக் கூறுகிறார். கணவனின் கோபத்தை உணர்ந்த மீனாட்சி அம்மாள், எடுத்தோம் கவிழ்த்தோம் எனச் செயல்படாமல் அவரைப் பொறுமை காக்கும்படி கூறுகிறார். கோபத்துடன் செயல்பட்டால் நிலைமை இன்னும் மோசமாகத்தான் போகுமென எடுத்துரைக்கிறார். தாயில்லா பிள்ளைகள் இனி தங்கள் வீட்டிற்கு வருவதற்கும் உணவு உண்பதற்கும் வழியில்லாமலும் போகக் கூடும் எனவும் விளக்குகிறார். **எனவே, பொறுமையை வளர்த்துக் கொள்வதன் மூலம் கோபம் எனும் தீப்பற்றிக் கொள்ளாமல் நம்மைத் தற்காத்துக் கொள்ளலாமென நாவலாசிரியர் உணர்த்தியுள்ளார்.**

ஆகவே, 'மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா' என்ற கவிமணியின் கூற்றுக்கொப்ப மீனாட்சி அம்மாள் எனும் பாத்திரப்படைப்பை டாக்டர் மு. வரதராசன் உயரிய பெண்மையைப் பறைசாற்றும் வண்ணம் வைரமாய் மிளிர வைத்துள்ளார். இன்றைய பெண்கள் மீனாட்சி அம்மாளைச் சிறந்த முன்னுதாரணமாகக் கொண்டால் வீடும் நாடும் சிறக்கும்.

**19. குழந்தைவேல் மற்றும் தானப்பனின் ஒப்பீடு [20 புள்ளி]**

இருண்டிருந்த இலக்கிய உலகிற்கு மின்மினிப்பூச்சியைப் போல வெளிச்சமூட்டியவர் டாக்டர் மு.வரதராசன். இவரின் எல்லையில்லாக் கற்பனை திறனில் உருவானதே வாடாமலர் நாவலாகும். இந்நாவல் நல்வாழ்விற்கு அன்பே ஆதாரம் எனும் கருப்பொருளின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது. இந்நாவலில் இடம்பெற்றுள்ள குழந்தைவேல் மற்றும் தானப்பன் எனும் கதைப்பாத்திரங்களுக்கிடையே பல ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் காணப்படுகின்றன.

அவ்வகையில், குழந்தைவேலும் தானப்பனும் **விளையாட்டில் ஆர்வம் கொண்டவர்களாகத்** திகழ்கின்றனர். சான்றாக, இவ்விருவரும் சிறுவயதில் சடுகுடு, பம்பரம், கோலி, காற்றாடி, புல்லடித்தல் எனப் பல வகையான விளையாட்டுகளைச் சேர்ந்து விளையாடுகின்றனர். குழந்தைவேல் காற்றாடி மற்றும் சடுகுடு விளையாடுவதில் வல்லவனாகத் திகழ்கிறான். அதேவேளையில், தானப்பனுக்குக் கோலியும் பம்பரமும் விளையாடுவது கைவந்த கலையாகும். குழந்தைவேல் பகல் முழுவதும் வீட்டிற்கு உணவு உண்ண போகாமல் பட்டம் விளையாடிக் கொண்டிருப்பான். இதைக் கண்டு குழந்தைவேலின் தாய் அவனை அழைத்து உண்ணச் செய்வாள். **ஆகவே, இதன்மூலம் குழந்தைவேல் மற்றும் தானப்பனிடத்தில் விளையாட்டிற்கான ஆர்வத்தைத் தெள்ளத் தெளிவாகக் காண முடிகிறது**.

மேலும், குழந்தைவேலும் தானப்பனும் **நட்பைப் போற்றுபவர்களாகவும்** உலா வருகின்றனர். உதாரணமாக, தானப்பன் சிறுவயதில் ஊரை விட்டு ஓடியப் பிறகு தான் சென்னையிலுள்ள ஒரு புலால் உணவுக்கடையில் வேலை புரிவதாக அவன் குழந்தைவேலுக்குக் கடிதம் அனுப்பினான். இதை அறிந்து கொண்டு, சென்னையிலுள்ள கல்லூரியில் மேற்கல்வியைப் பயிலும் பொழுது குழந்தைவேல் தானப்பனைத் தேடி ஒவ்வொரு புலால் உணவுக்கடையிலும் ஏறி இறங்குகிறான். அவனது செயலைக் கல்லூரி நண்பர்கள் பலர் எள்ளி நகையாடினாலும் குழந்தைவேல் தேடும் முயற்சியைக் கைவிடவில்லை. மறுபக்கத்தில், தானப்பனிடமும் இத்தகைய பண்பைக் காண முடிகிறது. சான்றாக, சுடர்விழிக்குக் குழந்தை பிறந்திருக்கும் செய்தி அறிந்து தானப்பன் குழந்தைவேலோடு ஊருக்குப் புறப்படுகிறான். இரயில் பயணத்தில், தானப்பன் தான் நடத்திவரும் உணவகத்தில் மக்கள் கூட்டம் அதிகம் வருவதற்குக் கள்ளச்சாராயம் விற்பதாகக் குழந்தைவேலிடம் நம்பிக்கையோடு தனது இரகசியத்தைப் பகிர்ந்து கொள்கிறான்**. எனவே, இவ்விருவரும் நட்பைப் போற்றுபவர்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிப் போல வெளிப்படுகிறது.**

குழந்தைவேலுக்கும் தானப்பனுக்கும் சில ஒற்றுமைகள் இருப்பினும் இவர்கள் இருவருக்குமிடையே பல வேற்றுமைகளையும் காண முடிகிறது. அவற்றுள் ஒன்று **குடும்பப்பின்னணியாகும்**. குழந்தைவேலுக்கு அன்பான, பொறுப்பான பெற்றோர்கள் அமைந்த வேளையில் தானப்பன் தனது பெற்றோர்களால் புறக்கணிக்கப்பட்டு அன்புக்கு ஏங்கும் நிலை ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக, குழந்தைவேலின் மனைவி தனிக்குடித்தனம் வேண்டும் எனப் பிடிவாதமாக இருந்த சமயத்தில் மகனின் மகிழ்ச்சியான வாழ்க்கையே முக்கியம் எனக் கருதிய அவனது பெற்றோர் தாங்களே வீடு பார்த்து தனிக்குடித்தனத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து பெருந்தன்மையுடன் நடந்து கொள்கின்றனர். ஆனால், தானப்பனின் நிலையோ தலைக்கீழாக உள்ளது. தன் தாயின் இறப்பிற்குப் பிறகு, தானப்பன் சித்தியின் கொடுமைக்கும் தந்தையின் புறக்கணிப்புக்கும் ஆளாகின்றான். வேலைக்காரனைப்போல் வீட்டு வேலைகளைச் செய்ய வைத்தல், அறையில் அடைத்து வைத்தல், இடுக்கியால் அடித்தல், உணவு கொடுக்கப்படாமல் பட்டினிபோடல் எனச் சித்தியின் கொடுமைகள் தொடர தந்தையும் சித்தியின் பேச்சைக் கேட்டு அவனை அடிக்கிறார். இதனாலேயே தானப்பன் வீட்டைவிட்டு சென்னைக்கு ஓடிச் செல்லும் நிலை ஏற்படுகிறது. **இதன்வழி, அன்பிலும் அக்கறையிலும் வேறுபட்ட பெற்றோர்களைக் குழந்தைவேலும் தானப்பனும் கொண்டிருப்பது வெள்ளிடைமலை.**

அதுமட்டுமல்லாமல், **இல்லற வாழ்க்கையிலும்** குழந்தைவேலுக்கும் தானப்பனுக்கும் இடையே வேறுபாடு காணப்படுகிறது. குழந்தைவேலுக்கு இல்லற வாழ்க்கை நல்லறமாக அமைந்தாலும் தானப்பனுக்கு அதில் துன்பமே மிஞ்சியது. சான்றாக, தொடக்கத்தில், குழந்தைவேலின் மனைவி பூங்கொடி அவன் தாயின் அன்பைப் புரிந்து கொள்ளாமல் அவள் குழந்தைவேலோடு தனிக்குடித்தனம் செல்கிறாள். பூங்கொடியின் தந்தை சினிமா படம் எடுத்து நொடித்துப்போன பிறகு அவள் மனந்திருந்தி மீண்டும் கூட்டுக்குடும்பமாக மகிழ்ச்சியாகச் சேர்ந்து வாழ்கிறாள். நறுமலர் என்ற குழந்தை குழந்தைவேல், பூங்கொடி தம்பதியினரின் இல்லற வாழ்க்கைக்கு மேலும் இனிமை சேர்க்கிறது. ஆனால், தானப்பனின் இல்லற வாழ்க்கையிலோ இனிமை எட்டாக்கனியாகவே இருக்கிறது. தானப்பனின் மனைவியான கனகம் மேற்கத்திய பண்பாட்டை விரும்புவளாக இருப்பதால் குடும்பப் பொறுப்புகளை ஏற்று கொள்ளாமல் வச்சிரநாதன் என்பவனுடன் நெருங்கிய தொடர்பு கொள்கிறாள். மேலும், தானப்பனுக்கும் கனகத்திற்கும் இடையே பல வாய்ச்சண்டைகள் ஏற்படுகின்றன. பொருத்தமில்லா மணவாழ்க்கையால் இறுதியாக இருவரும் மணவிலக்குப் பெற்றுவிடுகின்றனர். **இதன்வழி இல்லற வாழ்க்கை குழந்தைவேலுக்கும் தானப்பனுக்கும் வெவ்வேறான முறையில் அமைந்திருப்பது தெளிவாகிறது.**

இறுதியாக, **கல்வி நிலையிலும்** குழந்தைவேலுக்கும் தானப்பனுக்குமிடையே வேறுபாடு காணப்படுகிறது. குழந்தைவேல் தன் பெற்றோரின் துணையுடன் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினான். ஆனால், தானப்பனுக்கு மேற்கல்வி கற்கும் வாய்ப்பு அமையவில்லை. உதாரணமாக, குழந்தைவேல் சிறுவயதிலிருந்தே நன்றாகக் கல்வி கற்றுச் சென்னையில் உள்ள கல்லூரியில் மேற்கல்வி பயிலச் செல்கிறான். பின்பு பி.ஏ. தேர்விலும் முதல் வகுப்பில் சிறந்த தேர்ச்சி பெறுகிறான். இதனைப் பாராட்டி கல்லூரி முதல்வரும்கூட குழந்தைவேலுக்குக் கடிதம் அனுப்புகிறார். ஆனால், தானப்பன் சிறுவயதில் நன்றாகக் கல்வி கற்றாலும் அவனின் சித்தி இடும் வேலை பளு காரணமாக அவன் படிக்க நேரம் பற்றாகுறையாக இருந்தது. தானப்பனின் தந்தையும் கூட அவன் பள்ளிக்குச் செல்ல தேவையான புத்தகங்களையும் வாங்கித் தராமல் அலட்சியம் காட்டுகிறார். ஒரு நாள், தானப்பன் சித்தியின் கொடுமை தாளாது ஊரைவிட்டு ஓடிய பொழுது அவனின் படிப்பு அரை படிப்பாகிறது. இதனாலேயே பின்னாளில் தானப்பனின் மனைவி கனகம் அவனைப் படிக்காதவன் என இழந்து பேசும் நிலை அவனுக்கு ஏற்படுகிறது. **இதன்மூலம், கல்வி நிலையில் இருவரும் வேறுபடுவது புலனாகிறது.**

ஆகையால், குழந்தைவேல் மற்றும் தானப்பனின் இடையே உள்ள பல ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் சுட்டிக்காட்டி நமக்குப் பல படிப்பினைகளைத் தரும் நோக்கில் நாவலாசிரியர் இவ்விரு கதைப்பாத்திரங்களுக்கும் உயிரூட்டியுள்ளார். எனவே, இந்நாவலின் மூலம் நாம் குழந்தைவேலையும் தானப்பனையும் முன்னோடியாகக் கொண்டு வாழ்வில் செம்மை பெற வேண்டும்.

**20. வாடா மலர் நாவலின் துணைக்கருப்பொருளை விளக்கி எழுதுக. [20 புள்ளி]**

கற்பனைக் குதிரைக்குக் கடிவாளமிட்டு நாவல் எனும் தேரோட்டுவதில் வல்லவர் டாக்டர் மு. வரதராசன். இவரது பேனாமுனை செதுக்கிய சிற்பமே வாடா மலர் நாவல். நல்வாழ்விற்கு அன்பே ஆதாரம் என்பதே இந்நாவலின் கருப்பொருளாகும். சமுதாயம் செம்மையுற வேண்டும் என்ற நன்நோக்கோடு இந்நாவல் சிறந்த துணைக்கருப்பொருள்களைக் கொண்டு உருவாக்கம் கண்டுள்ளது.

அவ்வகையில், **மாற்றாந்தாய் கொடுமை** என்பது வாடா மலர் நாவலின் துணைக்கருப்பொருள்களுள் ஒன்றாகும். உதாரணமாக, தன் மனைவியின் இறப்பிற்குப் பிறகு தானப்பனின் தந்தை மறுமணம் புரிந்து கொள்கிறார். தாயில்லாப் பிள்ளைகளுக்கு அன்பும் அரவணைப்பும் கொடுக்க வேண்டிய சித்தி மோகனாவோ ஈவிரக்கமற்ற முறையில் பல கொடுமைகளைச் செய்யத் துணிகிறாள். கடுஞ்சொற்களால் திட்டுதல், சம்பளமில்லா வேலைக்காரர்களைப் போல் வீட்டு வேலைகளைச் செய்யப் பணித்தல், சிறிய தவறுகளுக்கெல்லாம் அடித்தல், உணவு கொடுக்காமல் பட்டினி போடுதல் எனச் சித்தியின் அரக்கத்தனமான போக்கு நாளுக்குநாள் கூடிக்கொண்டே போனாலும் குழந்தைகளின் சொந்த தந்தையோ பாராமுகமாக இருக்கிறார். இதனால் கொடுமை தாளாது தானப்பன் ஊரைவிட்டே ஓடிச் செல்கிறான். **எனவே, இச்சம்பவங்கள் மாற்றாந்தாய் கொடுமை எனும் துணைக்கருப்பொருளை மெய்ப்பிக்கும் வண்ணம் அமைந்துள்ளன.**

மேலும், **இரக்க குணமும்** இந்நாவலின் முக்கிய துணைக்கருப்பொருளாகத் திகழ்கிறது. உதாரணத்திற்கு, சித்தியின் கொடுமையால் தானப்பனும் சுடர்விழியும் சொல்லொணா துன்பத்தை அடைகின்றனர். அடிவாங்குதல், மனம் புண்படுத்தும் வகையில் திட்டுப்பெறுதல், வேலைக்காரர்களைப்போல் வீட்டு வேலைகளைச் செய்தல் எனச் சித்தியின் ஈவிரக்கமற்ற செயல்களை அச்சிறு குழந்தைகள் தாங்கிக் கொண்டாலும் உணவு தரப்படாமல் பசிப்பட்டினியை மட்டும் தாங்க முடியாமல் தவிக்கின்றன. தாயில்லா இக்குழந்தைகளின் அவலநிலையைக் கண்டு மீனாட்சி அம்மாள் மனம் இரங்கி அவ்வப்பொழுது உணவு வழங்கி அவர்களின் பசியை ஆற்றுகிறார். ஒரு சமயம், பள்ளி செல்லும் வேளையில் பசி மயக்கத்தால் தானப்பன் மயங்கி விழுந்த பொழுது, குழந்தைவேல் அவனைத் தன் வீட்டிற்கு அழைத்து வருகிறான். அவன் நிலைகண்டு மனம் உருகிய மீனாட்சி அம்மாள் அவனுக்கு வீட்டிலிருந்த இட்டிலியும் காப்பியும் கொடுத்துச் சாப்பிட வைக்கிறார். **எனவே, இச்சம்பவம் இரக்க குணம் எனும் துணைக்கருப்பொருளுக்குத் தக்கச் சான்றாக அமைந்துள்ளது.**

இதனைத் தவிர்த்து, **நல்ல நட்பு போற்றத்தக்கது** என்பது வாடா மலர் நாவலின் மற்றொரு துணைக்கருப்பொருளாகத் திகழ்கிறது. எடுத்துக்காட்டாக, தன் பால்ய நண்பனான தானப்பன் சித்தியின் கொடுமை தாங்காது ஊரைவிட்டு ஓடிய பொழுது குழந்தைவேல் அவனின் பிரிவு துன்பத்தால் வாடுகிறான். சில வருடங்கள் கழித்து, தானப்பனிடமிருந்து கிடைத்த கடிதத்தின் மூலம் குழந்தைவேல் அவன் சென்னையில் ஒரு புலால் உணவுக்கடையில் வேலை செய்வதாக அறிகிறான். குழந்தைவேலும் சென்னையில் அமைந்துள்ள ஒரு கல்லூரியில் தன் மேற்கல்வியைத் தொடர்கிறான். அங்குத் தன் நண்பனைத் தேடும் முயற்சியில், குழந்தைவேல் மரக்கறி உண்பவனாக இருந்தாலும் ஒவ்வொரு புலால் உணவுக்கடையிலும் ஏறி இறங்குகிறான். இவ்வளவு பெரிய சென்னையில் முகவரி இல்லாமல் ஒருவனைத் தேடிக் கண்டுபிடிக்க நினைப்பது முட்டாள்தனம் எனக் குழந்தைவேலை அவனது கல்லூரி நண்பர்கள் எள்ளி நகையாடினாலும் தன் தேடும் முயற்சியை ஒருபோதும் கைவிடவில்லை. தனது பால்ய நண்பனைத் தேடிக் கண்டுப்பிடித்தே தீர வேண்டுமெனக் குழந்தைவேல் கங்கணம் கட்டுகிறான். **எனவே, குழந்தைவேல் நட்பைப் போற்றும் திறம் நல்ல நட்பு போற்றத்தக்கது எனும் துணைக்கருப்பொருளுக்குத் தக்க ஆதாரமாக உள்ளது.**

இதுமட்டுமல்லாது, **எளிய வாழ்க்கை** என்ற துணைக்கருப்பொருளும் இந்நாவலுக்குப் பலம் சேர்த்துள்ளது. சான்றாக, ஊர் மெச்ச வேண்டும் என்பதற்காகப் பகட்டாக உடையுடுத்தித் திரியும் உலகத்தோர் மத்தியில் முருகய்யா பட்டாடைகளைத் தவிர்த்து எப்பொழுதும் எளிமையான கதர் ஆடைகளையே உடுத்துகிறார். தானப்பனின் திருமணத்தில் குடும்பத்தோடு கலந்து கொள்ளும் வேளையிலும் அவர் எளிமை பண்பையே கடைப்பிடிக்கிறார். அவரின் எளிய தோற்றத்தைக் கண்டு குழந்தைவேலும் வியப்புக்குள்ளாகிறான். மனைவி சுடர்விழியும் மகனும்கூட பட்டாடை அணியாமல் திருமணத்தில் கலந்து கொண்டிருப்பதைக் குழந்தைவேல் சுட்டிக்காட்டியபொழுது, எளிமையாக உடுத்துவது மதிப்புக் குறைவான செயல் என்ற எண்ணம் சமுதாயத்தில் மாற வேண்டும் எனக் கருத்துரைக்கிறார். மேலும், தானப்பன் தனது திருமண இசையரங்கின்பொழுது விலையுயர்ந்த நீல நிறமான ட்வீட் துணியில் தைத்த கோட்டும் கால்சட்டையும் அணிந்து கொண்டு ஐரோப்பிய உடையில் விளங்கினான். தானப்பனின் இத்தகைய ஆடம்பர திருமணத்தைக் கண்டு முருகய்யா வீண் செலவுகள் என்று குழந்தைவேலிடம் கூறுகிறார். **எனவே, இச்சம்பவங்கள் எளிய வாழ்க்கை எனும் துணைக்கருபொருளைப் புலப்படுத்துகின்றன.**

இறுதியாக, **அறநூல்கள் காட்டும் வாழ்வியல்** என்ற துணைக்கருப்பொருளையும் இந்நாவல் கொண்டிருக்கின்றது. உதாரணமாக, தானப்பனும் குழந்தைவேலும் சுடர்விழிக்குக் குழந்தை பிறந்திருப்பதையொட்டி அவளைக் காண ஊருக்குப் புறப்படுகின்றனர். அங்கே முருகய்யா இருவரையும் திரு.வி.க எனும் சான்றோரின் உரையைக் கேட்க அருட்பா மன்றத்திற்கு அழைத்துச் செல்கிறார். திரு. வி.க அவர்களின் வாழ்வியல் கருத்துகளைத் தானப்பன் மெய்மறந்து கேட்கிறான். அன்று முதல் தானப்பனிடம் மிகப் பெரிய மாற்றம் ஏற்படுகிறது. தன் மைத்துனரிடம் சொல்லி பல அறநூல்களை அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறான்; அவற்றை ஆழ்ந்து வாசிக்கிறான். பல வேலைகளுக்கிடையே கிடைக்கும் நேரத்திலெல்லாம் 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்', 'உள்ளொளி' போன்ற அறநூல்களை வாசிக்கும் புத்தகப்புழுவாக மாறுகிறான். அதன் விளைவாக, தானப்பனிடம் குடிகொண்டிருந்த முரடுத்தன்மை, கோபம், வேகம் போன்றவை நீங்குகின்றன; அவனிடத்தில் சாந்தமும் அமைதியும் ஏற்படுகிறது. நிதானத்துடனும் அன்புநெறியுடனும் செயல்படத் தொடக்குகிறான். **எனவே, அறநூல்களைக் காட்டும் வாழ்வியல் என்ற துணைக்கருப்பொருள் தானப்பன் மூலம் இந்நாவலில் வெளிபட்டுள்ளது.**

ஆகவே, சமுதாய மேன்மையைக் கருத்தில் கொண்டு நாவலாசிரியர் டாக்டர் மு.வரதராசன் மிகச் சிறந்த துணைக்கருப்பொருள்களைக் கொண்டு இந்நாவலை வடிவமைத்திருப்பது வெள்ளிடைமலை. இதன் காரணமாகவே வாசகர்களின் மனத்தைக் கவர்ந்த சிறந்த நாவலாக வாடா மலர் இன்றளவும் திகழ்கிறது. இளைய தலைமுறை இந்நாவலைப் படித்துப் பயன்பெற வேண்டியது அவசியம்.

**21. வாடா மலர் நாவலின் <u>படிப்பினைகளை</u> / <u>வாழ்வியல் கருத்துகளை</u> விளக்கி எழுதுக. [20 புள்ளி]**

தமிழ்க்கூறு நல்லுலகம் போற்றும் தமிழறிஞர் டாக்டர் மு.வரதராசனார் ஆவார். அவரது கைவண்ணத்தில் உருவானதே வாடா மாலர் நாவலாகும். நல்வாழ்விற்கு அன்பே ஆதாரம் என்ற கருப்பொருளை கொண்டு இந்நாவல் படைக்கப்பட்டுள்ளது. சமுதாயம் சீர்பெற வேண்டும் என்ற நன்நோக்கோடு படைக்கப்பட்டிருக்கும் இந்நாவலில் பல படிப்பினைகளைக் காண முடிகிறது.

அவ்வகையில், **நல்ல நட்பைப் போற்ற வேண்டும்** என்பது இந்நாவலின் முகாமையான படிப்பினையாகும். சான்றாக, குழந்தைவேல் தன் மேற்கல்வியைச் சென்னையிலுள்ள ஒரு கல்லூரியில் தொடர்ந்த வேளையில் ஒரு புலால் உணவுக்கடையில் வேலை செய்வதாக அறிந்து தன் பால்ய நண்பன் தானப்பனைத் தேடிக் கண்டுபிடிக்க முயலுகிறான். முகவரி இல்லாமல் தானப்பனைத் தேடும் குழந்தைவேலின் முயற்சியை அவனது கல்லூரி நண்பர்கள் எள்ளி நகையாடுகின்றனர்; பல வேளைகளில் அவனை வேடிக்கையாக ஏமாற்றுகின்றனர். உதாரணமாக, கல்லூரிப் பலகையில் குழந்தைவேலின் பெயருக்குக் கடிதம் வந்திருப்பதாகவும் அனுப்பும் முகவரியில் தானப்பன் என்று குறித்திருந்தது எனச் சொல்லி அவனை அலைய விடுகிறான் ஒருவன். மற்றொரு நாளிலோ 'தானப்பன் மிலிட்டரி ஓட்டல்' என்று ஓர் உணவுக்கடை இருப்பதாகச் சொல்லி குழந்தைவேலைத் திருவொற்றியூருக்குப் போய் ஏமாற்றம் காணும்படி வேடிக்கை காட்டுகின்றனர். இருப்பினும், குழந்தைவேல் தன் முயற்சியில் பின்வாங்காமல் உறுதியாக இருந்து இறுதியில் வெற்றியும் அடைகிறான். **எனவே, 'நூல்நயம் போலும் பண்புடையாளர் தொடர்பு' என்பதற்கிணங்க நல்ல நட்பைப் போற்ற வேண்டும் என்ற படிப்பினை சமுதாயத்தில் நிலைபெறுவது அவசியம்.**

தொடர்ந்து, **<u>உறவுகளிடத்தில் குறைவிலா பாசம் இருத்தல் வேண்டும்</u>** என்ற படிப்பினையையும் இந்நாவல் முன்வைக்கிறது. உதாரணமாக, தந்தை மறுமணம் செய்து கொண்ட பிறகு சித்தியின் கொடுமைகளுக்குத் தானப்பனும் அவன் தங்கை சுடர்விழியும் ஆளாகின்றனர். ஒரு சமயம் வீட்டிற்கு வந்த பெண்கள் சுடர்விழியைப் பற்றி விசாரிக்கையில், அவள் சம்பளமில்லாத வேலைக்காரப் பெண் எனத் தன் எதிரிலேயே தன் தங்கையைப் பற்றிச் சித்தி சொல்வதைக் கேட்டுத் தானப்பன் கோபம் கொள்கிறான். இதைப் பற்றிக் குழந்தைவேலின் தாயிடமும் முறையிடுகிறான். மற்றொரு சம்பவத்தில், திருமணம் முடித்த சுடர்விழிக்கு ஆறாம் மாதம் என்பதால் அவளது கணவர் முருகய்யா தாய்வீட்டிலே விட்டுச் செல்கிறார். சுடர்விழி ஓர் அழகான ஆண் குழந்தையைப் பெற்றெடுக்கிறாள். மூன்றாம் மாதமே சுடர்விழியையும் குழந்தையையும் அழைத்துச் செல்ல முருகய்யா வந்த பொழுது இன்னும் இரண்டு மாதம் தன்னோடு இருந்து செல்லும்படி தானப்பன் வற்புறுத்துகிறான். தாய்மாமன் என்ற முறையில் குழந்தை செங்கதிருக்குப் பொன் அரைஞானும், பொன் காப்பும் செய்து அணிவிக்கிறான். **ஆகவே, உறவுகளிடத்தில் குறைவிலா பாசம் மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கைக்கு அடித்தளமாக அமையும் என்ற படிப்பினையை நாம் உணர வேண்டும்.**

இதுமட்டுமின்றி, **பெற்றோரை மதித்துப் போற்ற வேண்டும்** என்ற படிப்பினையையும் நாவலாசிரியர் பதியம் செய்துள்ளார். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பதற்கொப்ப வாழ்க்கையின் எச்சூழ்நிலையிலும் தன் பெற்றோரின் மனம் நோகாமல் நடந்து கொள்கிறான் குழந்தைவேல். சான்றாக, பி.ஏ தேர்வு முடிந்த பிறகு தான் மேலும் எம்.ஏ. படிக்க வேண்டும் எனத் தன் தாயிடம் வேண்டுகிறான். ஆனால், குழந்தைவேலின் தாய் அவன் அவ்வயதில் திருமணம் செய்து கொள்ள வேண்டியது அவசியம் என எடுத்துரைக்கிறார். குழந்தைவேலும் தன் பெற்றோரின் விருப்பத்திற்கு எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்காமல் அனைத்துத் திருமண ஏற்பாடுகளையும் தன் பெற்றோரின் விருப்பப்படியே விட்டுவிடுகிறான். மேலும், சுயத்தொழில் செய்யுமாறு வலியுறுத்திய தன் தந்தையின்

சொல்லுக்குச் செவிசாய்த்து அவர் பிரித்துக் கொடுத்த சிமெண்ட் வியாபாரத்தையும் முறையாகக் கவனித்துக் கொள்கிறான். **எனவே, பெற்றோரின் அன்பும் வாழ்த்தும் பிள்ளைகளைச் சீரும் சிறப்புமாக வாழ வைக்கும் என்பதால் நாம் கண்கண்ட தெய்வங்களான பெற்றோரைப் போற்றி வாழ வேண்டியது இன்றியமையாததாகும்.**

மேலும், **ஆண் பெண் உறவில் கட்டுப்பாடு அவசியம்** என்ற படிப்பினையை நாவலாசிரியர் இந்நாவலில் உணர்த்தியுள்ளார். சான்றாக, தானப்பனின் மனைவி கனகம் மேற்கத்திய வாழ்க்கை முறையை விரும்புவளாக உள்ளதால் ஆண்களுடன் நெருங்கிப் பழகுகிறாள். தானப்பனை மணந்தவள் கணவன் மீது அன்பு கொண்டு குடும்ப பொறுப்புகளைச் செவ்வனே செய்ய வேண்டியவளாக இருந்தாலும் அதிலிருந்து வழிதவறிச் செல்கிறாள். வச்சிரநாதன் என்பவனுடன் நெருக்கமாகப் பேசிப் பழகுவதுடன் கவர்ச்சியாக உடுத்திக் கொண்டு தன் விருப்பம் போல் வெளியே சென்று வருவதை வழக்கமாக்கிக் கொள்கிறாள். கனகத்தின் நடவடிக்கைகளைச் சகித்துக் கொள்ள இயலாத தானப்பனின் வீட்டு சமையலாள் ஏகப்பனும், குழந்தைவேலிடம் இதைப்பற்றி முறையிடுகிறான். கனகத்தின் போக்கு தானப்பனுக்கும் தெரியவர இருவர் உறவிலும் விரிசல் ஏற்பட்டு மணமுறிவு அளவுக்குக் கொண்டு செல்கிறது. **ஆகவே, வாழ்க்கையில் தேவையற்ற சிக்கல்களைத் தவிர்க்க ஆண்பெண் உறவில் உறவில் கட்டுப்பாடு அவசியம் என்ற படிப்பினையை என்றும் நினைவில் கொள்ள வேண்டும்.**

இறுதியாக, **அறநூல்கள் வாசிக்கும் பழக்கம் அவசியம்** என்ற படிப்பினையும் இந்நாவல் கொண்டிருக்கின்றது. உதாரணமாக, தானப்பனும் குழந்தைவேலும் சுடர்விழிக்குக் குழந்தை பிறந்திருப்பதையொட்டி அவளைக் காண ஊருக்குப் புறப்படுகின்றனர். அங்கே முருகய்யா இருவரையும் திரு.வி.க எனும் சான்றோரின் உரையைக் கேட்க அருட்பா மன்றத்திற்கு அழைத்துச் செல்கிறார். திரு. வி.க அவர்களின் வாழ்வியல் கருத்துகளைத் தானப்பன் மெய்மறந்து கேட்கிறான். அன்று முதல் தானப்பனிடம் மிகப் பெரிய மாற்றம் ஏற்படுகிறது. தன் மைத்துனரிடம் சொல்லி பல அறநூல்களை அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறான்; அவற்றை ஆழ்ந்து வாசிக்கிறான். பல வேலைகளுக்கிடையே கிடைக்கும் நேரத்திலெல்லாம் 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்', 'உள்ளொளி' போன்ற அறநூல்களை வாசிக்கும் புத்தகப்புழுவாக மாறுகிறான். அதன் விளைவாக, தானப்பனிடம் குடிகொண்டிருந்த முரடுத்தன்மை, கோபம், வேகம் போன்றவை நீங்குகின்றன; அவனிடத்தில் சாந்தமும் அமைதியும் ஏற்படுகிறது. நிதானத்துடனும் அன்புநெறியுடனும் செயல்படத் தொடக்குகிறான். **எனவே, அறநூல்கள் நம் வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஒளிவிளக்கு என்பதால் நாம் அவற்றை வாசிக்கும் பழக்கத்தை மேம்படுத்த வேண்டியது அவசியமாகும்.**

ஆகவே, வாடா மலர் வெறும் பொழுது போக்கு நாவலாக அல்லாது சமுதாயத்தைச் செம்மைப்படுத்தும் பல நல்ல படிப்பினைகளைக் கொண்ட நாவலாக இருப்பது மறுக்கவியலா உண்மை. டாக்டர் மு.வரதராசன் வலியுறுத்தியுள்ள படிப்பினைகளை நம் வாழ்க்கையில் அமல்படுத்தி வளமான சமுதாயமாக மாற நாம் ஆவனச் செய்ய வேண்டும்.

**22. வாடா மலர் நாவலின் <u>மொழிநடை மூன்றனை</u> விளக்கி எழுதுக. [10 புள்ளி]**

**வசைமொழி** வாடாமலர் நாவலின் மொழிநடைகளுள் ஒன்றாகும். <u>வசைமொழி என்பது கோபத்தைக் காட்டும் கடுஞ்சொற்களைப் பயன்படுத்தி ஒருவரைத் திட்டுவதாகும்.</u> சான்றாக, தானப்பனின் தாய் இறந்து போனதால் அவனது தந்தை மறுமணம் செய்து கொள்கிறார். தானப்பனின் சித்தி பல கொடுமைகள் செய்கிறாள். அவ்வகையில் ஒருநாள் தானப்பன் பாலைக் கொட்டிவிட்டான் என்பதற்காக அவனை இடுக்கியால் அடித்துக் காயப்படுத்துகிறாள். இதனை அறிந்த குழந்தைவேலின் தாய்,

> “அதற்கு இப்படி முகத்தில் அடிக்கலாமா? இடுக்கியால் இரும்பால்
> அடிக்கலாமா? தவறிக் கண்ணில் பட்டிருந்தால் என்ன கதி? அவள்
> என்ன பேயா பிசாசா?”

எனச் சித்தியைக் கடுங்கோபத்துடன் திட்டுவது வசைமொழிக்குத் தக்கச் சான்றாக உள்ளது.

இதனைத் தவிர்த்து, **பேச்சுமொழியும்** இந்நாவலுக்குச் சுவைகூட்டியுள்ளது. <u>மக்கள் பயன்படுத்தும் இலக்கணமற்றதும் தூய்மையற்றதுமான பேச்சே பேச்சுவழக்காகும்</u>. உதாரணமாக, தானப்பனும் அவனது மனைவி கனகமும் திடீரென இறந்துபோன சம்பவத்தை ஆராய வரும் காவலர்கள் தானப்பன் வீட்டுச் சமையல்காரனான ஏகப்பனை விசாரிக்கின்றனர். காவலர்களைக் கண்டதும் பயந்துபோன ஏகப்பன்,

> “அய்யோ! தெய்வம் சாட்சியாய்ச் சொல்கிறேனுங்க; நான் இந்த வீட்டில்
> எத்தனை வருசமாய் இருக்கிறேன்! ஒரு கொடுமையும் செய்ததில்லைங்க”

எனக் கூறும் வரிகள் பேச்சுவழக்காக அமையப்பெற்றுள்ளன.

வாடா மலர் நாவலின் மொழிநடைகளுள் **வருணனையும்** இடம்பெற்றுள்ளது. <u>வருணனை என்பது ஒன்றின் தன்மையையும் இயல்பையும் சுவைபட அழகிய மொழியில் வெளிப்படுத்துவதாகும்.</u> எடுத்துக்காட்டாக, விடுமுறை முடிந்து பாட்டி வீட்டிலிருந்து திரும்பிய குழந்தைவேல், தானப்பனை ஆவலுடன் சந்திக்க சென்ற பொழுது அங்குச் சித்தி தடையாக இருக்கிறாள். தானப்பனோடு விளையாட முடியாததால் எப்படிப் பொழுதைக் கழிப்பது என யோசித்த அவன் இரயில் நிலையத்திற்குச் சென்று இரயில்களைக் கண்டு இரசிக்கிறான். அங்கு ஓர் இரயில் வரும் வேளையில்,

> “அது வானமெல்லாம் புகை பரப்பிக் கொண்டு வந்து நின்றது”

எனக் குழந்தைவேல் இரயில் வரும் காட்சியைச் சுவைபட நமக்கு வருணித்துக் காட்டுகிறான்.

**23. வாடா மலர் நாவலின் <u>உத்திமுறை மூன்றனை</u> விளக்கி எழுதுக. [10 புள்ளி]**

வாடா மலர் நாவலின் கதையோட்டத்திற்கு வலு சேர்க்கும் உத்திமுறைகளுள் **பின்நோக்கு உத்தியும்** ஒன்றாகும். <u>பின்நோக்கு உத்தி என்பதானது கடந்த கால நிகழ்வுகளைக் கதையோட்டத்திற்கு ஏற்ப பின்நோக்கிப் பார்ப்பதே ஆகும்.</u> சான்றாக, தானப்பனும் சுடர்விழியும் சித்தியின் கொடுமைகளுக்கு ஆட்படுவதைப் பார்க்கும் குழந்தைவேல் தந்தையின் எண்ண அலைகள் இளமைக்காலத்திற்கு அவரை இட்டுச் செல்கின்றன.

"இரண்டு வயதுக்கும் குறைவாயிருக்கும். என் தாயின் முகம் எனக்கு நினைவே
இல்லை. சின்னம்மாதான் என்னை அன்போடு வளர்த்தார்கள்"

எனத் தனது சின்னம்மாவைப் பற்றி குழந்தைவேல் தந்தை தனது மனைவியிடம் நினைவுகூர்வது இவ்வுத்திக்குத் தக்கச் சான்றாக அமைகின்றது.

இதனைத்தவிர்த்து, **உரையாடல் உத்தியும்** இந்நாவலைச் சுவைபட நகர்த்தியுள்ளது. <u>உரையாடல் உத்தி என்பது, இருவர் அல்லது அதற்கும் மேற்பட்டோர் பேசிக் கொள்வதாகும்.</u> உதாரணமாக, பாட்டி வீட்டிலிருந்து விடுமுறையைக் கழித்துவிட்டுத் திரும்பிய குழந்தைவேல் நேரே தன் நண்பன் தானப்பனைச் சந்திக்க அவனது வீட்டிற்குச் செல்கிறான். அப்பொழுது, தான் வாங்கி வந்த வெற்றிலையைச் சித்தியிடம் கொடுத்துவிட்டுக் குழந்தைவேலை நோக்கி ஓடிவந்த தானப்பனைச் சித்தி கடும் வார்த்தைகளால் திட்டுவதைக் குழந்தைவேல் கேட்கிறான். அவ்வேளையில்,

"உன்னைக் கழுதை என்று கூப்பிடுகிறாளே!" என்று குழந்தைவேல் கேட்க,
"அப்படித்தான் சொல்வாள். நாம் பேசாமல் இருக்க வேண்டும்" என்று தானப்பன்
அவனுடன் உரையாடுவது தக்கச் சான்றாக அமைகிறது.

மேலும், வாசகர்களின் மனத்தைக் கவரும் வகையில் இந்நாவலில் **கடித உத்தியும்** பெரும் பங்காற்றியுள்ளது. <u>கடித உத்தி என்பதானது கதைப்பாத்திரம் தன் எண்ணங்களையும் உணர்வுகளையும் தெரிவித்துக் கதையை நகர்த்திச் செல்ல உதவும் உத்தியாகும்.</u> எடுத்துக்காட்டாக, தன் அண்ணனின் பணச் சிக்கலைத் தீர்க்க கணவர் வீட்டாரிடமிருந்து பூங்கொடி பணம் வாங்கிக் கொடுத்த விசயமறிந்த அவளின் தந்தை,

"அன்புள்ள மகள் பூங்கொடி,

..........................................................................................................

கணவரின் அன்பைப் பெற்று வாழக் கற்றுக்கொள். அம்மாவின் பேச்சையோ
அண்ணன் தம்பி பேச்சையோ கேட்டு உன் வாழ்வை கெடுத்துக் கொள்ளாதே.
உன் வாழ்நாள்வரையில் என்னுடைய இந்த அறிவுரையை மறக்காதே பூங்கொடி!"

என அன்பும் அக்கறையுடன் எழுதிய கடிதமானது பூங்கொடி மனமாற்றம் பெற வழிவகுக்கிறது.

**24. வாடா மலர் நாவலின் கதைப்பின்னலை விளக்கி எழுதுக. [20 புள்ளி]**

சிந்தனை முத்துகளைக் கோர்வையாக்கி நாவல் எனும் மாலை தொடுப்பதில் வல்லவர் டாக்டர் மு.வரதராசன். காலத்தை வென்று நிற்கும் இவரது பல்வேறு நாவல்களுள் வாடா மலர் நாவல் குறிப்பிடத்தக்கது. நல்வாழ்விற்கு அன்பே ஆதாரம் என்ற கருப்பொருளைத் தாங்கி இந்நாவல் உருப்பெற்றுள்ளது. குழந்தைவேல், தானப்பன் ஆகிய இரு நண்பர்களின் வாழ்க்கைப் பயணமாக நாவலாசிரியர் கதைப்பின்னலை உருவாக்கியுள்ளார்.

அவ்வகையில், இந்நாவலின் **தொடக்கமானது** குழந்தைவேல், தானப்பன் ஆகியோரின் இளமைக்கால நட்பை அடிப்படையாகக் கொண்டுள்ளது. நகமும் சதையும் போல உற்றத் தோழர்களாகப் பழகிவரும் இருவரும் ஒன்றாக விளையாடியும் பள்ளிக்கூடத்திற்குச் சென்றும் வருகின்றனர். ஆனால், தந்தை மறுமணம் செய்த பின்பு புதிதாக வந்த சித்தி எனும் உறவினால் தானப்பன், அவன் தங்கை சுடர்விழி ஆகியோரின் வாழ்க்கை துன்பத்திற்குள்ளாகிறது. கடுஞ்சொற்களால் திட்டுதல், கண்மூடித்தனமாக அடித்தல், வீட்டு வேலை செய்ய வைத்தல், உணவு கொடுக்காமல் பசிக்கு ஆளாக்குதல் போன்ற சித்தியின் கொடுமைகளுக்கு இருவரும் ஆளாகின்றனர். இந்நிலையில் குழந்தைவேலின் குடும்பம் அவர்களுக்கு ஆதரவாக உள்ளது. ஆனால், சித்தியின் கொடுமைக்கு அளவில்லாமல் போனதால் அதைத் தாளாது தானப்பன் ஊரைவிட்டுச் சென்னைக்கு ஓடிவிடுகிறான். இதனால் குழந்தைவேல் பிரிவுத் துன்பத்தால் வாடுகிறான்.

அடுத்தபடியாக, வாடா மலர் நாவல் **வளர்ச்சி** நிலையை எட்டுகிறது. நீண்ட இடை வெளிக்குப் பிறகு குழந்தைவேல் தானப்பனிடமிருந்து கடிதம் பெற்று அவன் சென்னையில் இருப்பதை அறிகிறான். இதனிடையே குழந்தைவேல் பள்ளிப்படிப்பை முடித்து சென்னைக் கல்லூரியில் மேற்படிப்பைத் தொடர்கிறான். அவ்வாய்ப்பைப் பயன்படுத்தி குழந்தைவேல் பல உணவுக்கடைகளில் தானப்பனை விடாமுயற்சியுடன் தேடி இறுதியில் சந்திக்கிறான். படிப்பை முடித்த குழந்தைவேலுக்குப் பூங்கொடியுடன் திருமணம் நடைபெறுகிறது. இதனிடையே தந்தையின் மரணத்தை அறிந்து தானப்பன் ஊருக்குத் திரும்புகிறான். பணமும் புகழும் சேர்க்க தானப்பன் வியாபாரம், அரசியல் என ஈடுபடுகிறான். குழந்தைவேல், தானப்பன் நெருங்கிய நட்பு மீண்டும் தொடர்கிறது.

தொடர்ந்து, வாடா மலர் நாவலில் **சிக்கல்** உருவெடுக்கிறது. குழந்தைவேலின் மனைவி பூங்கொடி கணவன், மாமன் மாமியாரின் அன்பைப் புரிந்து கொள்ள முடியாதவளாக உள்ளாள். எனவே, தனிகுடித்தனம்தான் வேண்டுமென அவள் பிடிவாதம் பிடிக்க குழந்தைவேலும் தன் பெற்றோர் சம்மதத்துடன் தனிக்குடித்தனம் செல்கிறான். இதனிடையே, தானப்பனுக்கும் கனகம் என்பவளோடு திருமணம் நடக்கிறது. ஆனால், கனகம் ஆண்களோடு நெருங்கிப் பழகும் பண்புள்ளவளாக இருந்தமையால் தம்பதிகள் இருவருக்குமிடையே மனக்கசப்பு ஏற்படுகிறது; மணவிலக்குப் பெற்று இருவரும் பிரிகின்றனர்.

வாடா மலர் நாவலின் **உச்சம்** குழந்தைவேல், தானப்பன் ஆகியோரின் வாழ்க்கையில் நடந்த பல சிக்கல்களுக்கான உச்சமாக அமைகிறது. உதாரணமாக, குழந்தைவேலின் மனைவி பூங்கொடி தனக்குத் தனிக்குடித்தனம்தான் வேண்டுமெனப் பிடிவாதத்துடன் செயல்பட்டு குழந்தைவேலை மனவுளைச்சலுக்கு ஆளாக்கியிருந்தாள். இருப்பினும் பூங்கொடியின் தந்தை சினிமா படம் எடுத்து நலிந்துபோன பிறகு மனம் திருந்துகிறாள். பூங்கொடி மீண்டும் தன் மாமன் மாமியாருடன் இணைந்து வாழ முடிவெடுப்பதும் குழந்தை நறுமலரின் பிறப்பும் குழந்தைவேலின் வாழ்க்கையில் வசந்தம் வீசச் செய்கிறது. ஆனால், தானப்பனுக்கோ நிலைமை வேறு விதமாக அமைகிறது. மணவிலக்கு மூலம் முதலில் கனகம்

அவனைவிட்டு விலகினாலும் பின்னர் மீண்டும் அவன் வீட்டில் வந்து தங்குகிறாள். ஆனால், திடீரென ஒருநாள் தானப்பனும் கனகமும் இறந்துவிட்டனர் என்ற செய்தி குழந்தைவேலுக்கு எட்டுகிறது.

அடுத்தபடியாக நாவலின் **சிக்கல் அவிழ்ப்பு** இடம்பெறுகிறது. தானப்பன், கனகம் ஆகிய இருவரின் திடீர் மரணத்தையொட்டி போலீசார் விசாரணை நடத்த வருகின்றனர். வீட்டு வேலைக்காரர்கள், குழந்தைவேல் என அனைவரிடமும் பல கோணங்களில் விசாரணை நடத்துகின்றனர். குழந்தைவேல் அதிர்ச்சியில் உறைந்திருந்தாலும் போலீசாருக்கு முழு ஒத்துழைப்பு வழங்குகிறான். கனகம் எழுதிய கடிதங்கள் போலீசாரின் கைகளுக்குக் கிடைக்கப்பெறுகின்றன. அதில் நடந்த உண்மை வெளிப்படுகிறது. தனக்குப் பஸ் தொழிலில் பங்கு வேண்டுமெனக் கனகம் கேட்க அதற்குத் தானப்பன் மறுத்ததால் இருவருக்கிடையேயும் பணப்போராட்டமும் மனப்போராட்டமும் தலைத்தூக்கியுள்ளது. அதனால், கனகம் பாலில் விஷத்தைக் கலந்து தானும் குடித்துத் தானப்பனையும் சாகடித்துள்ளதைப் போலீசார் உறுதி செய்கின்றனர். பின்னர் குழந்தைவேல் முருகய்யாவுடன் இணைந்து இறுதிக் காரியங்கள் செய்கிறான்.

வாடா மலர் நாவலின் **முடிவாக** தானப்பனின் கனவு நனவாகிறது. அறநூல்களின் துணைகொண்டு தீய குணங்களைக் கைவிட்டு நல்லவனாகத் தானப்பன் வாழத் தொடக்கியிருந்தாலும் காலம் அவனுக்குக் கைக்கொடுக்கவில்லை. எனவே, அவனது இலட்சியக் கனவுகளை முருகய்யா தனது கடமையாகக் ஏற்று நிறைவேற்றுகிறார். தானப்பன் விருப்பப்படியே அவன் வாங்கியிருந்த நிலத்தில் முருகய்யா பள்ளிக்கூடம் கட்டுகிறார்; அதற்கு ‘வாடா மலர்’ எனவும் பெயர்ச் சூட்டுகிறார். பள்ளிக்கூடத்தின் முதல் நிகழ்ச்சியாக மனோன்மணியின் திருமணம் நடைபெறுகிறது. அதில் குழந்தைவேல் குடும்பத்தினருடன் கலந்து கொள்கிறான். அனைவரும் தானப்பனை நினைவுகூர்கின்றனர்.

ஆகவே, இவ்வளவில் இடம்பெற்றிருக்கும் வாடா மலரின் கதைப்பின்னல் வாசகர்களின் மனத்தை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளது எனக் கூறுவதில் எள்ளளவும் ஐயமில்லை. வெறும் பொழுது போக்கு நாவலாக அல்லாமல் சமுதாயத்தைச் செம்மைப்படுத்தும் உன்னத நாவலாக விளங்கும் வாடா மலரை அடுத்த தலைமுறையும் படித்துப் பயன்பெற வேண்டியது அவசியம்.

**25. வாடா மலர் நாவலின் <u>இடப்பின்னணி மூன்றனை</u> விளக்கி எழுதுக. [10 புள்ளி]**

**தானப்பனின் வீடு** வாடா மலர் நாவலின் முக்கிய இடப்பின்னணிகளுள் ஒன்றாக விளங்குகிறது. நாவலின் பல சம்பவங்கள் இங்கே இடப்பெற்றுள்ளன. சான்றாக, தானப்பனின் வீட்டில் நடைபெறும் மனோன்மணியின் பிறந்தநாள் விழாவில் கலந்து கொள்ள குழந்தைவேலின் பெற்றோருக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. அழைப்பை ஏற்றுக் குழந்தைவேலும் அவனது பெற்றோரும் அதில் கலந்து கொள்கின்றனர். மனோன்மணிக்கு அழகான ஆடையும் நகைகளும் அணிவிக்கப்பட்ட நிலையில் தானப்பனும் சுடர்விழியும் கிழிந்த அழுக்கான ஆடைகளை அணிந்து கொண்டு வேலைக்காரர்களைப் போல் வீட்டு வேலைகளைச் செய்கின்றனர். இதனைக் கண்டு குழந்தைவேலின் பெற்றோர் ஆழ்ந்த மனவருத்தம் கொள்கின்றனர். மாற்றாந்தாயின் கொடுமை ஒருபுறமிருக்க சொந்த பிள்ளைகளைப் பொறுப்புடன் கவனிக்கத் தவறும் தானப்பனின் தந்தையின் மீதும் குழந்தைவேலின் பெற்றோருக்குக் கோபம் எழுகிறது.

இதனைத்தவிர்த்து, **குழந்தைவேலின் வீடும்** நாவலின் முக்கிய இடப்பின்னணியாகத் திகழ்கிறது. தானப்பனும் சுடர்விழியும் மாற்றாந்தாயின் கொடுமைகளுக்கு ஆளாவதைக் குழந்தைவேலின் பெற்றோர் உணர்ந்தாலும் அடுத்த வீட்டுப்பிள்ளை என்பதால் அதைப் பற்றி நேரடியாகக் கேட்க வாய்ப்பில்லாமல் தங்கள் வீட்டிலேயே அதைப் பற்றிய தங்கள் ஆதங்கத்தைக் கொட்டித் தீர்க்கின்றனர். சான்றாக, ஒருநாள் குழந்தைவேலின் தாய், தானப்பனையும் சுடர்விழியையும் பற்றித் தன் தந்தையிடம் கண்ணீர்விட்டு அழுதபடி கூறிக் கொண்டிருப்பதையும் தந்தையோ பெருமூச்சுவிட்டபடி சிலைபோல் அமைதியாக அமர்ந்திருப்பதையும் காண்கிறான். ஏதோ ஒன்று நடந்துவிட்டது என்றுணர்ந்த குழந்தைவேல், தன் தாயிடம் காரணத்தைக் கேட்கிறான். தானப்பன் தன் வீட்டிலேயே ஓர் அறையில் பூட்டிவைக்கப்பட்டுக் காலையிலிருந்து உணவும் தண்ணீரும் கொடுக்கப்படாமல் இருப்பதைச் சுடர்விழி கூறியதாக அவனது தாய் கூறுகிறார். இதைக் கேட்டுக் குழந்தைவேல் அதிர்ச்சியும் வருத்தமும் கொள்கிறான். உடனே தானப்பனின் வீட்டிற்குச் சென்று அவனை வீட்டுச் சிறையிலிருந்து விடுவித்துத் தங்கள் வீட்டுக்கு அழைத்து வந்துவிடலாமெனத் தன் பெற்றோரை வற்புறுத்துகிறான். குழந்தைவேலின் தந்தை அவனை அமைதிப்படுத்துகிறார்.

**கல்லூரியும்** இந்நாவலின் இடப்பின்னணிகளுள் ஒன்றாக விளங்குகிறது. குழந்தைவேல் தன் மேற்கல்வியைச் சென்னையிலுள்ள ஒரு கல்லூரியில் தொடர்ந்த வேளையில் ஒரு புலால் உணவுக்கடையில் வேலை செய்வதாக அறிந்த தன் நண்பன் தானப்பனைத் தேடிக் கண்டுபிடிக்க முயலுகிறான். முகவரி இல்லாமல் தானப்பனைத் தேடும் குழந்தைவேலின் முயற்சியை அவனது கல்லூரி நண்பர்கள் எள்ளி நகையாடுகின்றனர்; பல வேளைகளில் அவனை வேடிக்கையாக ஏமாற்றுகின்றனர். உதாரணமாக, கல்லூரிப் பலகையில் குழந்தைவேலின் பெயருக்குக் கடிதம் வந்திருப்பதாகவும் அனுப்பும் முகவரியில் தானப்பன் என்று குறித்திருந்தது எனச் சொல்லி அவனை அலைய விடுகிறான் ஒருவன். மற்றொரு நாளிலோ 'தானப்பன் மிலிட்டரி ஓட்டல்' என்று ஓர் உணவுக்கடை இருப்பதாகச் சொல்லி குழந்தைவேலைத் திருவொற்றியூருக்குப் போய் ஏமாற்றம் காணும்படி வேடிக்கை காட்டுகின்றனர். இருப்பினும், குழந்தைவேல் தன் முயற்சியில் பின்வாங்காமல் உறுதியாக இருக்கிறான்.

**26. வாடா மலர் நாவலின் <u>சமுதாயப் பின்னணி மூன்றனை</u> விளக்கி எழுதுக. [10 புள்ளி]**

வாடா மலர் நாவலில் **பிறர் நலத்தில் அக்கறை கொண்ட சமுதாயம்** இடம்பெற்றுள்ளது. இதற்குச் சான்றாகக் குழந்தைவேலின் பெற்றோரைக் குறிப்பிடலாம். சித்தியின் கொடுமையால் தானப்பனும் சுடர்விழியும் சொல்லொணா துன்பத்தை அடைகின்றனர். அடிவாங்குதல், மனம் புண்படுத்தும் வகையில் திட்டுப்பெறுதல், வேலைக்காரர்களைப்போல் வீட்டு வேலைகளைச் செய்தல் எனச் சித்தியின் ஈவிரக்கமற்ற செயல்களை அச்சிறு குழந்தைகள் தாங்கிக் கொண்டாலும் உணவு தரப்படாமல் பசிப்பட்டினியை மட்டும் தாங்க முடியாமல் தவிக்கின்றன. தாயில்லா இக்குழந்தைகளின் அவலநிலையைக் கண்டு மீனாட்சி அம்மாள் மனம் இரங்கி அவ்வப்பொழுது உணவு வழங்கி அவர்களின் பசியை ஆற்றுகிறார். ஒரு சமயம், பள்ளி செல்லும் வேளையில் பசி மயக்கத்தால் தானப்பன் மயங்கி விழுந்த பொழுது, குழந்தைவேல் அவனைத் தன் வீட்டிற்கு அழைத்து வருகிறான். அவன் நிலைகண்டு மனம் உருகிய மீனாட்சி அம்மாள் அவனுக்கு வீட்டிலிருந்த இட்டிலியும் காப்பியும் கொடுத்துச் சாப்பிட வைக்கிறார். குழந்தைவேலின் தந்தையும் அவனிடம் ஆதரவாகப் பேசி வீட்டிற்கு அனுப்பி வைக்கிறார்.

மேலும், **நட்பைப் போற்றும் சமுதாயத்தையும் இந்நாவலில்** காணமுடிகிறது. உதாரணமாக, தன் பால்ய நண்பனான தானப்பன் சித்தியின் கொடுமை தாங்காது ஊரைவிட்டு ஓடிய பொழுது குழந்தைவேல் அவனின் பிரிவு துன்பத்தால் வாடுகிறான். சில வருடங்கள் கழித்து, தானப்பனிடமிருந்து கிடைத்த கடிதத்தின் மூலம் அவன் சென்னையில் ஒரு புலால் உணவுக்கடையில் வேலை செய்வதாகக் குழந்தைவேல் அறிகிறான். குழந்தைவேலும் சென்னையில் அமைந்துள்ள ஒரு கல்லூரியில் தன் மேற்படிப்பைத் தொடர்கிறான். அதை நல்லதொரு வாய்ப்பாகப் பயன்படுத்தி அங்குத் தன் நண்பனைத் தேடும் முயற்சியை மும்முரமாக மேற்கொள்கிறான். குழந்தைவேல் மரக்கறி உண்பவனாக இருந்தாலும் ஒவ்வொரு புலால் உணவுக்கடையிலும் ஏறி இறங்குகிறான். குழந்தைவேலின் இச்செயலை அவனது கல்லூரி நண்பர்கள் எள்ளி நகையாடினாலும் தன் தேடும் முயற்சியை அவன் ஒருபோதும் கைவிடவில்லை.

இதுமட்டுமின்றி, **எளிய வாழ்க்கை வாழும் சமுதாயமும்** இந்நாவலில் காணப்படுகிறது. இதற்குச் சான்றாக முருகய்யாவும் அவர் மனைவி சுடர்விழியும் இருக்கின்றனர். ஊர் மெச்ச வேண்டும் என்பதற்காகப் பகட்டாக உடையுடுத்தித் திரியும் உலகத்தோர் மத்தியில் முருகய்யா பட்டாடைகளைத் தவிர்த்து எப்பொழுதும் எளிமையான கதர் ஆடைகளையே உடுத்துகிறார். தானப்பனின் திருமணத்தில் குடும்பத்தோடு கலந்து கொள்ளும் வேளையிலும் அவர் எளிமை பண்பையே கடைப்பிடிக்கிறார். அவரின் எளிய தோற்றத்தைக் கண்டு குழந்தைவேலும் வியப்புக்குள்ளாகிறான். மனைவி சுடர்விழியும் மகனும்கூட பட்டாடை அணியாமல் திருமணத்தில் கலந்து கொண்டிருப்பதைக் குழந்தைவேல் சுட்டிக்காட்டியபொழுது, எளிமையாக உடுத்துவது மதிப்புக் குறைவான செயல் என்ற எண்ணம் சமுதாயத்தில் மாற வேண்டும் எனக் கருத்துரைக்கிறார்.

**27. வாடா மலர் நாவல் உமக்குள் ஏற்படுத்திய தாக்கம் மூன்றனை விளக்கி எழுதுக.**
**[10 புள்ளி]**

சமுதாய நாவலான வாடாமலர் எனக்குள் பல தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. அவ்வகையில் **சித்தியினால் தானப்பனும் சுடர்விழியும் அனுபவித்த கொடுமைகள் என் மனத்தில் ஆழமான கீறலை உண்டாக்கியுள்ளன**_ எனக் கூறினால் அது மிகையில்லை. உதாரணமாக, மனோன்மணியின் பிறந்தநாள் விழாவில் தானப்பனும் சுடர்விழியும் வீட்டுக்கு வந்த விருந்தினர் முன்னால் அழுக்கான கிழிந்த ஆடைகளை அணிந்து வேலைக்காரர்களைப் போல் வீட்டு வேலைகளைச் செய்ததை எண்ணுகையில் என் மனம் கொந்தளிக்கிறது. குழந்தை மனம் ஆயிரமாயிரம் ஆசைகளைச் சுமந்து கொண்டிருக்கும் என்பர். அதைப் புரிந்து கொள்ளாமல் பாராபட்சம் பார்க்கும் சித்தியைப் போன்றவர்கள் இன்றைய சமுதாயத்தில் மலிந்தே காணப்படுகின்றனர். பச்சிளங்குழந்தைகளின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் உடலாலும் உள்ளத்தாலும் கொடுமை செய்யும் அரக்கத்தனமிக்க மனிதர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென நான் கருதுகிறேன். **அனைத்து உயிர்களிடத்தும் அன்பைப் பரிமாறி வாழவே நான் விரும்புகிறேன்.**

இதுமட்டுமல்லாது, **குழந்தைவேல் நட்பைப் போற்றும் திறம் எனக்குள் வியப்பை உண்டாக்குகிறது.** உதாரணமாக, தோளோடு தோள் சாய்த்து, கைக்கோர்த்துத் திரிந்த நண்பன் தானப்பன் திடீரென ஊரைவிட்டுக் காணாமல் போனபோது குழந்தைவேல் பிரிவுத்துன்பத்திற்கு ஆளாகிறான். குழந்தைவேல் தன் மேற்கல்வியைச் சென்னையிலுள்ள ஒரு கல்லூரியில் தொடர்ந்த வேளையிலும் தன் நண்பன் தானப்பனைத் தேடிக் கண்டுபிடிக்க முயலுகிறான். முகவரி இல்லாமல் தானப்பனைத் தேடும் குழந்தைவேலின் முயற்சியை அவனது கல்லூரி நண்பர்கள் எள்ளி நகையாடுகின்றனர்; வேடிக்கையாக ஏமாற்றி அலையவிடுகின்றனர். இருப்பினும், குழந்தைவேல் தன் முயற்சியில் பின்வாங்காமல் உறுதியாக இருக்கிறான். இரயில் சினேகம் போன்று குறுகிய காலத்திற்கும் தேவைக்கும் மட்டுமே போற்றப்படும் இன்றைய கால நட்பை ஒப்பிடுகையில் குழந்தைவேலின் உள்ளார்ந்த நட்பைக் கண்டு நான் பிரமிக்கிறேன். நட்பு எவ்வளவு புனிதமானது என்றறிகிறேன். **நட்பு என்பது உள்ளத்தில் ஆழப் பதியும் ஆணிவேராய் ஆயுள் உள்ளவரை போற்றப்பட வேண்டுமென்பதை நான் நன்கு உணர்ந்து அவ்வாறே செயல்பட உறுதியாக உள்ளேன்.**

மேலும், **மீனாட்சி அம்மாளின் பொறுப்புணர்வை எண்ணுங்கால் பெருமை உணர்வு எனக்குள் மேலிடுகிறது.** தாயாகவும் மனைவியாகவும் மாமியாராகவும் பல்வேறு சூழ்நிலைகளில் தனது பொறுப்பைச் சரியாக மேற்கொள்கிறார். எடுத்துக்காட்டாக, குழந்தைவேல் சிறுவயதில் விளையாட்டில் மும்முரமாய் இருந்து சாப்பிடாமல் இருப்பதை அந்தத் தாயுள்ளம் பொறுக்க மாட்டாதவராய், உரத்த குரலில் கூப்பிட்டுச் சோறு உண்ணச் செய்கிறார். இதுமட்டுமல்லாது, குழந்தை பிரசவித்த சுடர்விழியைக் கவனித்துக் கொள்ள ஊருக்குச் சென்றிருந்த வேளையில் கணவர் ஓட்டலில் சாப்பிடும் செய்தியறிந்து மிகுந்த மனவருத்தம் கொள்கிறார். வெளி சாப்பாடு கணவருக்கு ஆகாதே என எண்ணி உடனே தன்னை வீட்டிற்கு அழைத்துச் செல்லும்படி குழந்தைவேலிடம் வேண்டுகிறார். மீனாட்சி அம்மாளின் இத்தகைய பொறுப்புணர்வை என் தாயிடமும் நான் காண்கிறேன். காலையில் கண்விழித்த தொடக்கம் இரவு கண்ணுறங்க செல்லும்வரை என் குடும்பத்தினர் ஒவ்வொருவரின் தேவைகளையும் பூர்த்தி செய்வதில் என் தாய் கொண்டுள்ள அன்பும் அக்கறையும் என்னை மெய்சிலிர்க்க வைக்கிறது. பெண்கள் வீட்டின் கண்கள், பெண்கள் சக்தியின் மறு உருவம் போன்ற கூற்றுகள் வெறும் வார்த்தை ஜாலம் அல்ல அவை உண்மையின் தத்துவம் என்பதை உணர்கிறேன். **இத்தகைய பொறுப்புணர்வை என் வாழ்க்கையிலும் கடைப்பிடித்து வாழ நான் உறுதி பூண்டுள்ளேன்.**

**28. வாடா மலர் நாவலின் மூலம் நீ பெற்ற படிப்பினைகள் மூன்றனை விளக்கி எழுதுக. [10 புள்ளி]**

**நல்ல நட்பைப் போற்ற வேண்டும்** என்ற **படிப்பினையை** வாடா மலர் நாவலின் மூலம் நான் பெற்றுள்ளேன். சான்றாக, குழந்தைவேல் தன் மேற்கல்வியைச் சென்னையிலுள்ள ஒரு கல்லூரியில் தொடர்ந்த வேளையில் ஒரு புலால் உணவுக்கடையில் வேலை செய்வதாக அறிந்து தன் பால்ய நண்பன் தானப்பனைத் தேடிக் கண்டுபிடிக்க முயலுகிறான். முகவரி இல்லாமல் தானப்பனைத் தேடும் குழந்தைவேலின் முயற்சியை அவனது கல்லூரி நண்பர்கள் எள்ளி நகையாடுகின்றனர்; பல வேளைகளில் அவனை வேடிக்கையாக ஏமாற்றுகின்றனர். உதாரணமாக, கல்லூரிப் பலகையில் குழந்தைவேலின் பெயருக்குக் கடிதம் வந்திருப்பதாகவும் அனுப்பும் முகவரியில் தானப்பன் என்று குறித்திருந்தது எனச் சொல்லி அவனை அலைய விடுகிறான் ஒருவன். மற்றொரு நாளிலோ 'தானப்பன் மிலிட்டரி ஓட்டல்' என்று ஓர் உணவுக்கடை இருப்பதாகச் சொல்லி குழந்தைவேலைத் திருவொற்றியூருக்குப் போய் ஏமாற்றம் காணும்படி வேடிக்கை காட்டுகின்றனர். இருப்பினும், குழந்தைவேல் தன் முயற்சியில் பின்வாங்காமல் உறுதியாக இருந்து இறுதியில் வெற்றியும் அடைகிறான். **எனவே, 'நூல்நயம் போலும் பண்புடையாளர் தொடர்பு' என்பதற்கிணங்க நல்ல நட்பைப் போற்ற வேண்டும் என்ற <u>படிப்பினை</u> என்னுள் நிலைப்பெற்றுள்ளது.**

தொடர்ந்து, **உறவுகளிடத்தில் குறைவிலா பாசம் இருத்தல் அவசியம்** என்ற படிப்பினையையும் <u>நான்</u> இந்நாவலின் மூலம் உள்வாங்கியுள்ளேன் . உதாரணமாக, தந்தை மறுமணம் செய்து கொண்ட பிறகு சித்தியின் கொடுமைகளுக்குத் தானப்பனும் அவன் தங்கை சுடர்விழியும் ஆளாகின்றனர். ஒரு சமயம் வீட்டிற்கு வந்த பெண்கள் சுடர்விழியைப் பற்றி விசாரிக்கையில், அவள் சம்பளமில்லாத வேலைக்காரப் பெண் எனத் தன் எதிரிலேயே தன் தங்கையைப் பற்றிச் சித்தி சொல்வதைக் கேட்டுத் தானப்பன் கோபம் கொள்கிறான். இதைப் பற்றிக் குழந்தைவேலின் தாயிடமும் முறையிடுகிறான். மற்றொரு சம்பவத்தில், திருமணம் முடித்த சுடர்விழிக்கு ஆறாம் மாதம் என்பதால் அவளது கணவர் முருகய்யா தாய்வீட்டிலே விட்டுச் செல்கிறார். சுடர்விழி ஓர் அழகான ஆண் குழந்தையைப் பெற்றெடுக்கிறாள். மூன்றாம் மாதமே சுடர்விழியையும் குழந்தையையும் அழைத்துச் செல்ல முருகய்யா வந்த பொழுது இன்னும் இரண்டு மாதம் தன்னோடு இருந்து செல்லும்படி தானப்பன் வற்புறுத்துகிறான். தாய்மாமன் என்ற முறையில் குழந்தை செங்கதிருக்குப் பொன் அரைஞானும், பொன் காப்பும் செய்து அணிவிக்கிறான். **ஆகவே, உறவுகளிடத்தில் குறைவிலா பாசம் அவசியம் என்ற படிப்பினை மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கைக்கு அடித்தளமாக அமையும் என்பது என் சிந்தைக்கதவைத் தட்டியுள்ளது.**

இதுமட்டுமின்றி, **பெற்றோரை மதித்துப் போற்ற வேண்டும்** என்ற <u>படிப்பினையையும்</u> வாடா மலர் நாவல் என்னுள் பதியம் செய்துள்ளது. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பதற்கொப்ப வாழ்க்கையின் எச்சூழ்நிலையிலும் தன் பெற்றோரின் மனம் நோகாமல் நடந்து கொள்கிறான் குழந்தைவேல். சான்றாக, பி.ஏ தேர்வு முடிந்த பிறகு தான் மேலும் எம்.ஏ. படிக்க வேண்டும் எனத் தன் தாயிடம் வேண்டுகிறான். ஆனால், குழந்தைவேலின் தாய் அவன் அவ்வயதில் திருமணம் செய்து கொள்ள வேண்டியது அவசியம் என எடுத்துரைக்கிறார். குழந்தைவேலும் தன் பெற்றோரின் விருப்பத்திற்கு எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்காமல் அனைத்துத் திருமண ஏற்பாடுகளையும் தன் பெற்றோரின் விருப்பப்படியே விட்டுவிடுகிறான். மேலும், சுயத்தொழில் செய்யுமாறு வலியுறுத்திய தன் தந்தையின் சொல்லுக்குச் செவிசாய்த்து அவர் பிரித்துக் கொடுத்த சிமெண்ட் வியாபாரத்தையும் முறையாகக் கவனித்துக் கொள்கிறான். **எனவே, பெற்றோரின் அன்பும் வாழ்த்தும் பிள்ளைகளைச் சீரும் சிறப்புமாக வாழ வைக்கும் என்பதால் நாம் கண்கண்ட தெய்வங்களான பெற்றோரைப் போற்றி வாழ வேண்டியது இன்றியமையாதது என்ற படிப்பினையை நான் ஆழமாக உணர்ந்துள்ளேன்.**

**29. தானப்பன் கதைப்பாத்திரம் உமக்குள் ஏற்படுத்திய தாக்கம் மூன்றனை விளக்கி எழுதுக. [10 புள்ளி]**

வாடா மலர் நாவலில் தானப்பனின் கதைப்பாத்திரம் எனக்குள் பல தாக்கங்களை ஏற்படுத்தி உள்ளது. **பலவித போராட்டங்களை எதிர்நோக்கினாலும் சுயக்காலில் நிற்பவனாக விளங்கும் தானப்பன் எனக்குள் மாற்றத்தை உண்டாக்கியுள்ளான்.** எடுத்துக்காட்டாக, சென்னையில் உள்ள இரயில் நிலையத்தில் பல ஆண்டுகள் கழித்து நேரில் சந்திக்கும் தானப்பனும் குழந்தைவேலும் மனம்விட்டுப் பேசுகின்றனர். புலால் உணவக முதலாளி தனக்குத் துரோகம் செய்து விட்டதாகவும் தனக்குச் சேர வேண்டிய பங்கைக் கொடுக்காமல் வேலையிலிருந்து நீக்கிவிட்டதாகவும் குறிப்பிடுகிறான் தானப்பன். வேலையில்லாமல் இருக்கும் தானப்பன் சாப்பாட்டுக்கு என்ன செய்வான் என நினைத்த குழந்தைவேல் அவனுக்குப் பணம் கொடுத்து உதவ முன்வருகிறான். ஆனால், தானப்பனோ தன் கையே தனக்குதவி எனக் கூறி தன்னால் இச்சூழலைச் சமாளித்துக் கொள்ள முடியுமென்று குழந்தைவேலின் பணத்தை வாங்க மறுக்கிறான். எனவே, பிறரை எதிர்பார்க்காமல் சுயக்காலில் நிற்கும் தானப்பனின் போக்கு எனக்குள் உத்வேகத்தை உண்டாக்கியுள்ளது. **இதுவரையில் பிறரை எதிர்பார்த்து வாழ்வதையே வழக்கமாகக் கொண்டிருந்த நான் இனி அவ்வாறு செய்யக் கூடாது என முடிவெடுத்திருக்கிறேன். எனது முழுத்திறமைகளையும் பயன்படுத்தி பிறருக்குச் சுமை ஏற்படுத்தா வண்ணம் வாழ்வேன்.**

மேலும், **தானப்பனின் கொண்டிருந்த வாசிக்கும் பழக்கம் எத்துணை வல்லமை படைத்தது என்ற தெளிவு என்னுள் ஏற்பட்டுள்ளது.** முருகய்யாவின் வேண்டுகோளுக்கு இணங்கி குழந்தைவேலுடன் சேர்ந்து திரு.வி.க எனும் சான்றோரின் உரையைக் கேட்ட தானப்பனின் மனத்தில் ஒளி பிறக்கிறது. அறவாழ்வு எத்துணைச் சிறப்பான என்பதை உணர்ந்த தானப்பன் அறநூல்களைக் கருத்தூன்றி வாசிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்கிறான். அதன் விளைவாக, தானப்பனிடம் குடிகொண்டிருந்த முரடுத்தன்மை, கோபம், வேகம் போன்றவை நீங்குகின்றன. அதுவரையில் பணம், புகழ்தான் வாழ்க்கை என்றிருந்த தானப்பன் பின்பு அன்பு, சேவை போன்ற அறம் சார்ந்த வாழ்வே சிறந்தது என உணர்ந்ததால் அவனது பயணப்பாதை மாறுகிறது. எனவே, தானப்பனின் வாழ்க்கை திருப்புனைக்கு வாசிப்புப் பழக்கமே காரணமென்பதை நான் உணர்கிறேன். **புலனம், முகநூல் போன்ற சமூக ஊடங்களில் நண்பர்களுடன் தேவையற்ற அரட்டையடித்துக் கொண்டிருந்த நான் இனி அவற்றைவிடுத்து நல்ல நூல்கள் வாசிக்கும் பழக்கத்தை மேற்கொள்ள ஆயத்தமாக உள்ளேன்.**

இதுமட்டுமின்றி, **உடன்பிறப்புகளின் மேல் தானப்பன் கொண்டிருந்த பாசமும் என்னை மெய்சிலிர்க்க வைக்கிறது.** தன் தங்கை சுடவிழியைச் சித்தி மற்றப் பெண்களின் முன் சம்பளமில்லா வேலைக்காரி என்று தன் எதிரிலேயே கூறியதைக் கேட்ட தானப்பனின் மனம் கொதிக்கிறது. இதை மீனாட்சி அம்மாளிடம் கூறி ஆதங்கப்படுகிறான். மேலும், சித்தியின் கொடுமை தாளாது சென்னைக்கு ஓடிப் போனபின்பு அங்குள்ள புலால் உணவுக்கடையில் வேலைக்குச் சேர்கிறான். குழந்தைவேலுக்குக் கடிதம் எழுதும் பொழுது தான் கறியும் சோறும் உண்டு பசியில்லாமல் நன்றாக வாழும் நிலையில் முறையான உணவில்லாமல் வாடிக்கிடக்கும் தன் தங்கை சுடர்விழியின் நிலையை எண்ணிக் கலங்குவதாகவும் குறிப்பிடுகிறான். தானப்பனின் இத்தகைய பாசவுணர்வு என் மனத்தை நெகிழ வைக்கிறது. தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும் என்ற முன்னோர்களின் கூற்றை எண்ணிப் பார்க்கிறேன். பந்த பாசத்திற்கு அளவுகோல் இல்லை என்பதைத் தானப்பன் மூலம் நான் உணர்ந்து கொண்டுள்ளேன். **ஆகவே, என் உடன்பிறப்புகளின் மீது பற்றும்பாசமும் கொண்டிருக்க நான் உறுதி பூண்டிருக்கிறேன்.**

**30. குழந்தைவேல் கதைப்பாத்திரம் மூலம் நீ பெற்ற <u>படிப்பினை மூன்றனை</u> விளக்கி எழுதுக.**
**[10 புள்ளி]**

வாடா மலர் நாவலின் முதன்மை கதைப்பாத்திரமான குழந்தைவேலின் மூலம் நான் **உதவும் மனப்பான்மை** கொண்டிருக்க வேண்டுமென்ற **படிப்பினையைப்** பெற்றுள்ளேன். உதாரணமாக, தான் வாங்கி வந்த கத்தரிக்காய்கள் வேண்டாமென்றும் வேறு காய்கள் மாற்றிக் கொண்டு வருமும் சித்தி கோபப்பட்டு அனுப்பியதையும் கடைக்காரர் காயை எடுத்துக் கொண்டு காசு தர மறுப்பதையும் தானப்பன் அழுது கொண்டே குழந்தைவேலிடம் விளக்குகிறான். இக்கட்டான சூழ்நிலையில் மாட்டிக்கொண்டு தவிக்கும் தன் நண்பனுக்கு உதவி செய்ய குழந்தைவேல் நினைக்கிறான். இதனை உடனே தன் தாயிடம் கூறி அக்காய்களை எடுத்துக் கொண்டு மூன்றணாவைத் தானப்பனுக்குக் கொடுத்து உதவுகிறான். இச்சம்பவம் என் மனத்தில் ஆழமாகப் பதிந்துள்ளது.

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு

என்ற வள்ளுவ ஆசானின் குறளோடு என்னால் குழந்தைவேலை ஒப்பிட்டுப் பார்க்க முடிகிறது. **நம்மால் இயன்றவரை உதவி செய்து பிறரது துன்பத்தைத் துடைக்க வேண்டுமென்ற படிப்பினை என் மனத்துள் ஆழப் பதிந்துள்ளது.**

இதைத்தவிர்த்து, **கல்வியில் அக்கறை கொள்ள வேண்டுமென்ற** படிப்பினையையும் நான் குழந்தைவேலின் மூலம் கற்றுக் கொண்டுள்ளேன். எடுத்துக்காட்டாக, குழந்தைவேல் பள்ளிப்படிப்பை முடித்துச் சென்னையிலுள்ள ஒரு கல்லூரியில் தன் <u>மேற்கல்வியைத் தொடர்கிறான்</u>. அங்குக் கருணாகரன் எனும் ஒரு மாணவனுடன் ஒரே விடுதி அறையில் தங்க நேரிடுகிறது. கருணாகரன் புகைப்பிடித்தல், சீட்டாடுதல், ஊரைச் சுற்றி திரிதல் எனப் பலத் தீயப் பழக்கங்களைக் கொண்டிருக்கிறான். குழந்தைவேலுக்கும் அப்பழக்கங்களைக் கற்றுத்தர அவன் முற்பட்டாலும் குழந்தை உடன்படமறுக்கிறான். கூடாநட்பை விடுத்து, தன் பக்கத்து அறையிலுள்ள நல்ல நண்பனான பழனிச்சாமியுடனும் அவனது நண்பர்களுடனும் பழக்கம் கொண்டு <u>நன்மாணாக்கனாகத்</u> திகழ்கிறான். <u>கல்வியைக் கண்ணுங்கருத்துமாகப் பயின்றதால்</u> பி.ஏ தேர்வில் முதல் வகுப்பில் தேறுகிறான். இதனால் கல்லூரி முதல்வரிடமிருந்து பாராட்டுக் கடிதமும் பெறுகிறான். கல்வியை அதோடு நிறுத்தாமல் <u>முதுகலை படிப்பைத்</u> தொடரவும் விரும்புகிறான். **எனவே, ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து, சிந்தனையை ஒருமுகப்படுத்தி கண்ணுங்கருத்துமாகப் பயின்றால் கல்வியில் சாதனை படைக்கலாம் என்ற படிப்பினை குழந்தைவேலின் மூலம் என்னுள் தளிர்விட்டுள்ளது.**

மேலும், **பெற்றோரை மதித்துப் போற்ற வேண்டும்** என்ற <u>படிப்பினையையும்</u> குழந்தைவேலின் கதைப்பாத்திரம் என்னுள் பதியம் செய்துள்ளது. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பதற்கொப்ப வாழ்க்கையின் எச்சூழ்நிலையிலும் தன் பெற்றோரின் மனம் நோகாமல் நடந்து கொள்கிறான் குழந்தைவேல். சான்றாக, பி.ஏ தேர்வு முடிந்த பிறகு தான் மேலும் எம்.ஏ. படிக்க வேண்டும் எனத் தன் தாயிடம் வேண்டுகிறான். ஆனால், குழந்தைவேலின் தாய் அவன் அவ்வயதில் திருமணம் செய்து கொள்ள வேண்டியது அவசியம் என எடுத்துரைக்கிறார். குழந்தைவேலும் தன் பெற்றோரின் விருப்பத்திற்கு எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்காமல் அனைத்துத் திருமண ஏற்பாடுகளையும் தன் பெற்றோரின் விருப்பப்படியே விட்டுவிடுகிறான். மேலும், சுயத்தொழில் செய்யுமாறு வலியுறுத்திய தன் தந்தையின் சொல்லுக்குச் செவிசாய்த்து அவர் பிரித்துக் கொடுத்த சிமெண்ட் வியாபாரத்தையும் முறையாகக் கவனித்துக் கொள்கிறான். **எனவே, பெற்றோரின் அன்பும் வாழ்த்தும் பிள்ளைகளைச் சீரும் சிறப்புமாக வாழ வைக்கும் என்பதால் கண்கண்ட தெய்வங்களான பெற்றோரைப் போற்றி வாழ வேண்டியது இன்றியமையாதது என்ற படிப்பினையை நான் குழந்தைவேல் மூலம் பெற்றுள்ளேன்.**

**31. குழந்தைவேல் இன்றைய இளைஞர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்கிறான். இக்கூற்றை விளக்கி எழுதுக. [20 புள்ளி]**

இலக்கிய உலகில் மின்னும் விண்மீனாகத் திகழ்பவர் டாக்டர் மு.வரதராசனார் ஆவார். அவரது கைவண்ணத்தில் உருவானதே வாடா மாலர் நாவலாகும். நல்வாழ்விற்கு அன்பே ஆதாரம் என்ற கருப்பொருளை கொண்டு இந்நாவல் படைக்கப்பட்டுள்ளது. இச்சிறந்த நாவலில் முதன்மை கதைப்பாத்திரமான குழந்தைவேல் இன்றைய இளைஞர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்கிறான் என்பது வெள்ளிடைமலை.

அவ்வகையில் குழந்தைவேல் **பெற்றோரை மதித்துப் போற்றுபவனாக உள்ளான்.** அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பதற்கொப்ப வாழ்க்கையின் எச்சூழ்நிலையிலும் தன் பெற்றோரின் மனம் நோகாமல் நடந்து கொள்கிறான் குழந்தைவேல். சான்றாக, பி.ஏ தேர்வு முடிந்த பிறகு தான் மேலும் எம்.ஏ. படிக்க வேண்டும் எனத் தன் தாயிடம் வேண்டுகிறான். ஆனால், குழந்தைவேலின் தாய் அவன் அவ்வயதில் திருமணம் செய்து கொள்ள வேண்டியது அவசியம் என எடுத்துரைக்கிறார். குழந்தைவேலும் தன் பெற்றோரின் விருப்பத்திற்கு எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்காமல் அனைத்துத் திருமண ஏற்பாடுகளையும் தன் பெற்றோரின் விருப்பப்படியே விட்டுவிடுகிறான். மேலும், சுயத்தொழில் செய்யுமாறு வலியுறுத்திய தன் தந்தையின் சொல்லுக்குச் செவிசாய்த்து அவர் பிரித்துக் கொடுத்த சிமெண்ட் வியாபாரத்தையும் முறையாகக் கவனித்துக் கொள்கிறான் **எனவே, குழந்தைவேலைப் போல் இன்றைய இளைஞர்கள் தங்கள் பெற்றோரின் விருப்பத்திற்கும் ஆலோசனைக்கும் இணங்கி நடப்பதன்வழி சிறப்பான வாழ்க்கை வாழ முடியும்.**

இதுமட்டுமல்லாது, குழந்தைவேல் **நட்பைப் போற்றுபவனாகத்** திகழ்கிறான். உதாரணமாக, தன் பால்ய நண்பனான தானப்பன் சித்தியின் கொடுமை தாங்காது ஊரைவிட்டு ஓடிய பொழுது குழந்தைவேல் அவனின் பிரிவு துன்பத்தால் வாடுகிறான். சில வருடங்கள் கழித்து, தானப்பனிடமிருந்து கிடைத்த கடிதத்தின் மூலம் குழந்தைவேல் அவன் சென்னையில் ஒரு புலால் உணவுக்கடையில் வேலை செய்வதாக அறிகிறான். குழந்தைவேலும் சென்னையில் அமைந்துள்ள ஒரு கல்லூரியில் தன் மேற்கல்வியைத் தொடர்கிறான். அங்குத் தன் நண்பனைத் தேடும் முயற்சியில், குழந்தைவேல் மரக்கறி உண்பவனாக இருந்தாலும் ஒவ்வொரு புலால் உணவுக்கடையிலும் ஏறி இறங்குகிறான். இவ்வளவு பெரிய சென்னையில் முகவரி இல்லாமல் ஒருவனைத் தேடிக் கண்டுபிடிக்க நினைப்பது முட்டாள்தனம் எனக் குழந்தைவேலை அவனது கல்லூரி நண்பர்கள் எள்ளி நகையாடினாலும் தன் தேடும் முயற்சியை ஒருபோதும் கைவிடவில்லை. தனது பால்ய நண்பனைத் தேடிக் கண்டுப்பிடித்தே தீர வேண்டுமெனக் கங்கணம் கட்டுகிறான். **எனவே, தோள் கொடுக்க தோழன் இருந்தால் இவ்வுலகை வெல்லலாம் என்பதற்கொப்ப இன்றைய இளைஞர்கள் குழந்தைவேலைப்போல் நட்பைப் போற்றி வாழ்வதன் மூலம் மேன்மையான சமுதாயத்தை உருவாக்கலாம்.**

தொடர்ந்து, குழந்தைவேல் **கல்வியில் அக்கறை** கொண்டவனாகவும் திகழ்கிறான். எடுத்துக்காட்டாக, குழந்தைவேல் பள்ளிப்படிப்பை முடித்துச் சென்னையிலுள்ள ஒரு கல்லூரியில் தன் <u>மேற்கல்வியைத் தொடர்கிறான்</u>. அங்குக் கருணாகரன் எனும் ஒரு மாணவனுடன் ஒரே விடுதி அறையில் தங்க நேரிடுகிறது. கருணாகரன் புகைப்பிடித்தல், சீட்டாடுதல், ஊரைச் சுற்றி திரிதல் எனப் பலத் தீயப் பழக்கங்களைக் கொண்டிருக்கிறான். குழந்தைவேலுக்கும் அப்பழக்கங்களைக் கற்றுத்தர அவன் முற்பட்டாலும் குழந்தை உடன்படமறுக்கிறான். கூடாநட்பை விடுத்து, தன் பக்கத்து அறையிலுள்ள நல்ல நண்பனான பழனிச்சாமியுடனும் அவனது நண்பர்களுடனும் பழக்கம் கொண்டு <u>நன்மாணாக்கனாகத்</u> திகழ்கிறான். <u>கல்வியைக் கண்ணுங்கருத்துமாகப் பயின்றதால்</u> பி.ஏ தேர்வில் முதல் வகுப்பில் தேறுகிறான். இதனால் கல்லூரி முதல்வரிடமிருந்து பாராட்டுக் கடிதமும் பெறுகிறான். கல்வியை

அதோடு நிறுத்தாமல் முதுகலை படிப்பைத் தொடரவும் விரும்புகிறான். **எனவே, இன்றைய இளைஞர்கள் குழந்தைவேலைபோல் கல்வியில் அக்கறை கொண்டவர்களாக விளங்கினால் வாழ்க்கையில் முன்னேறலாம் என்பது திண்ணம்.**

இதைத்தவிர்த்து, குழந்தைவேல் **பொறுமை குணம்** கொண்டவனாகவும் இந்நாவலில் வலம் வருகிறான். இல்லறவாழ்க்கை குழந்தைவேலுக்குச் சில சிக்கல்களை ஏற்படுத்துகிறது. குழந்தைவேலின் மனைவியான பூங்கொடி ஆணவம், கோபம், பிடிவாதம், பொறுப்பின்மை போன்ற குணங்கள் வாய்த்தவளாக உள்ளாள். உதாரணமாக, பூங்கொடி தனிக்குடித்தனம் வேண்டுமெனப் பிடிவாதம் பிடிக்கிறாள். தன் தாய் பூங்கொடியை அன்புடன் கவனித்துக் கொண்டாலும் அவளுக்கு தன் தாயின் அன்பு புரியவில்லையே என குழந்தைவேல் மன வேதனை அடைந்தாலும் பொறுமை காக்கிறான். அவளின் விருப்பப்படியே இருவரும் தனிக்குடித்தனம் செல்கின்றனர். அத்துடன், தானப்பனின் திருமணத்திற்குப் பிறகு, குழந்தைவேல் தன் நண்பனுக்காக வீட்டில் விருந்து வைக்க விரும்புகிறான். அவன் பலமுறை பூங்கொடியிடம் இதனைப் பற்றி மனமிறங்கி வந்து கேட்டும் அவள் ஒத்துழைக்க மறுக்கிறாள். அதற்கு மாறாக, மனம் புண்படும்படி கடுமையாகப் பேசுகிறாள். ஆனால், குழந்தைவேல் எச்சூழ்நிலையிலும் தன் பொறுமையை இழக்கவில்லை; அவளை வெறுத்து ஒதுக்கவில்லை. இறுதியாக, தன் தந்தைக்கு ஏற்பட்ட துன்பத்திற்குப் பிறகு, பூங்கொடியின் போக்கில் மாற்றம் ஏற்பட்டு வாழ்க்கையில் வசந்தம் வீசுகிறது. **ஆகவே, இன்றைய இளைஞர்கள் குழந்தைவேலைப்போல் இல்லற வாழ்க்கையில் பொறுமையைக் கடைப்பிடித்தால் இல்லறம் நல்லறமாக மாறும்.**

ஆகவே, குடும்பம், நட்பு, கல்வி, தொழில், இல்லறவாழ்க்கை என அனைத்து வகையிலும் ஓர் இளைஞனுக்கு இருக்க வேண்டிய சிறந்த பண்புகளைக் கொண்டவனாகக் குழந்தைவேல் திகழ்வது உள்ளங்கை நெல்லிக்கனி. இதனாலேயே அவனது வாழ்க்கை அதிக துன்பங்களும் போராட்டங்களும் இன்றி அமைதியான நீரோடையாக விளங்கியது. இன்றைய இளைஞர்கள் குழந்தைவேலை நல்லதொரு வழிகாட்டியாகக் கொண்டார்களேயானால் வாழ்க்கையில் சிறந்த நிலையை அடையலாம் என்பது திண்ணம்.

**32. சித்தி செய்த கொடுமை <u>சம்பவங்கள் மூன்றனை</u> விளக்கி எழுதுக. [10 புள்ளி]**

சித்தி, தானப்பனையும் சுடர்விழியையும் குழந்தைகள் எனவும் பாராமல் **அடித்துத் துன்புறுத்துவதை** வழக்கமாகக் கொண்டிருக்கிறாள். அக்குழந்தைகள் செய்யும் சிறு தவறுகளைக்கூட பொறுக்க மாட்டாதவளாய் உள்ளாள். உதாரணமாக, பால் வாங்கி வந்த தானப்பன் அதைக் கைத்தவறி கீழே கொட்டிவிடுகிறான். இதைப் பெருங்குற்றமாகக் கருதும் சித்தி உடனே அருகிலிருந்த இரும்பு இடுக்கியால் தானப்பனின் முகத்தில் அடிக்கிறாள். அதனால் தானப்பனின் முகத்தில் இடப்பக்கத்தில் தழும்பும் வீக்கமும் ஏற்படுகிறது. இதை அறிந்த மீனாட்சி அம்மாளும், கொஞ்சம் இடம் தவறியிருந்தால் தானப்பனின் கண்ணுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்குமே எனச் சித்தியின் ஈவிரக்கமற்ற குணத்தை எண்ணி மனம் கொதிப்படைகிறார். அத்துடன், சுடர்விழிக்கும் இந்நிலை ஏற்படுகிறது. ஒரு சமயம் சுடர்விழி பக்கத்து வீட்டுத் தாயாரம்மா கொடுத்த வடையை வாங்கி உண்டதால் அவளைக் கன்னத்தில் பளார், பளார் என அறைகிறாள். வலியைத் தாங்கிக் கொள்ள முடியாத சுடர்விழி தேம்பி அழுகிறாள். பச்சிளங் குழந்தைக்கு மீனாட்சி அம்மாள் ஆறுதல் கூறி சமாதானப்படுத்துகிறார்.

இதுமட்டுமல்லாது, சித்தி தானப்பனுக்கும் சுடர்விழிக்கும் **முறையான உணவு கொடுக்காமல்** கொடுமை செய்கிறாள். வீட்டில் பிறருக்கு இட்டலி, தோசை என நல்ல உணவுகளைக் கொடுத்து, தானப்பனுக்கும் அவன் தங்கை சுடர்விழிக்கும் தண்ணீரும் சோறும் பழைய மிளகு நீரும் சோறுமாகக் கொடுக்கிறாள். தானும் தன் குழந்தைகளும் உண்ணும் பொழுது எதிரில் நிற்கக் கூடாது எனக் கடிந்து கூறுவதோடு தன் குழந்தைகளுக்கு மட்டும் தின்பண்டங்கள் கொடுக்கிறாள். இதனால், தானப்பனும் சுடர்விழியும் பசியின் கொடுமைக்கு ஆளாகின்றனர். இதன் விளைவாக, ஒரு நாள் தானப்பன் குழந்தைவேலுடன் பள்ளிக்குச் செல்லும் வழியில் பசித்துன்பத்தால் மயங்கி கீழே விழுகிறான். குழந்தைவேல் அங்கு வந்த மற்ற நண்பர்களின் துணையுடன் அவன் முகத்தில் நீர்த்தெளித்து மயக்கத்திலிருந்து மீளச் செய்து தன் வீட்டிற்கு அழைத்துச் செல்கிறான். அங்கே மீனாட்சி அம்மாள் அவனுக்கு இட்டிலியும் காப்பியும் கொடுத்துப் பசியை ஆற்றுகிறார்.

மேலும், தானப்பனையும் சுடர்விழியையும் **வீட்டு வேலைகள் செய்யச் சொல்லி** கொடுமை செய்கிறாள் சித்தி. பண வசதி படைத்திருந்தும் வேலைக்காரர்களை வேலைக்கு அமர்த்தாமல் தானப்பனையும் சுடர்விழியையும் வீட்டு வேலைகள் அனைத்தும் செய்யச் சொல்லி கட்டாயப்படுத்துகிறாள். உதாரணமாக, மனோன்மணியின் பிறந்தநாள் விழாவன்று வீட்டில் உள்ள வேலைகளைத் தானப்பனும் சுடர்விழியுமே கவனிக்கின்றனர். தானப்பன் விருந்தினர்கள் உணவு சாப்பிட பெரிய வாழையிலை கட்டுகளைத் தலையில் சுமந்து வருகிறான். சுடர்விழியோ கிழிந்த, சாம்பலும் கரியும் பட்ட சட்டையை அணிந்து பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவிக்கொண்டு வருகிறாள். இக்காட்சியைப் பார்க்கும் குழந்தைவேல் மிகுந்த வருத்தம் கொள்கிறான். குழந்தைகளை நன்றாக வேலை வாங்கிய சித்தி இதோடு நிற்காமல் தானப்பன் வேலை செய்யவில்லை என அவனது அப்பாவிடம் கோள்மூட்டி கடுஞ்சொற்களால் திட்டுப்பெறவும் வைக்கிறாள்.

**33. குழந்தைவேல் தானப்பன் மீது கொண்டிருந்த நட்பின் ஆழத்தை விளக்கி எழுதுக. [10 புள்ளி]**

குழந்தைவேல் தானப்பன் மீது கொண்டிருந்த நட்பின் ஆழம் **அவன் சித்தியின் கொடுமைகளுக்கு ஆளாகும்போது** நன்கு வெளிப்படுகிறது. உதாரணமாக, தாயை இழந்த தானப்பன் தன் சித்தியின் வருகைக்குப் பிறகு சொல்லொணா துன்பங்களை அனுபவிப்பதைக் கண்டு குழந்தைவேல் மனம் வருந்துவதோடு அதனைக் களையவும் முற்படுகிறான். ஒருநாள், தானப்பன் தன் வீட்டிலேயே ஓர் அறையில் பூட்டிவைக்கப்பட்டுக் காலையிலிருந்து உணவும் தண்ணீரும் கொடுக்கப்படாமல் இருப்பதைச் சுடர்விழி கூறியதாக அவனது தாய் கூறுகிறார். இதைக் கேட்டுக் குழந்தைவேல் அதிர்ச்சியும் வருத்தமும் கொள்கிறான். தன் நண்பனுக்கு ஏற்பட்டிருக்கும் துன்பத்தை அவனால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. உடனே தானப்பனின் வீட்டிற்குச் சென்று அவனை வீட்டுச் சிறையிலிருந்து விடுவித்துத் தங்கள் வீட்டுக்கு அழைத்து வந்துவிடலாமெனத் தன் பெற்றோரை வற்புறுத்துகிறான். குழந்தைவேலின் தந்தை அவனை அமைதிப்படுத்துகிறார். **இச்சம்பவம் குழந்தைவேலின் நட்பின் ஆழத்தைப் பறைசாற்றுகிறது.**

மேலும், **தானப்பன் ஊரைவிட்டுச் சென்னைக்கு ஓடிச் சென்ற பொழுது குழந்தைவேல் எதிர்நோக்கிய பிரிவுத்துன்பம்** அவனது நட்பின் ஆழத்தைப் பிரதிபலிக்கிறது. தானப்பன் காணாமல்போன பின்பு குழந்தைவேலுக்கு அவனைப் பற்றிய ஏக்கம் பற்றிக் கொள்கிறது. ஒன்றாக விளையாடிய இடம், வேப்ப மரத்து அடியில் பேசிய பேச்சுகள், அவன் சொன்ன சிறுகதைகள், தங்கை சுடர்விழி எனக் காணும் ஒவ்வொன்றும் குழந்தைவேலுக்குத் தானப்பனின் நினைவை வரவழைக்கின்றன. ஒருநாள் இரவு, யாரோ வீட்டுக் கதவைத் தட்டுவதைக் கேட்டுக் குழந்தைவேலுவின் தாய் கதவைத் திறக்க, குழந்தைவேல் எட்டிப் பார்க்கிறான்; தானப்பன் போலவே உயரமும் அமைப்பும் உள்ள ஒரு பையனைக் கண்டதும் தன்னையறியாது அவனைத் ‘தானப்பன்’ என்று அழைத்துக் கொண்டே நெருங்குகிறான். அப்பையன் தானப்பன் இல்லை, தேள் கொட்டியதற்காக மருந்து உதவி கேட்டு வந்தவன் என அறிந்ததும் குழந்தைவேல் ஏமாற்றம் அடைகிறான்; குழந்தைவேல் இன்னும் தானப்பனை மறக்காமல் இருப்பதாக அவனது பெற்றோர் பேசிக் கொள்கின்றனர்.

இதுமட்டுமின்று, குழந்தைவேலின் நட்பின் ஆழத்தைத் **தானப்பனைச் சென்னையில் தேடும் பொழுதும்** காணமுடிகிறது. குழந்தைவேல் தன் மேற்கல்வியைச் சென்னையிலுள்ள ஒரு கல்லூரியில் தொடர்ந்த வேளையில் ஒரு புலால் உணவுக்கடையில் வேலை செய்வதாக அறிந்த தன் நண்பன் தானப்பனைத் தேடிக் கண்டுபிடிக்க ஒவ்வொரு புலால் உணவகமும் ஏறி இறங்குகிறான். முகவரி இல்லாமல் தானப்பனைத் தேடும் குழந்தைவேலின் முயற்சியை அவனது கல்லூரி நண்பர்கள் எள்ளி நகையாடுகின்றனர்; வேடிக்கையாக ஏமாற்றுகின்றனர். உதாரணமாக, கல்லூரிப் பலகையில் குழந்தைவேலின் பெயருக்குக் கடிதம் வந்திருப்பதாகவும் அனுப்பும் முகவரியில் தானப்பன் என்று குறித்திருந்தது எனச் சொல்லி அவனை அலைய விடுகிறான் ஒருவன். மற்றொரு நாளிலோ ‘தானப்பன் மிலிட்டரி ஓட்டல்’ என்று ஓர் உணவுக்கடை இருப்பதாகச் சொல்லி குழந்தைவேலைத் திருவொற்றியூருக்குப் போய் ஏமாற்றம் காணும்படி வேடிக்கை காட்டுகின்றனர். இருப்பினும், குழந்தைவேல் தன் முயற்சியில் பின்வாங்காமல் உறுதியாக இருக்கிறான். கல்லூரியில் சேர்ந்த நாள் முதல் தொடங்கிய தேடுதல் முயற்சி அவன் பி.ஏ. படிப்பை முடிக்கும்வரை சலிக்காது தொடர்ந்து இறுதியில் வெற்றிப் பெறுகிறது. **இதன் மூலம், குழந்தைவேல் தானப்பன் மீது எத்துணை ஆழமான நட்பைக் கொண்டிருக்கிறான் என்பதை அறிய முடிகிறது.**

**34. வாடா மலர் நாவலின் பெண் கதைப்பாத்திரங்கள் மூலம் நாம் பெறும் படிப்பினைகளை விளக்கி எழுதுக. [20 புள்ளி]**

கற்பனைக் குதிரைக்குக் கடிவாளமிட்டு நாவல் எனும் தேரோட்டுவதில் வல்லவர் டாக்டர் மு. வரதராசன். இவரது பேனாமுனை செதுக்கிய சிற்பமே வாடா மலர் நாவல். நல்வாழ்விற்கு அன்பே ஆதாரம் என்பதே இந்நாவலின் கருப்பொருளாகும். சமுதாயம் செம்மையுற வேண்டும் என்ற நன்நோக்கோடு உருவாக்கம் கண்டுள்ள இந்நாவலில் உள்ள பெண் கதைப்பாத்திரங்களின் மூலம் நாம் பல படிப்பினைகளைப் பெறலாம்.

அவ்வகையில், பெண்கள் **பொறுப்புணர்வு மிக்கவர்களாக இருத்தல் அவசியம்** என்ற படிப்பினையை மீனாட்சி அம்மாளின் மூலம் பெறலாம். தாயாகவும் மனைவியாகவும் மாமியாராகவும் பல்வேறு சூழ்நிலைகளில் தனது பொறுப்பைச் சரியாக மேற்கொள்கிறார். எடுத்துக்காட்டாக, குழந்தைவேல் சிறுவயதில் சடுகுடு, புல்லடித்தல், பட்டம் விடுதல் என விளையாட்டில் மும்முரமாய் இருந்து சாப்பிடாமல் இருப்பதை அந்தத் தாயுள்ளம் பொறுக்க மாட்டாதவராய், உரத்த குரலில் கூப்பிட்டுச் சோறு உண்ணச் செய்கிறார். இதுமட்டுமல்லாது, தன் கணவருக்கும் முறையான உணவு கிடைக்க வேண்டுமென்பதில் முழு அக்கறையாக உள்ளார். குழந்தை பிரசவித்த சுடர்விழியைக் கவனித்துக் கொள்ள ஊருக்குச் சென்றிருந்த வேளையில் மருமகள் பூங்கொடியும் தன் தாய் வீட்டிற்குச் சென்று விட்ட நிலையில் வீட்டில் சமைக்க ஆளில்லாத காரணத்தால் கணவர் ஓட்டலில் சாப்பிடும் செய்தியறிந்து மிகுந்த மனவருத்தம் கொள்கிறார். வெளி சாப்பாடு கணவருக்கு ஆகாதே என எண்ணி உடனே தன்னை வீட்டிற்கு அழைத்துச் செல்லும்படி குழந்தைவேலிடம் வேண்டுகிறார். **எனவே, பெண்கள் பொறுப்புணர்வுடன் செயல்பட்டால் குடும்பம் மேன்மையுறும் என்ற படிப்பினையை மீனாட்சி அம்மாள் கதைப்பாத்திரம் உணர்த்துகிறது.**

இதைத்தவிர்த்து, **பெண்கள் கணவரின் கொள்கைகளைப் போற்ற வேண்டும்** என்ற படிப்பினையைச் சுடர்விழியின் மூலம் அறியலாம். சுடர்விழியின் கணவரான முருகய்யா எளிய வாழ்க்கை வாழும் பண்புடையவர். தமிழ் ஆசானான அவர் உடுத்தும் உடை, உண்ணும் உணவு என அனைத்திலும் எளிமையைப் போற்றுகிறார்; ஆடம்பரத்தை வெறுக்கிறார். கணவன் எவ்வழியோ தானும் அவ்வழி எனச் சுடர்விழியும் கணவரைப் போன்று எளிய வாழ்க்கை வாழத் தொடங்குகிறாள்; தேவைகளைக் குறைத்துக் கொள்கிறாள். சான்றாக, தனது அண்ணன் தானப்பனின் திருமணத்தில்கூட மற்றவர்களைப் போல் பட்டுச்சேலையும், தங்க வைர நகைகள் அணியாமல் மிகச் சாதாரண சேலை அணிந்து எளிய கோலத்தில் வலம் வருகிறாள். மேலும், பூக்களைப் பறிக்கக் கூடாது என்ற தன் கணவரின் கொள்கைக்கு ஏற்ப குழந்தைவேலின் தாய் தனக்குப் பூச்சூடுவதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறாள். கணவரின் விருப்பமே தன்னுடைய விருப்பம் எனக் குழந்தைவேலின் தாயிடம் கூறுகிறாள். **எனவே, மனமொத்த தம்பதிகளாக இல்லறத்தை நல்லறமாக வாழ பெண்கள் சுடர்விழியைப் போல் கணவரின் கொள்கையைப் போற்றி வாழ வேண்டும்.**

மேலும், **பெண்கள் பிடிவாத குணத்தை விட்டொழிக்க வேண்டும்** என்ற படிப்பினையைப் பூங்கொடியின் கதைப்பாத்திரம் உணத்துகிறது. உதாரணமாக, சுடர்விழி குழந்தை பெற்றெடுக்கும் நாள் நெருங்கிவிட்டதால் குழந்தைவேலின் தாய் அவளைக் கவனித்துக் கொள்ள ஊருக்குச் சென்றுவிடுகிறார். அவ்வேளையில், பூங்கொடி தன் தாய்க்குக் கடிதம் எழுதி அனுப்பி அவளை ஊருக்கு அழைக்கும்படி செய்துவிடுகிறாள். ஆனால், வீட்டில் தாய் இல்லாத நிலையில் அவளும் ஊருக்குச் சென்றுவிட்டால் வீட்டில் சமைக்க ஆளில்லாமல் போகுமெனக் குழந்தைவேல் எடுத்துக் கூறியது

செவிடம் காதில் ஊதிய சங்காகிறது. தாய் வீட்டிற்குச் சென்றே ஆக வேண்டுமெனக் குரங்குப்பிடியாய்ப் பூங்கொடி ஊருக்குப் புறப்பட்ட பிறகு, குழந்தைவேலும் அவனது தந்தையும் உணவகத்திலிருந்து தருவித்த உணவையும் ஞாயிற்றுகிழமைகளில் தானப்பனின் வீட்டிலும் சாப்பிடும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். **எனவே, பெண்கள் பிடிவாதக்குணத்தை விட்டொழித்து விட்டுக்கொடுத்து வாழ்ந்தால் குடும்பத்தில் தேவையில்லாத சிக்கல்களைக் களையலாம்.**

இதுமட்டுமல்லாது, **பெண்கள் அன்புநெறியைப் போற்றி வாழ வேண்டும்** என்ற படிப்பினையைச் சித்தி கதைப்பாத்திரம் எடுத்துரைக்கிறது. தானப்பனின் தந்தையை மறுமணம் செய்து கொண்ட அவள் முதல் தாரத்துப் பிள்ளைகளான தானப்பனையும் சுடர்விழியையும் ஈவிரக்கமில்லாமல் சொல்லொணா கொடுமைகளைக்கு ஆட்படுத்துகிறாள். பச்சிளங் குழந்தைகள் என்றும் பாராமால் பாத்திரம் கழுவுதல், கடைக்குச் சென்று பொருள்கள் வாங்குதல், எடுபிடி வேலை செய்தல் என சம்பளமில்லாத வேலைக்காரர்களைப் போல் வேலை வாங்கிறாள். முறையான உணவு கொடுக்காமல் அப்பிள்ளைகளைப் பசிக்கொடுமைக்கு ஆளாக்குகிறாள். வீட்டில் பிறருக்கு இட்டலி, தோசை என நல்ல உணவுகளைக் கொடுத்து, தானப்பனுக்கும் அவன் தங்கை சுடர்விழிக்கும் தண்ணீரும் சோறும் பழைய மிளகு நீரும் சோறுமாகக் கொடுக்கிறாள். சித்தியின் கொடுமைகளைத் தாளாது தானப்பன் ஊரைவிட்டு ஓடவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகிறான். தானப்பனின் வாழ்க்கை திசைமாறிப் போனதற்கு அன்புநெறி இல்லாத சித்தியே முழுமுதற்காரணமாகிறாள். சித்தி மட்டும் அன்பும் அரவணைப்பும் காட்டியிருந்தால் தானப்பன் சமுதாயம் போற்றும் உன்னத மனிதனாக மாறியிருப்பான். **எனவே, பெண்கள் அன்புநெறியைப் போற்றுவதன் மூலம் பரிவுமிக்க சமுதாயத்தை உருவாக்கலாம்**.

இறுதியாக, **பெண்கள் பிற ஆண்களோடு பழகுவதில் கட்டுப்பாடு அவசியம்** என்ற படிப்பினையைக் கனகத்தின் மூலம் நாம் கண்டறியலாம். எடுத்துக்காட்டாக, திருமண விருந்தில் குழந்தைவேல் தனக்கு நெருங்கிய நண்பன் எனத் தானப்பன் அறிமுகப்படுத்திய பொழுது சற்றும் கூச்சப்படாமல் அவனிடம் நிறைய பேசுகிறாள். இதைத் தவிர்த்து, தானப்பன் வீட்டில் இல்லாத நேரத்தில் வச்சிரநாதன் என்பவனோடு நெருக்கமாகப் பேசிப் பழகுகிறாள்; கவர்ச்சியாக உடையுடுத்தி அவனோடு வெளியே செல்கிறாள். கனகத்தின் இத்தகைய போக்கைப் பற்றி வீட்டுச் சமையல்காரனான ஏகப்பனும் குழந்தைவேலிடம் முறையிடுகிறான். மற்றொரு சூழலில் தானப்பன் வீட்டில் இல்லை எனத் தெரிந்ததும் திரும்பிப் போக குழந்தைவேல் முயன்ற பொழுது அவனை உள்ளே அழைத்துத் தன்னுடன் பேசிக் கொண்டிருக்கும்படி நெருங்கி வற்புறுத்துகிறாள்; குழந்தைவேல் அவளது செயலை விரும்பாமல் உடனே அங்கிருந்து கிளம்புகிறான். கனகத்தின் இத்தகைய குணம்தான் அவளது இல்லற வாழ்க்கையைப் பாழாக்குகிறது. கனகத்திற்கும் தானப்பனுக்கும் மணமுறிவு உண்டாகிறது. **எனவே, இல்லற வாழ்க்கையில் தேவையற்ற சந்தேகங்களையும் சிக்கல்களையும் நீக்க பெண்கள் பிற ஆண்களுடன் பழகுவதில் கட்டுப்பாடு கொள்ள வேண்டும். ஒழுக்கத்தைப் போற்றும் பெண்களே குடும்ப மேன்மைக்கும் சமுதாய வளப்பத்திற்கும் பங்காற்ற முடியும்.**

ஆகவே, டாக்டர் மு.வரதராசன் அவர்கள், சமுதாய மேன்மைக்கு வழிவகுக்கும் வண்ணம் பலதரப்பட்ட பெண் கதைப்பாத்திரங்களின் மூலம் நமக்குப் பல படிப்பினைகளை வழங்கியுள்ளது வெள்ளிடைமலை. இன்றைய பெண்கள் இவற்றை உணர்ந்து தங்கள் வாழ்க்கைக்குப் பற்றுக்கோடாகக் கொள்வது மிக அவசியமாகும்.

# வெற்றி நிச்சயம்...
# சாதனை உங்கள் கைகளிலே...

